நவீன டிசைன்களில் Bombay சேலைகள், சுடிதார்கள், ஆண் பெண்களுக்குரிய நவநாகரீக உடைகள் யாவற்றையும் விசேட விலைக் கழிவில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.
அனைத்து வைபவங்களிற்கும் தேவையான தரமான 22ct தங்க நகைகளை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள அனைவரும் நாடும் நகை மாளிகை
Thinesh
Jewellers & Textiles
276 Lewisham High Street, Lewisham, London SE13 6JZ | Tel : 020 8613 9569
வாகன தரிப்பிட வசதிகளும் உண்டு.

BILINGUAL FORTNIGHTLY

ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 09 ♦ ISSUE - 182 ♦ FRIDAY 23 NOVEMBER 2012

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லயைா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
- Personal injury (Neck,Back & Shoulder Pain)
- Replacement Vehicle (Terms & Conditions Apply)
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
NO WIN NO FEE
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM

பூவைக்கும் பூவே! கொஞ்சம் பொறுத்திடம்மா
மாவீரர் கனவு விரைவில் நனவாகும்

எம் தாயக உறவுகளை திருமண பந்தத்தில் இணைக்கும் தாயகத்திலிருந்து ஓர் உறவுத் தளம்.
Tel.No 0208 144 7632
Email : support@realmatrimony.com
Real Matrimony.com

EXPRESS VISA SERVICES T: 020 8866 3311 - E: info@flyplaces.co.uk
Flyplaces
Worldwide Travel & Tours
COLOMBO from £169+taxes
CHENNAI from £179+taxes
TIRUCHY from £269+taxes
SINGAPORE from £249+taxes
TORONTO from £189+taxes
PRICE MATCH GUARANTEE
BRITISH AIRWAYS Preferred Partner
We accept all major debit & credit cards
FOR BOOKING CALL US ON: 020 8866 3311
SPEAK TO OUR FRIENDLY TAMIL TRAVEL EXPERTS
Note: All fares mention are low season, excluding taxes/terms and condition apply.

11+ tutors
Qualified and experienced teachers
Subjects covered: English, Maths, Verbal Reasoning, Non verval Reasoning
Levels: Key stage 1, Key stage 2
★ Half price on first month's tuition fee ★
Call 0746 638 9097
60 Torrington Way, Morden, Surrey. SM4 5QA

AAI MONEY TRANSFER UK
227, Preston Road, Wembley, HA98NF
இலங்கை, இந்தியா, ஐரோப்பா மற்றும் கனடா போன்ற அனைத்து நாடுகளிற்குமான துரித கதியிலான பணமாற்று சேவையை பெற்றுக் கொள்வதற்கு நாடவேண்டிய ஒரே இடம்.
வீட்டிலிருந்து கொண்டே உங்களது பணத்தை இலகுவாக உற்றார் உறவினருக்கு அனுப்பி வைக்கும் வசதியும் உண்டு
விபரங்களுக்கு அழையுங்கள்
Tel: 07875 841 969
020 8904 9732
020 8904 4545
Authorised Agents For Ria World wide Money Transfer
email: aa1moneytransferuk@hotmail.co.uk

சென்னையிலிருந்து UK விசா
- தொழிலாளர் விசா
- தங்கியிருக்கும் விசா
- மாணவர் விசா
- சுற்றுலா விசா
இந்தியாவிலிருந்து கொண்டு UK விசா செய்து தரப்படும்
UK Immigration Specialist
Poul & Minnaa 044 4261 3698
New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers
Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்
Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors
020 8215 1205
இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.
Paul John & Co. Solicitors
115a, The Grove, Stratford, E15 1EN
website - www.pauljohnandco.co.uk

குழந்தைப் பாக்கியம் கிடைக்காதோர் வாழ்க்கைக்கு ஒளியூட்டுங்கள்!
நீங்கள் 35 வயதுக்குள் இருந்தால் கருமுட்டை தானம் செய்து அதற்கீடாக '£750'ஐ அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளுங்கள்
குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HARLEY STREET FERTILITY CLINIC
HSFC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
43 Devonshire Street, London, W1G 7AL
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

United College முதன்மை குடியுரிமை பெறும் பரீட்சைகள்

Our services:

- ESOL with citizenship
- Point Base Test
- Spouse Visa Test
- Multilingual Staff

You Pay Only Once,
We Train You until You Pass

C1, B1 & B2 Test

பிரித்தானியா பற்றிய விடயங்களை ESOL பயிற்சி மூலமும் குடியுரிமை வகுப்புக்கள் மூலமும் அதியுச்ச பயிற்சி வழங்குகின்றோம்.

சனி மற்றும் ஞாயிறுகளிலும் வகுப்புக்கள் உண்டு.

நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்- மேலதிக கட்டணம் இல்லை

உங்கள் பரீட்சைக்கு தயார் படுத்தும் வகுப்புகளுக்கு

£ 150 .00 மட்டுமே
* Including Everything

Certificate only in six days

இங்கே சனி 10.00 மணிக்கு ESOL வகுப்புக்கள் உண்டு

Head Office - Croydon
14 Lombard Business Park, 2 Purley Way,
Croydon CR0 3JP.
Tel: 0208 1509 953 | 0753 8933 261

West London
38A, The Broadway, Southall, UB1 21PT
Tel: 0207 998 4867
Mob: 0741 5882 072

பிரியமானவர்களே...
"உங்கள் துக்கம் சந்தோசமாய் மாறும்"

இந்த தேசத்தில் உன் உள்ளம் எதை குறித்து கலங்குகிறது?

- கணவனின் குடி பழக்கத்தினால் நோகடிக்கப்படுகிறாயா?
- குழந்தையின் உடல் உள நிலையை குறித்து கலங்குகிறாயா?
- மரணத்திற்கேதுவான நோயா?
- கடன் தொல்லையா?
- பில்லி சூனியமா?
- பிள்ளைகளை குறித்து பாரமா?
- மன அழுத்தமா?
- கணவன் மனைவிக்கிடையில் பிரச்சனையா?
- திருமணமாகி குழந்தைகள் இல்லை என்று கலங்குகிறாயா?

அருள்நாதர் இயேசு சொல்கிறார்:
"வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே என்னிடத்தில் (இயேசு) எல்லோரும் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."
வாருங்கள் ஜெபிப்போம் இயேசுவின் நாமத்தில் ஜெயம் பெறுவோம்.

ஞாயிறு ஆராதனை நடை பெறும் இடம்:
19-21 Bellingham Estate, Bellingham,
Catford, Lewisham. SE6 3BX
நேரம் 2. 30 pm
[Near **Bellingham station**]
[Bus Stop **Catford Bus Garage**]
[**Bus route no**: 47,54,136, 171 ,199, 208, 320]

தொடர்புகளுக்கு: **நல்ல சமாரியன் தேவ சபை**
Bro. Edmond
Mob: 07877 977 086 Tel: 020 8691 2705

REFRIGERATION - AIR CONDITION - SHOP FITTING
UK COOL
AND SHOPFITTING Ltd.

SHELVING
REFRIGERATION

168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk

MAXKOLD
arneg

UK COOL & SHOP FITTING LTD

REFRIGERATION
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

SHOP FITTING
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

BUILDING WORK
Roofing
Extension

MOVING & DEVILERY

7 Days 24 HRS services & Repair

URGENT REPAIR?
CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY

UK COOL & SHOP FITTING LTD

Festival Season

SPECIAL BOX OFFER FOR INDIA
SEND A GIFT TO YOUR LOVED ONES HOME

Klick Couriers.com
Your Friendly Transporter !

10KG BOX FOR THE PRICE OF 5KG
OFFER RATE £42/-

5KG BOX FOR THE PRICE OF 3KG
OFFER RATE £25/-

20KG BOX FOR THE PRICE OF 10KG
OFFER RATE £70/-

PLEASE CALL CUSTOMER SERVICES ON
0208 099 2891
TO GET THIS OFFER

BETHANY CHURCHES JOINTLY PRESENTS

கிறிஸ்மஸ் கீத ஆராதனை
CHRISTMAS CAROL SERVICE
නත්තල් ගීත නමස්කාරය

Saturday 01 December 2012 - 11:00am

MILAN PALACE (MONSOON)
BANQUETING SUITE
Dominion Road, Southall.
Middlesx, UB2 4BG
Car Park:
DOMINION CAR PARK
(PAY & DISPLAY)

For more information:
079 5073 5417 - 078 3726 0678
078 7266 5157 - 079 0424 8108
079 6057 0704

Entrance Free

Public Transport:
Bus From
Southall Station
(105/120/195/482/E5/H32)

Ravina Graphics 078 0394 5050

BfM BETHANY CHURCHES
The family United

Bethany House
12, Park Avenue, Southall. UB1 3AJ
P.O. Box 294, Southall, UB2 5EE Tel: 020 8571 2156
E-mail: info@bethanychurches.org
Web: www.bethanychurches.org

தமிழ்ச்செல்வன்...!

ஆசிரியருக்கு

பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் இழப்பை **ஒரு பேப்பர்** ல் தனபாலசிங்கம் அவர்கள் நினைவூட்டிய ஆக்கம், தமிழர்களின் இதயங்களைத் தொட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. 40 வயதுக்குள் தாகக் கனவை அடைந்து விட அயராது உழைத்ததோடு, தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அந்த இலட்சியத்துக்காக தியாகம் செய்த அம் மாவீரனை ஈழத்தமிழ் மக்கள் இழந்தாலும், மலர்ந்த அப்புன்சிரிப்பு என்றும் மறையாது.

- உமா மகாலிங்கம்

கலர் காட்டுகினம்

மாவீரர்நாளை நடாத்த வேண்டும் என்று ஆளுக்காள் அடிபடுகிற ஆட்கள் வேறை ஒரு அலுவலும் செய்யிறதாய் தெரியேல்லை. பெட்டையள் நிற்கிற இடத்திலை நிண்டு கலர் காட்டுற காவாலியள் மாதிரி, ஆட்கள் எங்கை கூடுவினம் என்று பார்த்து அங்கை நிக்கிறதுக்கும் இவையள் அவசரப்படுகினமே தவிர வேறொண்டையும் காணேல்லை.

- பாக்கியநாதன்

யாரின் நிகழ்ச்சி நிரல்

அண்மையில் லண்டனில் நடைபெற்ற உலகத் தமிழர் மாநாடு நடந்தது. அதில் பல குழப்பங்கள், பிரச்சினைகள், கருணாநிதியின் மகன் ஸ்டாலின், டி.ஆர்.பாலு இவர்களை அழைத்ததன் நோக்கம் என்ன? அவர்களின் கண்கள் முன்பே இந்தியாவின் உதவியுடன் இனப்படுகொலை நடந்த போது தங்கள் பதவி சுகத்திற்காக மத்திய சோனியா ஆட்சிக்கு உறுதுணையாக நின்று மௌனம் காத்தவர்கள். அப்படி என்றால் சிதம்பரம், கே.பி., கருணா, டக்கிளஸ் எல்லோரையும் அழைத்து இருக்கலாம். இந்த மாநாட்டில் ஏன் தேசிய கொடி ஏற்றவில்லை. எமது தேசியக் கொடி ஏற்றத் தைரியம் இல்லாதவர்கள், எம்மை அழித்தவர்களின் நிகழ்ச்சிநிரலில் இயக்குவது எதற்காக? வேண்டாம் முகமூடிகள்.

- ந.அகிலன்

ஒற்றுமை வேண்டும்

மூன்று மாவீரர் நாள் 2012 லண்டனில் நடக்கிறது. ஒன்று எக்செல் மற்றையது முருகதாஸ் திடல், மூன்றாவது மிச்சம் வூட்லாண்ட் வே. முதல் இரண்டும் நடத்துபவர்கள் யார் என்று போன வருடம் தெரிந்தது. மூன்றாவதாக நடத்துபவர்கள் பழைய தமிழ் மன்றத்தினர் என அறிகிறோம். எது எப்படியாயினும் அடுத்த வருட மாவீரர் நாள் ஒற்றுமையாக ஒரு இடத்தில் நடத்த வேண்டும். தமிழரின் தாகம், தமிழீழ தாயகம் !

- சு.புண்ணியலிங்கம்

காலம் கடந்த வருத்தம்

யூ.கே. பாராளுமன்ற சதுக்கத்தில் முற்றுகைப் போராட்டம், உண்ணாவிரதப் போராட்டம் என்று எல்லா விதமான போராட்டங்களையும் லட்சக்கணக்கான தமிழர் உணர்வோடு நடத்தினர். அப்போது இலங்கைக்கு ஆயுத விற்பனை செய்து கொண்டு இருந்தது பிரித்தானியா. அன்றைய ஆளும் கட்சி தமிழ் மக்களின் இனப்படுகொலைக்கு எதிரான போராட்டங்களை திசை திருப்பி, போராட்ட குணங்களைக் குறைத்து இன உணர்வு இல்லாத லண்டன் தமிழ் பூர்சுவா அமைப்புகள், இடைத்தரகர்கள் மூலம் செய்தனர்.

இன்று இலங்கையில் யுத்தத்தை முடியாமைக்கு டேவிட் மில்லிபான்ட் வருத்தம் தெரிவிக்கிறார். இது காலம் கடந்த வருத்தம். புலிகளின் அழிவிற்கு தான் கண்ணீர் சிந்தவில்லை. என்றார் அன்று வலியின் கொடுமை எமக்குத்தான் தெரியும். புலிகள் தான் தமிழர். தமிழர் தான் புலிகள்.

- நடராசா

குற்றவாளி நீயே !

ஐ.நா. அறிக்கைகளில் பெரும்பகுதி, மையிடப்பட்ட பின்னும் எஞ்சிக்கிடக்கும் சொற்கள் "குற்றவாளி நீயே" என்று ஐ.நா. நோக்கியே தமது சுட்டு விரல்களைப் பலமாக நீட்டுகின்றன. வேறு வழியின்றி, கண்ணகி முன் தலைகுனிந்த பாண்டிய மன்னனைப் போல, பான் கீ மூனும் 'யானே கள்வன் "என்று உண்மையை முதன் முறையாக ஒத்துக் கொண்டிருக்கிறார்.

தவறை காலங்கடந்து உணர்ந்து கொள்வதால், முள்ளி வாய்க்காலில் மரித்துப் போனவர்களின் உயிர்களோ, சிதைந்துபோன ஆயிரம் ஆயிரம் குடும்பங்களின் ஆனந்த மயமான வாழ்வோ என்றும் திரும்பப் போவதில்லை.

ஆனாலும் ஐ.நாவும், போரின் பிரதான குற்றவாளிகளும் தமக்குரிய தண்டனைகளை அனுபவிப்பது இனிமேல், வேறொரு நாட்டில் இன்னொரு முள்ளிவாய்க்காலைத் தோற்றுவிக்காதிருக்க வழிவகுக்கும்.

- விநாசித்தம்பி

வாழ்க்கையோடு விளையாடாதீர்கள்!

ஆண்டுகள் இத்தனை கடந்தும் ஆறாத நினைவுகளால் வெந்து கொண்டிருக்கும் உள்ளங்களில் வேல்பாய்ச்சும் விகடனின் வேலையை நினைத்தால் மிகுந்த வேதனையாய் இருக்கிறது. பெண்போராளிகள் இந்த விகடனுக்கு அப்படியென்ன தீங்கிழைத்தார்கள் என்று விகடன் இப்படி பெண்களின் வாழ்க்கையில் விளையாடத் துடிக்கிறது? என்பதுதான் எங்களுடைய கேள்வி.

- கிருஸ்ணா

என்ன ஐயா காட்டுன் போடுகிறியள்?

பிரித்தானிய தமிழர் பேரவை ஒரு மாநாட்டை நடாத்தினார்கள். அதற்கு பல்வேறு அரசியல் கட்சிகளிலிருந்தும் பிரதிநிதிகளை அழைத்திருக்கிறார்கள். அதற்காக வந்த எல்லாக் கட்சிகளின் நடவடிக்கைககளை அவர்கள் ஆதரிக்கிறார்கள் என்று ஏன் வியாக்கியானம் கொடுக்கிறார்கள்? தாங்களும் செய்யாங்கள் செய்யிறவனையும் விடாங்கள்.

- கலையரசி

பரிதியின் தன்னலமற்ற சேவை

கொல்லப்பட்ட தளபதி பரிதி அவர்கள் தன்னலமற்ற சேவை புரிந்தவர். துலைமை தனக்கு வழங்கிய பணியை துணிகரமாகவும் பற்றுறுதியுடனும் செய்தவர். அவருடைய இடத்தை நிரப்பக் கூடிய ஆற்றல் உள்ளவர்கள் முன்வந்து இப்பணியினைச் பொறுப்பெடுக்க வேண்டும். அவ்வாறு முன் வருபவருக்கு மக்கள் பாதுகாப்பையும் முழு ஆதரவினையும் வழங்க வேண்டும்.

- மகேந்திரன்

ஒரு பேப்பர் தொடர்பான உங்கள் கருத்துக்களுக்கு.....
Tel : 020 7043 4314
www.facebook.com/orupaper
Email: info@orupaper.com

மாவீரருக்கான உண்மையான அஞ்சலி

மாவீரர் நினைவு தினம் அண்மித்துள்ள நிலையில் இந்நிகழ்வு பற்றி எனது எண்ணங்களை பகிர்ந்து கொள்வது பொருத்தமாக இருக்குமென எண்ணுகின்றேன். சென்ற வருடம் முதல் பிரித்தானியாவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் மாவீரர் தின நிகழ்வுகள் இரு பிரிவினரால் வெவ்வேறு இடங்களில் நடத்தப்படுவது எல்லோரும் அறிந்ததே. இதே நிலையில் தான் இந்த வருடமும் தொடர்கின்றது. இரு பகுதியினரும் ஒற்றுமையாக செய்வதற்கு முயற்சித்ததாகவும் ஆனால் மற்ற பகுதியினர் ஒத்துழைக்கவில்லை என விளக்கம் தருகின்றனர். ஆனால் இரு பகுதியினரும் ஒன்று படுவதற்கு தடையாக உள்ள காரணங்களை எவருமே வெளிப்படையாக சொல்ல முடியாதவையாகவே எண்ணத் தோன்றுகின்றது.

அடுத்ததாக முள்ளிவாய்க்கால் முடிவிற்கு பின்னர் புலம் பெயர் நாடுகளில் உள்ள விடுதலைப்புலிகளின் ஆதரவு தளத்தினை ஆதிக்கம் செலுத்துவதிலும் போட்டி நிகழ்வதாக தெரிகின்றது. இந்நிலையில் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடு கடந்த அரசாங்கமோ உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவான தமிழர்களை ஒன்று படுத்த முடியாமல் ஒரு பகுதியினரோடு சேர்ந்து இயங்குகின்றனர்கள். இந்நிலையில் இவர்களால் தமிழீழப் போராட்டத்திற்கு தலைமை தாங்க முடியுமா என்பது கேள்விக் குறியாகிறது.

இரு வருடங்களுக்கு முன்னர் மாவீரர் நினைவு தினத்தின் போது ஒரு பேப்பரில் இலங்கைக்கு வெளியே மாவீரர்களுக்கு நிரந்தரமான நினைவுச் சின்னமொன்று அமைப்பது பற்றி ஆலோசிக்க வேண்டும் என்று எழுதியிருந்தேன். ஆனால் இது வரை எவருமே இதைப்பற்றி அலட்டிக் கொண்டதாக தெரியவில்லை. அதேசமயம் மாவீரர் தினத்தை நடத்துவதில் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழ் ஈழத்தில் மாவீரரை இழந்த குடும்பத்தினர், அவயங்களை இழந்த போராளிகள் முன்னாள் போராளிகள் என்போர் பொருளாதார ரீதியில் அல்லல் படுவதாக அறிகின்றோம். இவர்களுக்கு புலம்பெயர் நாடுகளில் வாழ்பவர்கள் தமது உறவினர், நண்பர்கள் மூலம் தலா ஒரு குடும்பம் என்ற வகையில் உதவ முன் வந்தால், இவர்களது கஸ்டங்களை மிகக் குறுகிய காலத்தில் நிவர்த்தி செய்யமுடியும்.

முள்ளிவாய்க்காலில் போராட்டம் முடிந்து மூன்று வருடங்கள் முடிவடைந்து விட்டன. ஆனால் எமது உரிமைப் போராட்டத்திற்கான செயற்பாடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஓய்ந்த நிலையிலேயே இடம்பெறுகின்றன. இவை தொடர்ச்சியாகவும், ஒன்றிணைந்ததாகவும், மக்களை ஒன்று திரட்டியும் தொடரப்பட வேண்டும்.

மாவீரர் தினத்தை ஒன்றாக நடத்துவதும் அல்லல்படும் போராளிக் குடும்பங்களுக்கும், முன்னாள் போராளிகளுக்கும் உதவுவதும், உரிமைப்போராட்டத்தை காத்திரமாக முன்னெடுப்பதுமே மாவீரருக்கான உண்மையான அஞ்சலியாகும்.

ப.பத்மநாதன் - வெம்பிளி.



TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400

Head Office: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow TW4 6JQ
0207 099 2400

➔ESOL with Citizenship
▪ British Passport/ Naturalisation
▪ Indefinite Leave to Remain

➔International ESOL Diploma (A1,A2,B1,B2,C1,C2)
▪ Student Visa / Extension Test
▪ Spouse Visa / Extension Test
▪ Work Permit / Extension Test

▪ Courses from £200
▪ Successfully trained over 35,000 students
▪ Certificates within 20 days
▪ Multilingual staff
▪ City & Guilds approved centre

National Centres

BIRMINGHAM
7 Washington Street
Birmingham
B1 1JR
01216339919

SHEFFIELD
Sorby House
42 Spital Hill, Sheffield
S4 7LG
01143034303

LEICESTER
Imperial House
St Nicholas Circle, Leicester
LE1 4LF
01163260248

LUTON
169 A, Dunstable Road
Luton.
Beds – LU1 1BW
01582723123

SLOUGH
18-24 Stoke Road
Slough, Berkshire
SL2 5AG
01753722056

NEWCASTLE
51-52 Victoria Avenue
Whitley Bay,Tyne & Wear
Newcastle Upon Tyne – NE26 2BA
01912525265

FREE INITIAL ASSESMENT

London Centres: Hounslow, Wembley, Kenton, Whitechapel, Camden, Holloway.

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, NOVEMBER 23, 2012, ISSUE 182

விடுதலை அரசியலின் பின்நோக்கிய நகர்வு

முள்ளிவாய்க்காலுக்கு பிந்திய காலத்தில்,ஈழத்தமிழ் மக்கள் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்த புலம்பெயர் மக்களின் அரசியல் பலம், இங்குள்ள அரசியல் அமைப்புகளாலும், குழுக்களாலும் சிதறடிக்கக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் பலருக்கும் எழுந்துள்ளது. குழு மோதல்களும்,குறுகிய நலன் சார்ந்த பார்வையும் விடுதலை நோக்கிய பயணத்தை திசை திருப்பிவிடும் என்பதனால் இன்றைய நிலையையிட்டு அச்சப்படுவதில் நியாயம் இருக்கிறது.

அனாமதேய இணையத்தளங்கள், மின்னஞ்சல்கள் வாயிலாக நடைபெற்று வந்த தனி நபர் மற்றும் குழுக்களுக்கிடையிலான தாக்குதல்கள், வன்முறையாக மாறி, இப்போது ஒரு செயற்பாட்டாளர் கொல்லப்படுமளவிற்கு நிலமை மோசமடைந்துள்ளது. அண்மைக்காலத்தில் நடாத்தப்பட்ட தாக்குதல்கள் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு மீது குறி வைத்தே நடாத்தப்பட்டுள்ளன. இவற்றை ஏதேச்சையான செயற்பாடுகளாக கருத முடியாது. அதே சமயம் எதுவித ஆதாரமுமின்றி உள்வீட்டு பிரச்சனையாக காட்ட முனைவது உள்நோக்கம் கொண்ட நடவடிக்கைகளாகவே கருதப்படவேண்டும்.

இத்ததாக்குதல்களின் பின்னணியில் போட்டிக்குழுக்களோ அல்லது சிறிலங்கா அரசாங்கத்தின் முகவர்களோ இருந்திருக்க முடியும். இருப்பினும், வன்செயல்கள் மூலம் புலம்பெயர் தமிழ் மக்களின் செயற்பாடுகளை தடுத்துவிட முடியும் என்பதில் நம்பிக்கை கொண்ட எந்தவொரு தரப்பும் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்க முடியும் என்ற உண்மையை நாம் இலகுவில் புறந்தள்ளிவிட முடியாது. இச்சம்பவங்களில் ஈடுபட்டவர்கள், பின்னணியிலிருந்து செயற்பட்டவர்கள், அவர்களது நோக்கம் ஆகிய விபரங்கள் வெளிப்பட்டாத பட்சத்தில் இது தொடர்பான சந்தேகம் நீடித்து கொண்டேயிருக்கும். இவ்விடயத்தில் பாதுகாப்புத் துறையினருக்கு மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் இவ்வன்செயல்களுடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் பிடியில் சிக்கவைக்க முடியும். வன்முறைகளுக்கு எதிரானவர்கள் என எல்லோருக்கும் வகுப்பெடுக்கும் மேற்கத்தைய அமைப்புகளும் இவ்விடயத்தில் உதவ முடியம்.

சனநாயக வழியில் செயற்படுவதாகக் கூறிக்கொள்ளும் தமிழ் அரசியல் அமைப்புகளும் இவ்வன்முறைக் குழுக்களை வைத்து அரசியல் நடாத்துவதை விடுத்து விடுதலை நோக்கிய செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும். தாயக விடிவுக்காய் தம் முயிரை ஈகம் செய்தவர்களை நினைந்துருகும் இவ்வாரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் இவற்றை கவனத்தில் கொள்வார்கள் என எதிர்பார்ப்போமாக.

ஒரு பேப்பர்

வணக்கம் !

இந்த பேப்பரை முழுசாக மாவீரர் நாள் சிறப்பிதழாக கொண்டு வாறதுக்கு எடுத்த முயற்சிகள் பெரிசாய் வெற்றியளிக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் இந்த பேப்பரை வெளிக்கொண்டு வாறதே சிரமமாய் இருந்தது. ***ஒரு பேப்பர்*** *குழுவில இருக்கிறவை சுகயீனம், வெளிநாட்டு பயணம், வேறை பல சோலியளுக்குள்ளையும் இந்த பேப்பரை கொண்டு வாறதில் குறியாய் இருந்ததால், எல்லா வசதிக்குறைவுகளையும் பொறுத்துக்கு கொண்டு கடுமையாய் உழைச்சிருக்கினம்.*

ஒரு பேப்பரிலை ஆக்கங்கள் எழுதிறவைக்கு நாங்கள் ஒரு சல்லிக் காசும் கொடுக்கிறதில்லை. அதுபோலை காசு வாங்கிக் கொண்டு எந்த ஒரு ஆக்கத்தையும் பிரசுரிக்கிறதில்லை. விளம்பரங்களுக்கு மட்டும்தான் காசு. இதை ஏன் சொல்லிறம் எண்டால் கிட்டடியிலை ஒரு அக்கா ஒரு கட்டுரையையும் அனுப்பி முப்பது பவுணுக்கு ஒரு காசோலையும் அனுப்பியிருந்தவா. நாங்கள் இதிலை வலும் கடுமை பாருங்கோ. ஆனபடியாலை இப்பிடியான வேலையை செய்யாதீங்கோ. பேப்பருக்கு நிதியுதவி செய்யிறது வேறை, கட்டுரையை போடச்சொல்லி காசு அனுப்பிறது வேறை எண்டதை நீங்கள் விளங்கிக கொள்ளவேணும்.

இன்னொண்டையும் சொல்லோணும், சினிமா பாடகர்கள், நடிகைகளை கூப்பிட்டு ஆயிரக்கணக்கிலை செலவழிக்கிற ஆட்கள், எங்களிட்டை விளம்பரத்துக்கு வரேக்கிள்ளை மட்டும் ஊரிலை கஸ்ரப்படுகிற ஆட்களுக்கு நிகழ்ச்சி நடத்திறம் அரைவிலைக்கு விளம்பரத்தை போடுங்கோ எண்டு கேட்கிறார்கள். இவையளுக்கும் நாங்கள் இல்லையெண்டுதான் சொல்ல வேண்டியிருக்கு. ஒரு பேப்பரை ஏதோ ருபர்ட் மேர்டக்கின் கொம்பனி மாதிரி நினைச்சுப் போடாதேங்கோ. கன ஆட்களின் பலனை எதிர்பார்க்காத பங்களிப்பில்தான் ***ஒரு பேப்பர்*** *வெளியிடப்படுகிறது.*

எங்கடை ஆசிரியர் குழுவுடன் தொலைபேசியிலை தொடர்பு கொள்ள விரும்புகிறவை, ஏன் தொடர்பு கொள்ள விருமபுகிறியள் மற்றத உங்களுடைய தொடர்பு விபரங்களை பணியகத்திலை கொடுத்தால், கூடிய சீக்கிரம் தொடர்புகொள்வார்கள். அதை விட்டுட்டு ஆளோடை இப்ப கதைக்கோணும் எண்டு அடம் பிடிச்சால், பணியகத்திலை இருக்கிறவை என்ன செய்யிறது? (போனை கட் பண்ணுறதை தவிர)

தாயக விடுதலை வேள்வியில் தங்களை ஆகுதியாக்கிய மாவீரர்களுக்கு வணக்கத்தை தெரிவித்து விடை பெற்றுக் கொள்கிறோம்.

அடுத்த பேப்பர் டிசம்பர் 7ம் திகதி வெளிவரும்.

வேறையென்ன ?

மீண்டும் சந்திப்பம்

ஒரு பேப்பர் *காரன்கள்+காரிகள்*

The UN failed Sri Lanka's Tamils, and innocents paid the price

By the time the Israel-Gaza conflict had claimed 10 lives last week the United Nations Security Council had scrambled into an emergency session to discuss the crisis. Yet when as many as 40,000 Tamils were killed during the final months of Sri Lanka's civil war in 2009, the UN didn't hold a single formal meeting. Not at the Security Council. Not at the General Assembly. Not at the Human Rights Council.

That's just one chilling observation in a damning report to UN Secretary-General Ban Ki-moon that excoriates the UN for failing Sri Lanka's civilians. Written by former UN official Charles Petrie and an expert panel, the report has sparked a fresh call by the Canadian Tamil Congress, representing the largest Tamil diaspora, for an international war crimes inquiry. It also vindicates Prime Minister Stephen Harper's demand that Sri Lanka answer persistent concerns about war crimes and other issues.

The report slams the UN for its "grave failure" to advocate for those caught in the crossfire. Critically, the UN did not muster all the political influence and moral clout it had to keep the world fully informed, as Sri Lanka's military crushed a Tamil Tiger-led secessionist rebellion. And while both sides committed crimes, except for one rare occasion the UN failed to publicly warn the government that it could be held responsible.

Instead, the Security Council and UN Secretariat were cowed by the Sri Lankan authorities, who enjoyed "the effective acquiescence of a post-9/11 world order" to defeat an enemy regarded by many as terrorists, says an executive summary that was deleted before the report was made public last week. UN officials pulled their punches, downplayed death tolls and allegations of government crimes, left the world in the dark, and generally fell short in helping the victims.

"The UN possessed the capabilities to simultaneously strive for humanitarian access (to war zones) while also robustly condemning the perpetrators of killings of civilians," the report found. Yet "there was a continued reluctance among UN Country Team institutions to stand up for the rights of the people they were mandated to assist. In Colombo, some senior staff did not perceive the prevention of killing of civilians as their responsibility – and agency and department heads at UN Headquarters were not instructing them otherwise."

Instead, the Security Council and UN Secretariat were cowed by the Sri Lankan authorities, who enjoyed "the effective acquiescence of a post-9/11 world order" to defeat an enemy regarded by many as terrorists, says an executive summary that was deleted before the report was made public last week.

This systemic failure is appalling, coming long after the UN was thought to have absorbed the "never again" lessons from the Rwanda genocide of 1994 and Srebrenica in 1995.

No one expects miracles from the UN system. As we know from the Syria crisis, the Security Council can't always stop bloodbaths. Bashar Assad's Russian and Chinese enablers have blocked strong action.

The UN didn't hold a single formal meeting. Not at the Security Council. Not at the General Assembly. Not at the Human Rights Council.

But even so, the UN has met repeatedly on Syria, condemned Assad and sent observers. In Sri Lanka it retreated into craven silence and looked the other way. That emboldened war criminals to ply their vicious trade.

Courtesy: Toronto Star

புதை குழியில் இருந்து புதிய விதைகுழிகளுக்கு சென்ற மாவீரர்கள்

1989ம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட மாவீரர் நாள் 1990 ஆம் ஆண்டு தமிழீழ மக்களால் இயன்றளவு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் நினைவு கூரப்பட்டது. மாவீரர் நாள் ஒரு சோக நிகழ்வு அல்ல அது ஒரு தேசத்தின் மலரும் நினைவுகள் எங்கள் விரர்களை போற்றும் நிகழ்வு, எம் தேசத்தை காக்க புறப்படுவதற்காக ஆயிரம் ஆயிரம் போராளிகளால் உறுதி எடுக்கப்படும் நிகழ்வு என தேசியத்தலைவரால் கூறப்பட்டது.

அந்த வகையில் எங்கள் காவல் தெய்வங்களுக்காக புதிய கல்லறை தோட்டங்களை நிறுவி, அதனுள்ளே அவர்களை உறங்கவைத்து, அழகு பார்த்து அவர்கள் மீது உறுதியெடுத்து, அவர்கள் நினைவுகளை சுமந்து மக்களும் போராளிகளும் பயணிப்பதற்கான ஆலயமாக துயிலும் இல்லங்கள் உருவெடுத்தன.

1990 ஆம் ஆண்டின் இறுதி பகுதியில் துயிலும் இல்ல கட்டுமானங்கள் தொடங்கினாலும் 1991 ஆம் ஆண்டு முற்பகுதியில் பிரபல வரைபட கலைஞர் (பிரித்தானியா, மத்திய கிழக்கு , இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் பணிபுரிந்த அனுபவம் கொண்ட ஒரு நாட்டு பற்றாளர் தாயகத்திற்கு வந்து தேசிய தலைவரின் சிந்தனைக்கு அமைவாக துயிலும் இல்லத்தினை வரைந்து மாதிரி செய்து கொண்டிருந்தார் அதன் படி கட்டுமான பணிகளை போராளிகள் மக்கள் என அனைவரும் ஆரம்பித்தனர். இந்த கலைஞருக்கு கொடுத்த வேலை பிடித்து போக தனது வெளி நாட்டு வாழ்க்கையினை கை விட்டு இதே வேலையில் ஊறிவிட்டார். கிளிநொச்சி இராணுவத்தினரால் கைப்பற்றப்படும் வரை அவர் தாயகத்தில் தான் இருந்தார் என்பதனை நாம் கட்டாயம் நினைவு படுத்த வேண்டும்.

இவ்வாறு தமிழீழ காவல்தெய்வங்களுக்காக அமைக்கப்பட்ட அலங்கரிக்கப்பட்ட இல்லங்களில் ஏற்கனவே சண்டை நடந்த இடங்களில் புதைக்கப்பட்ட மாவீரர்களை அகழ்ந்தெடுத்து புதிய இல்லங்களுக்கு கொண்டுவரும் முடிவுகளும் எடுக்கப்பட்டது. இதன் அடிப்படையில் இந்திய இராணுவ காலப்பகுதியில் சண்டைகளில் மாண்டுபோன, அந்த இடங்களிலேயே புதைக்கப்பட்ட மாவீரர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் கோப்பாய், வடமராட்சி, மற்றும் வன்னி ஆகிய இடங்களில் துயிலும் இல்லங்களுக்கு கொண்டுவரப்பட்டனர்.

ஆரம்பத்தில் பிராந்தியங்களுக்கு ஒரு துயிலும் இல்லமாக இருந்துபின்னர் மாவட்டங்களுக்கு ஒன்று என விஸ்தரிக்கப்பட்டது அதன் பின்னர் மேலும் பல இல்லங்கள் பிரதேச ரீதியாக அமைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. 1989 அம் ஆண்டு மாவீரர் நாளில் நினைவு கூரப்பட்ட 1657 மாவீரர்களது வித்துடல்களை துயிலும் இல்லங்களுக்கு கொண்டுவரும் பணிகள் 1991 இல் தொடங்கப்பட்டாலும் 2005 அம் ஆண்டுவரை அவை முற்றாக இடம் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு 1991 ம் ஆண்டு யாழ் குடா நாடு எங்கும் எழிச்சிகோலமாக இருந்த இந்த நாட்களில் துயிலும் இல்ல பாடலாக "மொழியாகி எங்கள் மூச்சாகி......" என தொடங்கி தாயக கனவுடன் சாவினை தழுவிய சந்தணப் பேழைகளே.. என்ற பாடல் புதுவை இரத்தினதுரை அவரின் கவிகளில் இசைவாணர் கண்ணனால் இசையூட்டப்பட்ட பாடல் அறிமுகம் செய்யப்பட்டது. மேஜர் சிட்டு, கனிமொழி, வர்ண ராமேஸ்வரன் ஆகியோர் அதனை பாடியிருந்தனர். அன்று தொடக்கம் இந்த பாடல் ஒவ்வொரு மாவீரன் விதக்கப்படும் போதும் இசைக்கப்படும் எனப்து குறிப்பிடதக்கது.

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே! – இங்கு
கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா ?
குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம் – அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்.
எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

நள்ளிரா வேளையில் நெய்விளக்கேற்றியே
நாமும் வணங்குகின்றோம் – உங்கள்
கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு
சத்தியம் செய்கின்றோம்
சாவரும் போதிலும் தணலிடை வேகிலும்
சந்ததி தூங்காது ? எங்கள்
தாயகம் வரும் வரை தாவிடும் புலிகளின்
தாகங்கள் தீராது.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது
உரைத்தது தமிழீழம் – அதை
நிரை நிரையாகவே நின்றினி விரைவினில்
நிச்சயம் எடுத்தாள்வோம்
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும்
தனியர(சு) என்றிடுவோம் – எந்த
நிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின்
நினைவுடன் வென்றிடுவோம்.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்

நன்றி: அழியாச்சுடர்கள்

பிள்ளைகள்

நினைவில்

உருகிடும் நாளிது!

கல்லறை தழுவும்

காற்றே வருக,

காவிய நாயகர்

மூச்சைத் தருக...

'Genocide Dividends' being Utilized for Further Oppression & Subjugation!

By: Nadarajah Balasubramaniam (PFLT-UK)

"Political language is designed to make lies sound truthful and murder respectable and give the appearance of solidity of pure wind" - George Orwell

Why the Eelam Tamils long suffering from genocide, should not get independence? This must be the inevitable question all civilized nations of the International community should ask themselves and others.

What happened during the period, January to may 2009, the most traumatic period in the history of Sri Lanka was premeditated, intensified naked genocide. The perpetrators are not at all in a mood to show any remorse or justice to the surviving victims. What can be termed as 'Genocide Dividends' are being used by the Sri Lanka government to build infrastructure for the convenience of the occupying military and to accelerate genocide by other means. The government is still on triumphant mood and adopting a winner takes all approach.

'War Crimes Unpunished' explores why there has been apparently so little action in calling the Sri Lankan government to account, despite a report by a UN-appointed panel of exports pressing for an international investigation into alleged violations of international humanitarian and human rights law. The reality of 'military solution' in the context of Sri Lanka is nothing but genocide, as the military is a Sinhala military the victims all Tamils of all ages from the very elderly to future babies.

How this horrible state of affairs has come about? All because, this most horrendous genocide of the 21st century was well planned and executed without witness and is a result of the combined efforts of big powers, India, the UK and the USA. These powers know very well that a war without witness is itself simply a genocide, a sovereign government carrying out a mass murder of its own citizens.

When the INGOs and journalists were asked to leave Vanni by the government of Sri Lanka and India who designed and executed the process of genocide , why didn't these big powers protest. At least they could have given a strong statement or could have diplomatically called back their High Commissioners. The shameful UK government didn't want to do it, may be, just not to displease India, and the USA, may be, simply wanted to accommodate India.

The thinking or the philosophy of the Sonia Congress Government of India has not at all being in keeping with India's values as a country. For the international community, as viewers, it is difficult to comprehend these events and painful to witness human degradation of such magnitude. How this could have happened in an "advanced" society remains an enigma..

Perhaps the IC is confident that New Delhi or Tamil Nadu politicians could contain any upsurge of nationalism in Tamil Nadu materialising the cause of Eelam Tamils. But the chances of a political alignment in Tamil Nadu based on the issue of securing justice for Eelam Tamils and demanding their right to self-determination appears to have brightened with the coming together of various political parties, movements and human rights organizations at a convention organized in Coimbatore on November 6, 2011.

The message from the dais was loud and clear - parties were willing to unite for the cause of Eelam Tamils.

Dr. Sathananthan, a Cambridge Ph.D holder, now living in Karachi and an award winning film-maker and producer with the credit of making in1996, a documentary film titled 'Suicide Worriers' on the LTTE, has brilliantly written an analytical article under the title; "War and aftermath raise questions over Tamil strategy of engagement with powers". With the knowledge of hindsight a reference to his article is very timely and useful in the sense it helps to understand some of our anxieties about what actually happened in Mullivaikkal!

"The western powers, Norway (the poodle of Washington) and India (the Master Planner and Executioner) astutely maintained plausible denial by vacuously repeating calls for 'a ceasefire', without demonstrating by action any intention whatsoever of enforcing it; lest the LTTE is granted a reprieve. Ceasefire calls came thick and fast from different, seemingly unrelated, directions. The disingenuous the Anglo-American(4/Feb/09), the token EU Parliament resolution (12/Mar/09), the eye wash of a visit to Colombo by India's Foreign Secretary to 'press for a ceasefire' (24/Apr/09) and the Anglo-French tongue-in-cheek plea (30/Apr/09) by British Foreign Secretary David Miliband and French Foreign Minister Bernard Kouchner are but a few. Colombo regime's predictable and repeated rejections added credibility to the initiatives, among which the theatrics by Miliband and Kouchner were truly Thespian: at the Colombo press conference they wrung hands in deceptive helplessness moaned: 'We tried very hard, we insisted, and we insisted,' touchingly confessed Kouchner, 'but it is up to our friends [Sinhalese politicians] to allow it or not'..."

Further, the UN Secretary General's refusal on 5 May 2009 to demand a ceasefire exposed the ceasefire calls as a tissue of lies. It revealed the aim of his puppet masters in western capitals was a war-to-the-finish, to eliminate the LTTE irrespective of civilian deaths. http://www.innercitypress.com/un1may3srilanka050509.html

Note: Appered on Issue 158 of 18th November 2011. Repeated for its significance.

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
அ.இரவி - மணி - அகிலன்
மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பிரான்ஸ்
சிறி

சுவிஸ்
சயந்தன்

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
சுகன்யா

விளம்பரம்
சோபனா - அஜந்தா

அச்சு
தர்சினி (கனடா) - சுகன்யா

வடிவமைப்பு
மயூ - யுகன்

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா - சாரங்கன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
சோபனா

வழங்கல்
உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CRO 3JP

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com

'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

பரிதி என்கிற தேசப்பற்றாளன்

*'எல்லா பூக்களையும்
உன்னால் அழித்துவிட
முடியும் ஆனால்
வசந்தத்தை உன்னால்
தடுத்து விட முடியாது'*

- நெருடா

2007ம் ஆண்டு இறுதிப் பகுதியில் என்று நினைக்கிறேன், ஒரு பேப்பர் பணியகத்திற்கு அஞ்சலில் வந்த கடிதம் ஒன்று என்னிடம் தரப்பட்டது. ந. மதீந்திரன் என்பவர் பிரான்ஸ் நாட்டு சிறைக் கூடமொன்றிலிருந்து எழுதிய கடிதம் அது. அக்கடிதத்தில் திரு. மதீந்திரன் ஒரு பேப்பர் பற்றிய தனது மதிப்பீட்டினை (பாராட்டுகளே அதிகம்) எழுதியிருந்ததுடன், ***ஒரு பேப்பர்*** பிரதிகளை தவறாது அவரது (சிறைக்கூட) முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் வேண்டியிருந்தார். தொடர்ந்து பத்திரிகையை அனுப்பி வைப்பதற்கு வசதியாக பிரித்தானிய முத்திரைகளையும் அவரது கடிதத்துடன் இணைத்திருந்தார். பிரான்சில் தமிழ் செயற்பாட்டாளர்கள் இருபத்தியொருவர் பிரான்ஸ் பாதுகாப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டமையை நாம் அறிந்திருந்தமையால், திரு. மதீந்திரன் என்பவர் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளர் பரிதி என இனங்காண்பதில் எமக்கு சிரமமிருக்கவில்லை.

பரிதியின் இக்கடிதம் கிடைப்பதற்கு சில வாரங்களுக்கு முன்பதாக, தடுப்புக்காவலில் இருந்த இன்னொரு செயற்பாட்டாளரான, எனக்கு முன்பே அறிமுகமான மேத்தாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதுவும் ஒரு பேப்பரை பாராட்டுவதாகவே அமைந்திருந்தது. அக்காலத்தில், ***ஒரு பேப்பர்***, பிரித்தானியாவிலும், கனடாவிலும் தேசிய செயற்பாட்டாளர்கள் எனப்படும் சிலரின் கோபத்திற்கு உள்ளாகியிருந்தது. ***ஒரு பேப்பர்*** பத்தி ஒன்றில், தேசிய ஊடகமென அப்போது கருதப்பட்ட ஐ.பி.சி வானொலியில் ஒலிபரப்பப்பட்ட நிகழ்ச்சி ஒன்றினை விமர்சித்தமையும் அவர்களது சீற்றத்திற்கு ஒரு காரணமாக அமைந்திருந்தது. எல்லாத்தரப்பினரையும் பாரபட்சமின்றி விமர்சனத்துக்குள்ளாக்கும் ***ஒரு பேப்பர்***, சிலரின் வெறுப்பினைச் சம்பாதித்ததும், யுத்தம் பற்றிய 'பரபரப்புச்' செய்திகளை அப்போது வெளியிட்டு வந்த வாராந்தரி ஒன்று இதே தேசியவாதிகளின் வரவேற்பை பெற்றதும் ஆச்சரியமான விடயமல்ல. இத்தகைய பின்னணியில் ***ஒரு பேப்பர்*** முக்கிய தேசியச் செயற்பாட்டாளர்கள் இருவரின் பாராட்டினைப் பெற்றமை எமது ஆசிரியர் குழுவிற்கு உற்சாகத்தையும் மகிழ்வையும் கொடுத்தது.

ஒரு வாசகன் என்ற வகையில் பரிதிக்கு ***ஒரு பேப்பர்*** மீதிருந்த விருப்பு காரணமாக, அவரை தொடர்பு கொள்ள வேண்டும் என்று எண்ணியிருந்தேன். 2010 இல் அவர் விடுவிக்கப்பட்டபோது நீதிமன்றம் பல நிபந்தனைகளை விதித்திருந்தமையால், அவர் பொது வாழ்விலிருந்து ஒதுங்கிவிடுவார் என எதிர்பார்த்தேன். ஆதலால் அவரை தொடர்பு கொள்ளும் முயற்சியினை நான் மேற்கொள்ளவில்லை. ஆனால் அவர் எல்லாத் தடைகளையும் கடந்து தொடர்ந்து இயங்கிக்கொண்டிருந்தார் என்பதனை பின்னாளில் அறியக் கிடைத்தது.

கடந்த வருட இறுதியில், பத்தி எழுத்தாளர் மௌலி எழுதிய ஒரு கட்டுரையில், பரிதி தனக்குத் தெரிவித்ததாக ஒரு விடயத்தை எழுதியிருந்தார். அக்கட்டுரையை பிரசுரிப்பதற்கு முன்னர் அத்தகவலின் உண்மைத்தன்மையை பரிதியுடன் தொடர்பு கொண்டு சரிபார்த்துக் கொள்ளுமாறு எம்மை மௌலி கேட்டுகொண்டார். ஆனால் அச்சந்தர்ப்பத்தில் பரிதி தாக்குதலுக்கு உள்ளாகியமையால் அம்முயற்சி கைகூடவில்லை. பரிதியிடம் கேட்டு உறுதிப்படுத்தாமலே அக்கட்டுரையை நாம் பிரசுரித்தோம்.

சில மாதங்களுக்கு முன்னர், ஒரு வேலைத் திட்டம் தொடர்பாக பரிஸ் மாநகர சபை உறுப்பினர்கள் சிலரை சந்திக்க வேண்டியிருந்தது. பரிஸ் இன் புறநகர்ப்பகுதியொன்றில் நடைபெற்ற இச்சந்திப்பில் கலந்துகொண்டபோது, அங்கு சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த ஒருவரை மற்றவர்கள் பரிதி என பெயர் சொல்லி அழைப்பதனை அவதானிக்க முடிந்தது. அவர் அருகில் சென்று என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். நினையாப்பிரகாரமாக நடந்த இச்சந்திப்பில் சுமார் அரை மணி நேரம் பரிதியுடன் உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த ஒற்றை சந்திப்பிலேயே பரிதி என்பவர் ஒரு செயல்வீரன் என்பதை உணர்நது கொள்ள முடிந்தது. ஏற்கனவே பரிதியை பற்றி நிறைய அவருடைய பாசறைத் தோழர் ஒருவர் கூறக் கேட்டிருக்கிறேன். எமக்கிடையே நடந்த உரையாடல் அவற்றை உறுதி செய்வதாகவே அமைந்திருந்தது.

சாதிக்கத் துடிக்கிற, தான் பொறுப்பேற்ற பணியில் உறுதியான, ஒற்றை சிந்தனைப் போக்குடைய ஒரு மனிதராகவே பரிதியை என்னால் காண முடிந்தது. அநாவசியமான விடயங்களைப் பற்றி பேசாத அவர், தமிழ்த் தேசியத்தை கட்டமைப்பதில் குறியாக இருப்பவர் என்பது அன்றைய கூட்டத்தில் அவர் கூறிய கருத்துகளில் வெளிப்பட்டது. இச்சந்திப்பு நடைபெற்ற நாளில், தமிழ் இளையோர் அமைப்பின் உதைபந்தாட்ட அணி வடக்கு ஈராக்கில் (கேடிஸ்தான்) நாடாற்ற தேசங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டிகளில் விளையாடிக் கொண்டிருந்தது. தமிழ் இளையோர் அணி இவ்வாறான போட்டிகளில் கலந்து கொள்வதை தான் ஊடகங்கள் வாயிலாக அறிந்து கொண்டதாகக் குறிப்பிட்ட பரிதி, எதிர்காலத்தில் பிரான்சிலிருந்தும் இளையவர்களை இவ்வணியில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என்றும் அதற்கான தயாரிப்பு வேலைகளில் தாங்கள் ஈடுபடவிருப்பதாகவும் முழு நம்பிக்கையுடன் குறிப்பிட்டார். அவருடைய பேச்சு முழுக்க முழுக்க தேச நலன் பற்றியே இருந்தது.

அந்த முதல் சந்திப்பிற்கு பிறகு அவருடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிட்டவில்லை. இருந்தாலும் அச்சந்திப்பே இறுதியானதாகவிருக்கும் என நான் எண்ணியிருக்கவில்லை. இம்மாதம் எட்டாம் திகதி துப்பாக்கி மனிதர்களால் அவரது உயிர் பறிக்கப்பட்டுவிட்டது. யார் இந்த ஈனத்தனமான மானிடவிரோதச் செயலை செய்தார்கள் என்பது தெரியாவிட்டாலும், அந்த ஆயுததாரிகளும், அவர்களை பின்னாலிருந்து இயக்குபவர்களும் தமிழினவிரோதிகள் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

தங்களுடைய நலனில் மாத்திரம் அக்கறை கொண்டு, வெட்டிப் பேச்சும், வேண்டாத விவாதங்களுடனும் வாழும் பல்லாயிரக்கணக்கான வேடிக்கை மனிதர்களைக் கொண்ட தமிழ் அலந்துழல்வு சமூகத்தில் தேச நலனை முன்னிறுத்திச் செயற்பட்ட ஒரு செயல்வீரனை பேய்களிடம் பறிகொடுத்துவிட்டு நிற்கிறோம். தன் துணையை தேசத்திற்காக கொடுத்துவிட்டு தனித்து நிற்கும் அவருடைய மனைவி அனுசாவிற்கும், மகள் சாராவிற்கும் நாங்கள் எவ்வாறு ஆறுதல் சொல்லப் போகிறோம்?

கோபி (ஒரு பேப்பர்)

வாழ்ந்து படிக்கும் பாடங்கள்!

உண்மையான அமைதி..

ஒரு தாவோ கதை. டெரெக் லின் என்ற தாவோ அறிஞர் சொன்னது...

ஒரு சக்கரவர்த்தி தன் அன்றாட வேலைகளைச் செய்வதில் முழு கவனத்தோடு ஈடுபட முடியாமல் தவித்தார். உள்நாட்டுப் பிரச்சினைகள், வெளிநாடுகள் மூலம் பிரச்சினைகள், நிர்வாகப் பிரச்சினைகள், குடும்பப் பிரச்சினைகள், அவ்வப்போது முடிக்க வேண்டியிருந்த அவசர வேலைகள் என பல விஷயங்களை அவர் கவனிக்க வேண்டி இருந்த்து. முழு கவனத்தோடு எல்லா அம்சங்களையும் ஆராய்ந்து ஒவ்வொரு பிரச்சினையையும் அணுகி தீர்க்க வேண்டி இருந்தது. அதற்கு மன அமைதி முக்கியத் தேவையாக இருந்தது. மன அமைதி இல்லாத போது எதிலும் முழுக் கவனம் செலுத்துவது முடியாத காரியமாக இருந்தது.

இந்த சிக்கலை எப்படித் தீர்ப்பது என்று ஆலோசித்தவர் தன் மந்திரியை அழைத்துச் சொன்னார். "தினசரி நாலா பக்கங்களில் இருந்தும் நான் கவனிக்க வேண்டிய வேலைகளும், பிரச்சினைகளும் வந்த வண்ணம் இருக்கின்றன. அந்த நேரங்களில் அவற்றைச் சரியாகக் கையாளத் தேவையான அமைதி இல்லாமல் தவிக்கிறேன். அதனால் அந்த நேரத்தில் பார்த்தவுடன் அமைதி கிடைக்கும் ஏதாவது ஓவியம் என் முன் இருந்தால் அதைப் பார்த்து நான் என் அமைதியை மீட்டுக் கொள்ள முடியும் என்று நினைக்கிறேன். நம் நாட்டில் உள்ள ஓவியர்களில் சிறந்த ஓவியரைத் தேர்ந்தெடுத்து 'உண்மையான அமைதி' என்ற தலைப்பில் எனக்காக ஒரு ஓவியம் வரையச் சொல்லுங்கள்."

மந்திரி நாட்டில் உள்ள தலை சிறந்த ஓவியர்களைப் பற்றி விசாரித்தார். மூன்று ஓவியர்களைத் தேர்ந்தெடுத்தார். மூவரும் மிக நல்ல ஓவியர்கள் எனப் பேரெடுத்தவர்கள். அவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுப்பது கடினமாக இருந்தது. அரசரிடம் அதைச் சொல்ல அரசர் மூவரிடமும் ஓவியம் வரையச் சொல்லலாம் என்றும் அந்த மூன்று ஓவியங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம் என்றும் சொன்னார். மூன்று ஓவியர்களும் அரண்மனைக்கு வரவழைக்கப்பட்டார்கள். அரசரின் தேவை அவர்களுக்குச் சொல்லப்பட்டது. மூவரும் அரண்மனையில் இருந்தபடியே 'உண்மையான அமைதி' என்ற தலைப்பில் ஓவியம் வரைய ஆரம்பித்தனர். அவர்கள் வரைந்து முடித்த பின் அரசரும் மந்திரியும் ஓவியங்களைப் பார்வையிட வந்தனர்.

முதல் ஓவியம் மலைகள் சூழ இருந்த அமைதியான பெரிய குளத்தினுடையதாக இருந்தது. மிக அமைதியான ஒரு சூழ்நிலையை அந்த ஓவியம் வெளிப்படுத்தியது. இரண்டாவது ஓவியம் பனி மழை பெய்து முடிந்த பின் அமைதியாக இருந்த பனி மலையினுடையதாக இருந்த்து. சத்தங்களும் உறைந்து போனது போன்ற பேரமைதியான ஒரு சூழ்நிலையை அந்த ஓவியம் சித்தரித்தது. மூன்றாவது ஓவியம் ஒரு பெரிய நீர்வீழ்ச்சியுடையதாக இருந்தது. அதைக் கண்டதும் மந்திரி சொன்னார். "நாம் சொன்னதை இந்த ஓவியர் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை போல இருக்கிறது. இதை விட்டு விட்டு முதல் இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம்". "ஒரு நிமிடம் பொறுங்கள்" என்ற சக்கரவர்த்தி அந்த ஓவியத்தை சிறிது ஆராய்ந்து விட்டு "இந்த ஓவியம் தான் நான் எதிர்பார்த்தது" என்று சொல்ல மந்திரிக்கு குழப்பமாக இருந்தது. "சக்கரவர்த்தியே இதில் அமைதி எங்கே இருக்கிறது. தடதடவென்று சத்தத்துடன் விழுந்து கொண்டிருக்கும் நீர்வீழ்ச்சி அமைதிக்கு எதிராக அல்லவா தோன்றுகிறது?" என்று தன் அபிப்பிராயத்தைச் சொன்னார். சக்கரவர்த்தி சொன்னார். "இந்த ஓவியத்தில் நீர்வீழ்ச்சி பிரதானம் அல்ல. நன்றாகப் பாருங்கள்" மந்திரி நிதானமாக அந்த ஓவியத்தை ஆராய்ந்தார். அந்த நீர்வீழ்ச்சிக்கு அருகில் ஒரு மரம் இருந்தது. அந்த மரத்தின் ஒரு கிளையில் இருந்த கூட்டில் ஒரு பறவை அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது.

சக்கரவர்த்தி சொன்னார். "பக்கத்தில் அத்தனை இரைச்சல் இருந்தாலும் அதனால் பாதிக்கப்படாமல் உறங்கிக் கொண்டிருக்கும் அந்த பறவையிடம் உண்மையான அமைதி இருக்கிறது. இதைத் தான் நான் எதிர்பார்த்தேன்" அந்த ஓவியமே அரசர் பார்வையில் இருக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இந்தக் கதையில் மிக ஆழமான பொருள் இருக்கிறது. அந்த சக்கரவர்த்தியின் நிலையில் தான் நாமும் இருக்கிறோம். கடமைகளும், வேலைகளும், சரி செய்ய வேண்டிய பிரச்சினைகளும் தினமும் நம்மை அணுகிய வண்ணம் இருக்கின்றன. அமைதியுடனும் கவனத்துடனும் செய்தால் வாழ்க்கை சிறப்பாகவும், நிறைவாகவும் இருக்கும். ஆனால் பல சமயங்களில் அப்படிச் செய்ய முடியாமல் தடுமாறிப் போகிறோம். சக்கரவர்த்தியைப் போலவே நமக்கும் எல்லாவற்றையும் சமாளிக்க அமைதி தேவைப்படுகிறது.

அந்த சக்கரவர்த்தி தன் முன்னால் அந்த ஓவியத்தை வைத்துக் கொண்ட்து போல நாமும் அந்தக் காட்சியை மனதில் பதித்துக் கொண்டு அவ்வப்போது மனக் கண்ணில் பார்த்துக் கொண்டு நம் அமைதியை தக்க வைத்துக் கொள்ள முயற்சிப்போமா?

- என்.கணேசன்

மாற்றம் பெறாத சர்வதேச அணுகுமுறையும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் சவால்களும்



International Crisis Group
WORKING TO PREVENT CONFLICT WORLDWIDE

கோபி
ஒரு பேப்பர்

ஈழத்தமிழ் மக்களால் பெரிதும் மதிக்கப்பட்ட தந்தை செல்வநாயகம் கூறிய ஒரு வாக்கியம் அடிக்கடி தமிழ் அரசியல் தளத்திலும், வெகுமக்களாலும் நினைவு கூரப்பட்டு வருகிறது. "தமிழ் மக்களை இனி கடவுள்தான் காப்பாற்றவேண்டும்" என்ற அந்த வாசகத்தை அரசியல் வங்குரோத்து நிலையில்,விரக்தியின் விளிம்பில் நின்று தந்தை செல்வா குறிப்பிட்டதாகவே பலரும் தவறாக அர்த்தப்படுத்திக் கொள்கிறார்கள். தந்தை செல்வா இவ்வாறு கருத்து வெளியிடும் போது, அவரும் அவரது கட்சியினரும் ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றில் மிகவும் முக்கியமான ஒரு முடிவை எடுத்திருந்தனர். தமிழீழத் தனியரசு ஒன்றே ஈழத்தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வை பெற்றுத் தரும் என்ற வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை தந்தை செல்வா முழு மனதுடன் ஏற்றுக்கொண்ட நிலையில் இவ்வாறான கருத்தை வெளியிட்டதனால், அவர் தோல்வி மனப்பாங்குடன் தனது இயலாத்தன்மையை வெளிப்படுத்தியுள்ளார் எனக் கருதுவது தவறு. மாறாக அவர் வேறு எந்த சக்தியையும் நம்பால், தமிழ் மக்களின் ஆத்மபலத்தில் மாத்திரமே நம்பியிருந்தார். இக்கருத்தினை வெளியிட்ட சமகாலத்தில் அவர் இன்னொரு கருத்தையும் தெரிவித்திருந்தார். "தமிழ் மக்களுக்கு இரண்டு வழிகள்தான் உண்டு. ஒன்று சிங்களத்திற்கு அடிபணிந்து போவது, மற்றயது அடிபணியாது சுதந்திரத்திற்கு போராடுவது. நான் இரண்டாவதையே தேர்ந்தெடுப்பேன், ஆனால் அது வில்லங்கமானது என்பது எனக்குத் தெரியும்".

தேசியத்தலைவர் அவர்கள் மாவீரர்களின் ஆத்மபலத்தில் மட்டுமே நம்பிக்கை கொண்டிருந்தார். இதனை அவரது எல்லா மாவீரர்தின உரைகளிலும் வெளிப்படுத்தியிருந்தார். பிறசக்திகளையிட்டு அவர் மிகுந்த அவதானமாகவே இருந்து வந்துள்ளார். தமிழ்த் தேசியத்தின்பால் நின்ற இந்த இரு தலைவர்களின் நிலைப்பாடும் தமிழ் மக்களால் ஆழ்ந்து அவதானிக்கத் தக்கவை. இந்தியாவும் மற்றய சர்வதேச ஆதிக்கசக்திகளும் ஈழத்தமிழ் மக்களிற்கு நீதியான ஒரு அரசியல்தீர்வினை பெற்றுத்தரும் என்ற கனவிலிருப்பவர்களை துயில் எழுப்ப வேண்டியுள்ளது. அண்மையில் சர்வதேச முரண்பாடுகளுக்கான குழுவினர் (International Crisis Group) இலங்கைத் தீவு தொடர்பில் வெளியிட்டிருக்கும் அறிக்கையானது சர்வதேச ஆதிக்கசக்திகள் பற்றிய வீணான கற்பனைகளை வளர்க்க வேண்டாம் என அறிவுறுத்துவதாக அமைந்துள்ளது. சர்வதேச முரண்பாடுகளுக்கான குழு என்பது ஒரு அரசுசாரா சிந்தனை மையம் என்றாலும், மேற்கு நாட்டு ஆதிக்கச்சக்த்திகளின் நிதியுதவியில் இயங்கும் இந்நிறுவனம் மேற்குநாட்டு கொள்கை வகுப்பாளர்களின் கருத்தினை பிரதிபலிப்பது ஆச்சரியம் தரும் விடயமல்ல.

மேற்படி அறிக்கையில், சிறிலங்கா அரசாங்கம், தமிழ்த் தரப்பினரான தமிழ் அரசியல் கட்சிகள், அலைந்துழல்வு சமூகத்தில் உள்ள அரசியல் அமைப்புகள், தமிழ்நாட்டிலுள்ள அரசியல் செயற்பாட்டாளர்கள் ஆகிய வெவ்வேறு தரப்புக்களின் நடவடிக்கைகள் பற்றிய அவதானங்களும், அறிவுறுத்தல்களும் அடங்கியுள்ளன. பொதுவில் மேற்கத்தைய ஆதிக்கசக்திகளின் நிலைப்பாட்டில் 2009 க்கு முன்னும் பின்னும் பாரிய வேறுபாடுகளைக் காணமுடியவில்லை. ஆனால் சிறிலங்கா அரசாங்கம் மீதான காட்டமான விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதானால், அவை தமிழ்மக்களின் நலன் சார்ந்து செயற்படுவது போன்ற தோற்றப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்குல இராசதந்திரிகளுக்கும், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, உலகத்தமிழர் பேரவை போன்ற சில அமைப்புகளுக்குமிடையிலான தொடர்பாடல்கள் அதிகரித்துக் காணப்படுவதனாலும், இவ்வாறான நம்பிக்கை தமிழர் தரப்பினரால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. சில தமிழ் ஊடகங்களும், திடிர் சிந்தனை மையங்களும் இவ்வாறான கருத்துருவாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. ஆனால் இந்த மேற்கத்தைய உறவுகள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பலாபலன்கள் எதனையும் பெற்றுத்தரவில்லை. மாறாக இச்சக்திகள் தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகளை தொடர்ந்து மறுத்து வருகின்றன.

இனி மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை பார்ப்போம்.

◆ மாகாணசபையே தீர்வு

தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வாக பதின்மூன்றாம் திருத்தச்சட்டமூலத்தின்படி உருவாக்கப்பட்ட மாகாணசபை (தனித்து வடமாகாணசபை) முன்வைக்கப்பட்டுள்ளது. இதனை முழுமையாக அமுலாக்குபடி சிறிலங்கா அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மாகாணசபையின் அதிகாரங்களை மேலும் பலமிழக்கச் செய்யும் 'தெவிநெகும' சட்டமூலத்தை கைவிடுமாறுமாறும் கோரப்பட்டுள்ளது. அதேசமயம் தேசியம், தாயகம், தன்னாட்சியுரிமை போன்ற அடிப்படைக் கோரிக்கைகளை கைவிடுமாறு தமிழ் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

◆ தமிழ் தேசியக் கூட்டமைப்பும் சம்பந்தனும்

அறிக்கையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் அதன் தலைவர் சம்பந்தனையும் ஒற்றையாட்சியினை ஏற்றுக்கொண்டமைக்காகவும், மிதவாதபோக்கினை கடைப்பிடிப்பதற்காகவும் பாராட்டப்பட்டுள்ளது. ஈழத்தமிழ் மக்களுக்கு எவ்விதமான தலைமை இருக்கவேண்டும் என்பதில் சர்வதேச சக்திகள் தீர்க்கமான கருத்தினை கொண்டிருக்கின்றன என்பதனை இவ்வறிக்கை வெளிப்படுத்துகிறது. விரிவான அறிக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இதர தலைவர்கள் பற்றியும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களைப்பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவர்களை கடுங்கோட்பாளர்களான தேசியவாதிகளாக இனங்காட்டப்பட்டுள்ளது.

எழுபத்தொன்பது வயதாகும் சம்பந்தனின் உறுதியான கட்டுப்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளமையை நேரம்மறையாக அணுகும் இவ்வறிக்கை, கூட்டமைப்பின் உட்கட்சி சனநாயகம் பற்றி எதுவித கருத்தினையும் வெளியிடவில்லை. இருப்பினும் சம்பந்தனுக்கு பின்னர் தமக்கு இசைவான ஒரு தலைவரை உருவாக்குவதில் அவர்கள் கவனம் செலுத்துவதும் இவ்வறிக்கையில் வெளிப்படுகிறது.

தமிழ் குடிசார் சமூகம் பற்றி அறிக்கையில் கூறப்பட்டுள்ளபோதிலும்,கூட்டமைப்பு மீதான குடிசார்சமூகத்தின் விமர்சனங்களையிட்டு இவ்வறிக்கை கவலை கொண்டுள்ளதாகவே தெரிகிறது. குடிசார் சமூகத்தைக் காட்டிலும் ஒரு அரசியல் கட்சியை ஆதரித்து நிற்பது,இச்சக்திகள் இன்னமும் காலனித்துவகால நடைமுறைகளை கைவிடவில்லை எனபதனை வெளிக்காட்டி நிற்கிறது குடிசார் சமூகம் தவிர்ந்த ஏனையவர்கள் பொதுவில் தேசியவாதிகள் என அடையாளப்படுத்தப் பட்டுளளதுடன், அவர்கள் (தமிழ் ஊடகங்கள் உட்பட) கூட்டமைப்பினை விமர்சிப்பதனையும் இவ்வாதிக்க சக்திகளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. கூட்டமைப்பின் மிதவாதப் போக்கும் எதனையும் பெற்றுக் கொள்ள முடியாமல் போனால், அது தமிழ் மக்களால் தூக்கி யெறியப்பட்டுவிடும் எனவும் இவர்கள் அச்சப்படுவதாகத் தெரிகிறது.

> தமிழ்மக்கள் தமது ஆன்மபலத்துடன் போராடி உரிமைகளை பெற்றுக்கொள்ள முடியுமே தவிர வேறெந்த வெளிச்சக்திகளின் பின்னால் சென்றும் பெற்றுவிட முடியாது என்பது மீளவும் ஒரு முறை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில், சிறிலங்கா அரசாங்கத்தின் சிங்களமயமாக்கல் மற்றும் சிங்களபௌத்த தேசியவாதம் பற்றிகுறிப்பிடப்பட்டுள்ளமையை நேர்மறையான விடயங்களாக எடுத்துக் கொண்டாலும். சிங்கள தேசியவாதம் தமிழ் தேசிய இனத்தை இனப்படுகொலைசெய்கிறது என்ற விடயம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. தவிரவும், தமிழ் மக்களை ஒரு தனித்துவமான ஒரு இனமாக ஏற்றுக்கொள்வதற்கு கூட இச்சக்திகள் இன்னமும் தயாரகவில்லை என்பது துலாம்பரமாக வெளிப்டுகிறது.

◆ உலகத் தமிழர் பேரவை

இவ்வறிக்கையில் பாராட்டுப்பெறுகிற ஒரே ஒரு புலம்பெயர் தமிழர் அமைப்பு உலகத்தமிழர் பேரவையாக இருக்கிறது. உலகத் தமிழர் பேரவை ஒன்றுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கும் புலம்பெயர் தமிழரமைப்பு என்பது ஒருபுறமிருக்க, மேற்குலக சக்திகளின் கருத்துகளை தமிழ் மக்கள் மத்தியில் காவித்திரிவதும் அது இச்சக்திகளின் நேசிப்புக்கு உரியதாக உள்ளமைக்கு காரணமாகிறது. உலகத் தமிழர் பேரவையின் நான்கு தூண்கள் அணுகுமுறை முழுக்க முழுக்க இந்த சக்திகளால் வழிநடத்தப்படுவதனையும் இந்த அறிக்கை வெளிப்படுத்துகிறது.

> "தமிழ் மக்களுக்கு இரண்டு வழிகள்தான் உண்டு. ஒன்று சிங்களத்திற்கு அடிபணிந்து போவது, மற்றயது அடிபணியாது சுதந்திரத்திற்கு போராடுவது. நான் இரண்டாவதையே தேர்ந்தெடுப்பேன், ஆனால் அது வில்லங்கமானது என்பது எனக்குத் தெரியும்".

இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ளதுபோன்று தமிழ்மக்கள் தமது ஆன்மபலத்துடன் போராடி உரிமைகளை பெற்றுக்கொள்ள முடியுமே தவிர வேறெந்த வெளிச்சக்திகளின் பின்னால் சென்றும் பெற்றுவிட முடியாது என்பது மீளவும் ஒரு முறை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் இவ்வறிக்கையை வெளியிட்டவர்களுக்கு நன்றி செலுத்தலாம்.

விதையாக
வீழ்ந்தோரே வீழ்ந்து
வணங்குகிறோம்
நாளை
முளையாக எழுவோம்...
முகிழ்ப்போம்....
மூர்க்கம் கொள்வோம்..



வரலாற்று நாயகனே!
தேசத்தின் தலைமகனே!!

இமையாக எமைக் காத்து
இருள் போக்கி ஒளியேற்றி
தாயாகி எம் துயர் துடைத்தவர்
எத் தடை வரினும்
தகர்த்திடும் நெஞ்சினன்
வணங்குகிறோம் தேசத்தின் தலைமகனை

மாவீரர் தினம் எதற்காக....

யார் இந்த மாவீரர்கள்?. எதற்காக களமாடினார்கள்?. உயிர்ப்பூவை உதிர்க்கும் அளவிற்கு மன வலிமையை அவர்களுக்கு கொடுத்த சக்தி எது?. சிரித்துக்கொண்டே கந்தகக்காற்றில் கலக்கும் வல்லமையைக் கொடுத்தது யார்?.

விடைகாணமுடியாத வினாக்கள் அல்ல இவை. ஒரு ஒடுக்கப்படும் இனம் தனது இருப்பிற்காகப் போராடும்போது இது புரியப்படும்.

போராடியோர் நினைவினைச் சுமந்து , மீண்டெழும் உணர்வினை ஊட்டும் நாளே மாவீரர்தினம்.

இறைமையுள்ள இரு தேசங்கள் என்பதன் அடிப்படையில் சுயாட்சி பற்றி பேசலாம். ஆனால் அதற்கும் சிங்களம் இணங்காது என்பதைப் புரிந்து கொள்ளாமல், இணக்கப்பாட்டு அரசியல் முயற்சிகளில் ஈடுபடும் தமிழர் தரப்புக்கள், எதையும் சாதிக்கப் போவதில்லை என்பதனை பல ஒப்பந்தக் கிழிப்புகள் எமக்கு உணர்த்துகின்றன.

ஆயுதப்போராட்டம் தோற்கடிக்கப்படலாம்.. ஆனால் விடுதலைக்கான போராட்டம் நிறுத்தப்படக்கூடாது என்பதனை நினைவுறுத்தும் நாள் தான் இந்த மாவீரர்தினம்.

எமை அழிக்கும் சிங்களமும், போர்க்குற்றத் தடியேந்தும் வல்லரசாளர்களும் ஒன்றுசேர்ந்து, சுயநிர்ணய உரிமைக்கோட்பாட்டை கைவிடுங்களென்று வலியுறுத்துவதை, ஏற்கமாட்டோமென உறுதிபூணும் நாளே இம்மாவீரம்தினம்.

மாவீரர்கள் போராடிப்பெற்ற இறைமையை, உலகறியச் செய்வோம் என்பதனை உரத்துச் சொல்லும் நாள் இது.

13 இற்குள் இணைந்து போதல், 19 இற்குள் சரிந்துபோதல் சரியென்று வாதிடுவோர் மாவீரர்களை நினைவுகூரத் தேவையில்லை.

77 இல் மக்கள் இட்ட ஆணை, போர்நிறுத்த காலத்தில் அங்கீகரிக்கப்படாத அரசாக பரிணாமம் அடைந்தது. அதன் இறைமையை ,சமாதானம் பேசிய வல்லரசாளர்களும் ஏற்றுக்கொண்டனர்.

இருப்பினும், போராடிப்பெற்ற இறைமையை, பேசிக்கொண்டே அழித்தார்கள். ‘முழு நாட்டிற்குமான சிங்களத்தின் இறைமை‘ என்கிற பேரினவாத அரசியல் கருத்தியல், தமது பிராந்திய நலனுக்கு தேவையாக இருப்பதால், தமிழ்தேசிய இனத்தின் இறைமையை சிதைப்பதற்குத் துணை போனார்கள்.

ஆனாலும் அழிக்கப்படவில்லை எம்மினம் போராடிபெற்ற இறைமை.

இதன் நீட்சியே தமிழினத்தின் அடுத்தகட்ட போராட்ட நகர்வாக இருக்க வேண்டும்.

அதிகாரப்பரவலாக்கம், அதிகாரப்பகிர்வு என்பன தேசிய இன முரண்நிலையைத் தீர்க்கும் என்போர் , தமிழ்தேசத்தின் இறைமையை மறுப்பவர்களாகவே கருத வேண்டும்.

சிங்களத்தின் இறைமையைப் பகிர்ந்து கொள்வதுதான் அதிகாரப்பகிர்வா?.

ஒற்றையாட்சி என்பது , சிங்களத்தின் முழு இலங்கைக்குமான இறைமையை ஏற்றுக் கொள்ளும் அரசியலமைப்புச் சட்டத்தினால் உருவாக்கப்படுவது.

ஆகவே ,‘சிங்களத்தின் ஒற்றையாட்சிக்குள் சுயாட்சி’ என்பது அடிப்படையில் தவறான அரசியல் கருத்தியல் என்பதைப் புரிந்து கொள்வது சிரமமல்ல .

இறைமையுள்ள இரு தேசங்கள் என்பதன் அடிப்படையில் சுயாட்சி பற்றி பேசலாம். ஆனால் அதற்கும் சிங்களம் இணங்காது என்பதைப் புரிந்து கொள்ளாமல், இணக்கப்பாட்டு அரசியல் முயற்சிகளில் ஈடுபடும் தமிழர் தரப்புக்கள், எதையும் சாதிக்கப்போவதில்லை என்பதனை பல ஒப்பந்தக் கிழிப்புகள் எமக்கு உணர்த்துகின்றன.

விலைபோகாத கல்லறைகள் எமக்கு இடித்துரைக்கும் செய்தி இதுதான்.

‘போராடினால் பெறுவாய் விடுதலை’ என்பது வரலாறு எமக்களித்த வரம்.

‘சுயநிர்ணய உரிமை கோரும் பயங்கரவாதிகள்’ என்பதே வல்லரசாளர்கள் எமக்கு வழங்கும் கலாநிதி பட்டம்.

ஆகவே கல்லறைச் செய்திகள் சொல்லும், எளியோரை வலியோராக்கும் சாத்தியங்களைத் தேடுங்கள்.

மக்கள் சக்தியின் முன்னால் , மாபெரும் சாம்ராஜ்யங்கள் அடிபணிந்து போனதை கவனியுங்கள்.

அரசியல் பார்வை

இதயச்சந்திரன்

இயங்காமல் இருப்பது மாற்றத்தைக் கொண்டு வராது. இயங்கு தளத்தினை அழிப்பதுதான் ஒடுக்குமுறையாளனின் நோக்கம்.

அடிபணிவு அரசியல் முழு இனத்தையும் அழித்துவிடும். எம்மினம் அழியப்போகிறதா , இல்லையேல் மீண்டும் நிமிரப்போகிறதா என்பதனை நாம்தான் தீர்மானிக்க வேண்டும்.

அவர்களின் இலட்சியம் தோற்கடிக்கப்படவில்லை. இலட்சியம் நிறைவேறும்போதுதான் அவர்களை வரலாறு பதிவு செய்யும். அதற்காக நாம் என்ன செய்யப்போகிறோம்?.

வீழ்வது தவறல்ல. வீழ்ந்தபின் எழாமல் இருப்பது தவறு. அதைவிடத் தவறு , ஒடுக்குபவனின் தோளைப் பற்றிப் பிடித்து எழுவது.

நம் மாவீரர்கள் பற்றிப்பிடித்தது, ஒரு தேசிய இனத்தின் பிறப்புரிமையை.

அவர்களின் இலட்சியம் தோற்கடிக்கப்படவில்லை. இலட்சியம் நிறைவேறும்போதுதான் அவர்களை வரலாறு பதிவு செய்யும். அதற்காக நாம் என்ன செய்யப்போகிறோம்?.

தலை நிமிரும் நாள் வரட்டும் !

மரணம் கூடு கட்டிய மரங்கள்,,
முறிந்து விழுகின்றன!
பூரண சந்திரனின் வெளிச்சம்,
புதைகுழிகளின் ஓரங்களில்,
பட்டுத் தெறிக்கின்றது!
மழை வெள்ளம் தேங்கிய,
குழிகளின்,மத்தியில்,,
கார்த்திகைப் பூக்களின்,,
கைவிரல்கள் அசைகின்றன!
அமைதியடையாத ஆத்மாக்கள்,,
உலகத்தை நோக்கிக்,
கரங்களை விரித்து,
நியாயம் கேட்கின்றன!

உண்மைகள் நிதர்சனமாகி,
உலகை உலுக்குகின்றன!
கண்கள் கட்டப்பட்ட,
நீதித் தேவதைக்கும் கூடக்,
கல்லறை கட்டப்பட்டது!
பாலைவனக் காற்றாகிச்,
சுட்டெரிக்கிறது உண்மை!
ராமா, ராமா என்று,
உரக்கக் கத்திய அணிலுக்கு,
ராம பாணமே குருதி,
குடித்து நிற்கின்ற உண்மை,
கனலாய் எரிக்கிறது!

நரிகள் சேர்ந்து விளையாடிய,
நவீன சதுரங்கத்தில்,
நர பலிகளாகிப் போய்விட்டன,,
நமது தாயக்கட்டைகள்!
எறிகணைகள் வீசிய,
கோரத் தீ நாக்குகளில்,
எரிந்து போயின எம் சொந்தங்கள்!
விதவைகள் விடும் பெருமூச்சில்,
வெந்து போகின்றன நெஞ்சங்கள்!
குதறி எறிந்த ஓநாய்கள்,
கெக்கலித்துச் சிரிக்கின்றன!

போனது போகட்டும்,
புதியதொரு விதி செய்வோம்!
போர்க்குற்றவாளிகளைப்,
புயலெனத் துரத்திடுவோம்!
நானென்றும், நீ என்றும்,
நமக்கிடைடையே பேதமின்றி,
நாமென்று சேர்ந்திடுவோம்!
நாளையப் பொழுது,
நமக்காக விடியட்டும்!
தமிழென்று மரித்தவரின்,
தாகங்கள் தீரட்டும்!
தரணியில் மீண்டும்,
தலைநிமிரும் நாள் வரட்டும்!.

- புங்கையூரன்

Immigration | Asylum | Family | Criminal Defence | Civil Litigation

Expert in Criminal Defence Services.
24 Hour Police Station Attendance
Magistrates' & Crown Court Representation

Contractual Disputes
Matrimonial - Divorce ancillary relief matters
Emergency Injunction

Immigration Law Specialists
Asylum & Immigration
Bail Application (Immigration Detention)
Removals, Deportation
Judicial Review & Emergency Injunction

Civil Litigation

We offer Legal Aid (FREE) in Crime, Immigration and Asylum matter

அகதி விண்ணப்பம், குடிவரவு, குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இலவசமான சட்ட உதவிக் கொடை கொடுக்கப்படும்

Criminal Defence Service | Community Legal Service | The Law Society Accredited Immigration & Asylum

RAJ LAW SOLICITORS
169, Tooting High Street, London, SW17 0SY Tooting Broadway
Tel: 0203 133 0000 | Fax: 0203 133 0092 | www.rajlaw.co.uk
We are authorised and regulated by the Solicitors Regulation Authority (No. 421 980) Mail : info@rajlaw.co.uk

Emergency
079 4764 1876
079 1225 3418

உறுதியின் பெயரால் ஒன்றிணைவோம்...

சுகி

(ஒருபேப்பருக்காக)

இயற்பெயர் மதீந்திரன். 1983 விடுதலை புலிகள் இயக்கத்தில் இணைந்தபோது வைக் கப்பட்ட பெயர் ரேகன். இந்தியாவில் 2வது பயிற்சிப் பிரிவில் வாசு, குமரப்பா, ரஞ்சன் லாலா, பானு அவர்களோடு இந்தியாவில் பயிற்சி பெற்று ஸ்ரீலங்கா படையினருடனான ஆரம்பகால தாக்குதலில் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் வன்னிப் பகுதிகளில் ஈடுபட்டார். அவர் 1990 இல் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து விலகும் போது ஒரு இடைநிலை தளபதி நிலையில் உயர்ந்திருந்தார். மீண்டும் விடுதலைப்புலிகள் புலம்பெயர் நாடுகளில் தமது கட்டமைப்புக்களை மீள் அமைப்பு செய்த போது, பரிதி என்ற பெயரோடு பிரான்ஸ்சின் செயற்பாட்டாளராக இணைக்கப்பட்டு செயற்பட்டார். 2007 - 2010 வரை பிரான்ஸ் அரசாங்கத்தால் விடுதலைப்புலிகள் அமைப்புக்கு நிதி சேகரித்தவர் என்ற குற்றச்சாட்டின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டு 2010 இல் பல நிபந்தனைகளுக்கு மத்தியில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

பரிதி அண்ணாவின் படுகொலை செய்தி கிடைத்ததும் என் மூளைக்குள் இரண்டு விடையங்கள் சுள் என்று உறைந்தது

ஒன்று, ஒரு விருட்சமாக வளர்ந்து நீதி நிர்வாக, காவல் கட்டமைப்புடன் ஒரு நிர்வாக அரசை (De-facto state) நடாத்தி வந்த விடுதலைப்புலிகள் அமைப்பை, அமைதிப் பேச்சு வார்த்தை என்ற சக்தியைப் பாவித்து 2002இல் இருந்து 2009 வரை இழுந்து கொண்டுவந்து இராணுவ அரசியல் நிலைமைகளை தங்களுக்கு சார்பாக, ஒரு இனத்தின் படுகொலைக்கு தயாரான களமாக மாற்றிவிட்டு, வெளியேறி விட்டார்கள். ஸ்ரீலங்கா அரசு கொன்றொழித்த போது, எல்லா அமைதி பேச்சுவார்த்தைதாரிகளும் நிரந்தரமாகவே அமைதியாகி விட்டார்கள். மீண்டும் கொலைக்களம் நிறைவேறி முடிந்ததும் இப்போ அவர்களின் சட்டங்கள் திட்டங்களை தூசி தட்டிக்கொண்டு ஸ்ரீலங்காவை விசாரிக்க வந்து நிற்கிறார்கள். ஆக மொத்தத்தில் தமிழனுக்கு ஒரு எதிரி இல்லை பல எதிரிகள் என்பதும், அதில் யார் யார் எல்லாம் தமிழரை அழிப்பதில் பங்கேற்றார்கள் என்பதுவும் அரசியல் உன்னிப்பாக அவதானிப்பவர்களுக்குத் தெரியும்.

இப்போ அண்மையில் உலக தமிழர் மா நாடு ஒன்று சர்வதேச சுயாதீன விசாரணையை (international independent investigation) வலியுறுத்தி பிரித்தானிய தமிழர் பேரவையினால் ஒழுங்கு படுத்தப்பட்டு நடைபெற்றது அதில் பல அரசியல் கட்சிகள் பங்கேற்றன. இந்தியாவில் இருந்தும் பல கட்சிகள் வந்து பங்கேற்றன. சுயாதீன விசாரணையை என்று ஒன்று வந்தால் இந்தியாவின் வகிபாகமும் தெரியவரும். அத்தோடு நாட்டில் நடந்த போர்குற்றங்களும் அலசி ஆராயப்பட்டு விசாரிக்கப்படும், அரசு தரப்பின் போர்குற்றங்கள் விசாரிக்கப்பட்டு. போர்குற்றங்கள் செய்தவர்கள் தண்டிக்கப்படலாம். ஆளும் கட்சியில் மாற்றம் வரலாம், சர்வதேசம், சர்வதேச சுயாதீன விசாரணையை மேற்கொண்டால் அது எமக்கு இப்போ நண்பன் என உருவகித்து விட முடியாது. எமக்கு நிரந்தரமாக உள்ளது எமது கொள்கையும், இலட்சியமும் தான், உலக அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை, நிரந்தர எதிரியும் இல்லை. ஆளும் கட்சி மாற்றம், தமிழர் தலைவிதியை மாற்றியதில்லை. அது வரலாறு. இனப்படுகொலையை நிறுத்த வேண்டும்,

எமது மண்ணில் நாம் புலிகள் என்பதற்காக அழிக்கப்படவில்லை, நாம் விடுதலைப் புலிகள் என்பதற்காக கடலில் இருந்து எமது இருப்பிடங்களுக்கு பீரங்கி அடிக்கப்படவில்லை, நாம் விடுதலைப் புலிகள் என்பதற்காக பலாலி முகாமில் இருந்து எமது குடியிருப்பை நோக்கி செல் அடிக்கப்படவில்லை. நாம் தமிழர் என்பதற்காக அடித்தார்கள். அவர்கள் பார்வையில் தமிழர் எல்லோருமே விடுதலைப் புலிகளாகவே தெரிந்தார்கள்.

இரண்டாவது செய்தி, அக்கொலைக்கரங்கள் பலவடிவங்களில் புலம்பெயர் தேசங்களிலும், தமிழர் வாழும், தமிழரின் உரிமைக்காக குரல் கொடுக்கும் இடங்களில் எல்லாம் நீளும் செய்தி, அச்செய்தியைத்தான் எனக்கு பரிதி அண்ணாவின் கொலைச்செய்தியைக் காவிவந்தது.

இது ஒட்டு மொத்த தமிழ் சமுதாயத்தாலும் உள்ளிருந்து வெளிநோக்கிய பார்வை (thinking out of the box) ஆகப் பார்க்கப்பட வேண்டியது. சர்வதேசத்தினதும், ஸ்ரீலங்காவினதும் பார்வை புலப்பெயர் மக்களில், அவர்களது இயக்க சக்தியில் திரும்பியுள்ளது. விலை போர்களை விலை கொடுத்து வேண்டுகின்றார்கள், பதவிக்கு அலைபவர்களை பதவி கொடுத்து வேண்டுகிறார்கள், ஒவ்வொருவருனதும் பலவீனங்களுக்கு பட்டியல் போட்டு பார்கிறார்கள். புலம்பெயர் தேசியவாதிகளுக்குள் பிரிவை கொண்டு வருகிறார்கள், ஒவ்வொன்றையும் அவரவர் பலவீனங்களுக்கு அமைய இரண்டாகவோ, நாலாகவோ உடைக்கின்றார்கள். எல்லோரையும் நன்றாக அறிந்து வைத்திருக்கிறார்கள். ஒட்டுமொத்த தேசியத்தைப்பற்றி கதைக்காமல் அவர்அவர் சார்ந்த அமைப்புக்கள், குழுக்கள், நிறுவனங்கள், பாடசாலைகள், விளையாட்டுப்போட்டிகள், சமூகநல நிறுவனங்கள், கோயில்கள், பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், அரசியல் கட்சிகள் என்று எண்ணக் குவியல்களை, உள்நோக்கி குவிக்கிறார்கள் (thinking insight the box). தன்மை உணர்ச்சியால் (ego, self image) போன்றவற்றால் அலைந்துலைகிறார்கள். எமக்குள்ளே இப்பிரிவை வெளிச்சக்திகள் நன்றாகவே வளர்க்கின்றன, பாவிக்கின்றன. பிரித்தாளும் கலை, அது அவர்களுக்கே உரித்தானது, அதனால் தான் இந்தப் பெரிய வளங்கள் நிறைந்த, மனித வளத்திற்கும் குறைவில்லாத ஆபிரிக்கா கண்டமே அலைந்துளைந்துள்ளது. இப்போ புலம்பெயர் சமூகமான நாமும் அலைந்துலைகிறோம்.

நாம் எம் தேசியத்திற்காக வேலை செய்பவர்களையும், அவர் தம் செயல்பாட்டையும் இனங்கண்டு, தேசியத்தின் பால் இணையவேண்டும். கந்தசாமிக்கு எதிரி பொன்னுச்சாமி என்று இருந்தால் பொது எதிரி இரண்டுக்கும் இடையில் குளிர்காய்வான். தேசிய செயற்பாட்டாளர்களின் செயற்பாட்டுக்கு வலுச்சேர்க்க வேண்டும். அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

பரிதி அண்ணாவை போனவருடம் இதே காலப்பகுதியில் வெட்டிக் கொலை செய்ய எத்தனித்தார்கள். அவர் வெட்டுகாயங்களோடு உயிர்பிழைத்துவிட்டார். அவர், அவருக்கு இட்ட பணியில் இருந்து விலகாது, தொடர்ந்தும் அதையே செய்து வந்தார் . அது அவரின் நெஞ்சுறதியைக் காட்டுகின்றது.

“I hope my assassination will be seen not as a defeat of freedom but an inspiration for those who survive to step up their efforts” நான் கொல்லப்பட்ட செய்தி சுகந்திரத்திற்கான தோல்வியாகப் பார்க்கப்படக் கூடாது மாறாக அது தொடர்ச்சியாக போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் உந்து சக்தியாக பார்கப்படவேண்டும்’

இது சண்டே லீடரின் பொறுப்பாசிரியராக இருந்த லசந்த விக்கிரமதுங்க எழுதிய ஆசிரியர் பகுதியின் தலையங்கம். அவர் சிறீலங்கா அரசினால்படுகொலை செய்யப்பட்டதன் பின்பு மூன்றாம் நாள் அவரின் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. கொலை அச்சுறுத்தல் மத்தியிலும் தொடர்ந்து வேலை செய்த பரிதி அண்ணாவின் செயற்பாடும், எமக்கு இதையே காட்டி நிற்கிறது.

மாவீரருக்கு நாம் செய்யும் கைமாறு என்ன ?

கனக.ஜனார்த்தனன்

தமிழ் மக்களின் சரித்திரத்திலேயே அதி முக்கியம் பெற்ற நாள் மாவீரர் தினம் ஆகும். அது உலகத்தமிழர் அனைவரும் (ஈழத்தமிழருடன் ஒன்றிணைந்து) பெருமையுடன் போற்றும் நாள். தமிழ்நாட்டு அறிஞர்கள் புறநானூற்று இலக்கியத்தின் செயல்வடிவம் என ஈழப்போரை விபரித்தனர். அன்றைய குதிரைத் தேர், யானை, காலாட்படையாலான நாற்படைகளை இன்றைய தரை, நீர், வான்படைகளினூடாக முப்படைகளுடன் ஒப்பிட்டனர். இது கற்பனையோ அல்லது கட்டுக்கதையோ அன்று. தமிழன் ஒவ்வொருவனையம் மெய்சிலிர்க்க வைக்கும் ஒரு உண்மை. இத்தகைய பெருமையை எமக்குத் தேடித்தந்த அந்த மாவீரர்களுக்கும் அவர்களின் சுயநல மற்ற அற்பணிப்புக்கும் எம்மால் பதில் கூற முடியமா? அவர்களின் தாகத்தைத் தணிக்க நாம் செய்யக் கூடிய பிரதியுபகாரம் யாது என்பதே நாம் சிந்திக்க வேண்டிய விடயம்.

எமது தன்னம்பிக்கையை வளர்த்து மாவீரரின் கனவை நனவாக்குதற்கு முதலில் நாமே எம்மை தயாராகவும் தகுதியாகவும் கொண்டு வருவதே அவர்களுக்குச் செய்யும் பெரிய கைமாறு.

இன்று எம்முள், சிலர் இத்தகைய ஒரு கேள்வியைப் பற்றிச் சிந்திப்பதற்கே பின்வாங்கலாம். சிலர் அஞ்சலாம். ஏன், இன்னும் சிலர் வெறுக்கவும் கூடும். ஆனால் அதற்காக தகுந்த காரணமில்லாமல் அவர்களை நாம் குறைகூறவோ புறக்கணிக்கவோ முடியாது. ஏனெனில், அவர்கள் எழுப்பும் கேள்விகளிலும் நியாயம் இருக்கலாம். அதுவே அதற்கு முக்கியமான காரணமாகும்.

அன்று எனது சிறு பிராயத்தில் என்னை மிகவும் கவர்ந்த ஒரு திரைப்படப்பாடல் இன்னும் ஞாபகம் வருகிறது. 'ஒரே கேள்வி ஒரு கேள்வி..' ஒரே பதில் ஒரு பதில் என்பதே அந்தப் பாடல். இதனுடன் ஒப்பிட்டால் இன்றைய கேள்விகளுக்கு யாராலும் ஒரே பதில் கொடுக்க முடியுமா? தலைவர் இருக்கிறாரா என்று கேட்டால் ஆம், இல்லை, இருக்கலாம், எனக்குத் தெரியாது. என நான்கு விதமான பதில்கள் காற்றில் மிதந்து எம்மை உறுத்துகின்றன. தமிழீழம் கிடைக்குமா? என்று கேட்டால் கிடைக்கும் கிடைக்க வேண்டும் கிடைக்கலாம், காலம் தான் பதில் சொல்லும் என பல பதில்கள் இத்தகைய பரிதாபமான மனோ நிலைக்கு எமது இனம் இன்று தள்ளப்பட்டதற்கு என்ன காரணம்?

இத்தகைய முக்கியமான விடயத்தைப் பற்றிச் சிறிதளவாவது சிந்திப்பதற்கான வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்ச்சி. மேற்கூறிய விளைவுகளைப் பற்றி ஆராய்ந்தால் இரு வித காரணங்கள் அவற்றின் பின் உள்ளன எனக் கருத இடமுண்டு. அவற்றை இங்கு புறநோக்கு, அக நோக்கு எனப் பிரித்து நோக்கலாம் எனத் தோன்றுகிறது.

புற நோக்கு என்று கூறும்போது வெளிப்படையாக எமக்கு நேரடியாகத் தென்படும் விடயங்களைக் குறிப்பிடலாம். இன்றைய தமிழ் மக்களில் பெரும்பாலானோர் இத்தகைய புறக் காரணங்களினால் மதிமயங்கி நிலைக்கு வந்து செயலிழந்து நிற்கின்றனர் எனில் அது மிகையாகாது.

இவற்றிற்கு ஏதுவாயிருக்கும் சில முக்கிய காரணிகளாவன.

1.சில துரோகக் கும்பல்களின் விஷமத்தனமான அரசியல் பரப்புரைகள்

2.இலங்கை அரசினதும், அதன் தூதரகமும் மற்றும் அதன் அடிவருடிகளும் மேற்கொள்ளும் பணவலிமையின் பின்புறத்தில் ஏவப்படும் பரப்புரைகள்.

3. உலக அரசியலில் பலம் பொருத்திய பல நாடுகளினதும் மாற்றமில்லாத பிடிவாதக் கொள்கைகள்

4. முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் பின் விளைவாகத் தமிழ் மக்களிடையே தொடர்ந்து நிலவி வரும் சோர்வு, தாழ்வு மனப்பான்மையும் அதனையடுத்து அரசியலைப் பற்றியேனும் சிந்திப்பதில் ஆர்வக்குறைவும் சலிப்பும்

5. மேற்கூறியதுபோல விரக்தியடைந்த தமிழினத்தின் மீது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல தொடர்ந்தும் இலங்கை அரசாங்கம் புலம்பெயர் நாடுகளில் புரியும் படுகொலைச் சம்பவங்கள் ஒரு தற்காலிகப் பின்னடவை ஏற்படுத்தலாம். சமீபத்தில் நடைபெற்ற பரிதி எனும் உணர்வாளரின் கொலை ஓர் எடுத்துக்காட்டாகும். தமிழீழ வரலாற்றில் இத்தகையசம்பவங்கள்புதியவைஅல்லஎன்பதனால் இலட்சியத்தை அடைய விரும்பும் தமிழ் மக்கள் இவற்றினால் பின்னடைய மாட்டார்கள்.

6. பல தமிழ் சார்ந்த தமிழ் ஊடகங்களின் சுயநலப்போக்கு

எனினும் இவை எல்லாவற்றிற்கும் நடுவில் ஆங்கிலத்தில் Every dark cloud has a silver lining என்பதுபோல் எந்தக் கரிய முகிற்கூட்டத்தின் நடுவேயும் ஒரு மின்னல் கீற்று இருக்கலாம். எமது இளையவர்கள் அரசியல் களத்தில் படிப்படியாக உள்ளிறங்கிப் பணியாற்றுவது ஊக்கமளிக்கிறது. இது அனைவராலும் வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும்.

அக நோக்கு என்று கூறும்போது, அது புற நோக்கைப்போல் உலகில் நடைபெறும் நிகழ்வுகளை எடுத்துப் பார்ப்பதுடன் நின்றுவிடாது, அவற்றின் பெறுபேற்றை ஓரளவு தத்துவ ரீதியாக நோக்குதல் எனலாம். இப்படி அணுகும் போது விஞ்ஞான ரீதியில் அணுகுவதுபோல் நூற்றுக்கு நூறு விகிதமாக நிரூபணம் அமைக்கும் வாய்ப்புக்கள் கிடைக்காவிடினும், சமய, தத்துவ, தர்க்க ரீதியில் ஓரளவுக்குத் திருப்திகரமான பெறுபேற்றை எதிர்பார்க்கலாம்.

தமிழீழ விடுதலைப் போரைப் பல நாடுகள் பயங்கரவாதம் எனக் கொச்சைப்படுத்த முயன்ற போதும், அது அரசியல் அடிப்படையில் ஏற்பட்ட தார்மீக யுத்தம்? எனப்பல அரசியல்வாதிகளும், மனிதநேய அமைப்புகளும் ஏற்றுக்கொண்டு வருகின்றனர். தந்தை செல்வா அன்று சத்தியாக்கிரக வழியில் ஆரம்பித்துப் பின் தேசியத் தலைவரால் தர்ம யுத்தமாக மாற்றப்பட்ட போர், தமிழ் மக்களின் நீதி, நியாயம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதென்பதை எவரும் மறுக்க முடியாது உலகில் இதற்கு முன்பும் எத்தனையோ விடுதலைப் போர்கள் நடைபெற்றுப் பல வெற்றியும் கண்டன. ஆனால் மகா பாரதத்தில் அபிமன்யுவை எல்லாப் போராளிகளும் சுற்றி அழித்தது போன்று, உலகநாடுகள் பலவும் இலங்கை அரசுடன் ஒன்று சேர்ந்து முள்ளிவாய்க்காலில் 300,000 தமிழ் மக்களை அழித்தும், சித்திரவதைக்கும் மறியலுக்கும் உள்ளாக்கியதோடு விவுக்குண்டுகளால் அழித்தும், சரணாகதியடைந்தவர்களைக் கொன்றும், யுத்த தர்மத்தையே ஒரு கேலிக் கூத்தாக்கியதை தமிழ் மக்கள் மறக்க மாட்டார்கள்.

மேற்கூறிய போர் முடிந்து விட்டதென சிங்கள அரசும், அதற்குதவிய நாடுகளும் எக்காளமிட்டு வெற்றிக் கொண்டாட்டம் நடாத்தி ஒரு வருடமாகின்றன. ஆனால், இத்தகைய அநீதிக்கும் பதில் கிடைக்கவில்லையா? கிடைக்காதா? ஏன்ற ஆதங்கம் தமிழ் மக்களிடையே பரவலாக உள்ளது.

இத்தகைய கேள்விகளுக்கு விடை கிடைக்காது எனப் பலர் நினைக்கலாம். எனினும் நிச்சயமாக விடை உண்டு. அந்த விடை உள்ளங்கனி நெல்லிக்கனி போல சுலபமாக விளங்கிக் கொள்ளக் கூடியதன்று. நாம் இவ்விடையை எமக்குள்ளே தேடியே பெற வேண்டும். இன்று நம்முன் பலர் பகவத்கீதையை நம்புகிறோம். கர்மத்திற்குப் பிரதி பலன் உண்டு என்கிறோம். சாஸ்திரங்களின் பலன்யாதும் முன் வினை. ஊழ்வினை பயன் என்று சமாதானம் சொல்கிறோம். ஒன்றையும் நம்பாவிட்டாலும் நியூட்டன் எனும் விஞ்ஞானி கூறிய ஒவ்வொரு செயலுக்கும் பதிலாக எதிர் வினையுண்டு என்பதை நம்பியே ஆகவேண்டும். ஆனால் நடைமுறையில் எமது அர்ப்பணிப்புகளுக்கும் ஓர் பதில் வரவேண்டும் என நம்ப மறுக்கிறோம் அப்படி மறுக்கும் போது நாம் எம்மையே ஏமாற்றுகிறோம்.

எனினும் இன்றைய யதார்த்த நிலையை எடுத்துப் பார்த்தால் வெறுமனே வேதாந்தங்களையும் நம்பிக்கையும் கற்பனைகளையும் வைத்திருந்தால் மட்டும் தமிழீழம் கிடைத்துவிடாது. அவற்றை நடைமுறையிலும் சிறிதளவாவது கொண்டுவரவேண்டும். 2009 முள்ளிவாய்க்காலில் எமது மக்களுக்கெதிராக சதியில் இயக்கிய சக்திகள் அனைத்தும் சிறிது சிறிதாக தமது தார்மீகக் கடன்களை நிறைவேற்றத் தொடங்கியதை எமக்கு முன்னே பார்க்க முடிகிறது.

போர் முடிந்து விட்டதென சிங்கள அரசும், அதற்குதவிய நாடுகளும் எக்காளமிட்டு வெற்றிக் கொண்டாட்டம் நடாத்தி ஒரு வருடமாகின்றன. ஆனால், இத்தகைய அநீதிக்கும் பதில் கிடைக்கவில்லையா? கிடைக்காதா? ஏன்ற ஆதங்கம் தமிழ் மக்களிடையே பரவலாக உள்ளது.

இது எமது கற்பனைக்களுக்கும் சிந்தனைக்கும் அப்பாற்பட்ட ஒரு ஒழுங்கமைப்பில் உலகம் செல்வதை எடுத்துக் காட்டுகின்றன. காலப் போக்கில் உலகநாடுகளின் அரசியல் நீரோட்டத்தில் தமிழீழத்தை உருவாக்க வேண்டிய ஒரு ஒழுங்கமைப்பு இயற்கையாகவே ஏற்படும. அதுவரை மனம் தளராது எமது கடமைகளை எம்மால் முடிந்த வரை தொடர்ந்து செய்ய வேண்டும் என்பது கண்கூடு அப்படி நடக்கும் போது மாவீரர்களுக்கு நாம் எத்தனையோ விதத்தில் எமது நன்றிக்கடனை செலுத்த வாய்ப்புக்கள தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும். அவற்றை இங்கே பட்டியல் இட்டு வாசகர்களின் பொறுமையை சாதிக்க வேண்டியதில் எமது தன்னம்பிக்கையை வளர்த்து மாவீரரின் கனவை நனவாக்குதற்கு முதலில் நாமே எம்மை தயாராகவும் தகுதியாகவும் கொண்டு வருவதே அவர்களுக்குச் செய்யும் பெரிய கைமாறு.

விகடனும் ஈழப்பிரச்சினையும்

"விடு தம்பி!"

பேட்டி வெளியான பிறகு மீண்டும் வித்யாராணியிடம் பேசினோம். மிகச் சில வரிகள் மட்டும் பேசினார். அவை அப்படியே....

"பல பேர் பலதும் கதைப்பாங்கள் எண்டு எனக்கு முதலே தெரியும் தம்பி... அதுதான் என்னத்துக்குப் பேட்டி எல்லாம் எண்டனான். இப்ப இதப் படிச்சுப்பிட்டு சுத்துறவையைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. அவைக்கு நான் பிச்சை எடுத்தா, பிரச்னை இல்லை. ஆனா, நான் விபசாரம் செய்தா அது பிழையாமாம். இத யாரிட்ட சொல்லி நான் அழ? விடு தம்பி... நான் விபசாரியாவே இருந்துட்டுப் போறேன்!"

இலங்கைத் தமிழர்களுக்காக தமிழீழம் அமைப்பது...

		%
சரியான தீர்வு	2,326	55.44
தேவை இல்லை	416	9.91
சுயாட்சி அதிகாரம் கொடுத்தால் போதும்	1,453	34.63

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு விதிக்கப்பட்ட தடை....

		%
தொடர வேண்டும்	1,151	27.43
தடையை நீக்க வேண்டும்	1,999	47.65
பொறுத்திருந்து பார்க்கலாம்	1,045	24.91

வேல் தர்மா

(ஒரு பேப்பருக்காக)

அக்ரஹாரத்தில் அடைபட்டுக்கிடக்கும் எழுத வாசிக்கத் தெரிந்த பெண்களைக் குறி வைத்து ஆரம்பிக்கப்பட்ட ஆனந்தவிகடன் சஞ்சிகை இன்று வளர்ந்து பரந்துவிட்டது பல சஞ்சிகைகள் தொலைக் காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பு என்று அதன் வியாபாரம் விரிவடைந்துவிட்டது. தமிழ் நாடு தமிழர்களுக்கே என்ற குரலை எலிவளை எலிகளுக்கே என்று கிண்டலடித்த 'தேசிய' தமிழ் விரோத சஞ்சிகை விகடன்.

விகடனின் நிலைப்பாடு நஞ்சுத்தனமான நடுநிலை2008இல் விகடன் விடுதலைப் புலிகளைப் பற்றியும் ஈழத்தைப் பற்றியும் ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடாத்தியது. அதன் முடிவுகள் பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. முடிவுகள் புலிகளுக்கும் ஈழத்திற்கும் பலத்த ஆதரவு இருப்பதை எடுத்துக் காட்டியது. அதன் பிறகு விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை ஒரு நடுநிலையாளனாகவும் ஈழத்திற்கு ஆதரவாளன் போலவும் தன்னைக் காட்டிக் கொள்ளும்படி தொடர்ந்து பல கட்டுரைகளை ஆனந்தவிகடனிலும் ஜூனியர் விகடனிலும் மட்டுமல்ல அவள் விகடனிலும் வெளிவிட்டது. இதில் விடுதலிப் புலிகள் மிகப் பலமுள்ளவர்களாகப் பொய்யாகப் பல தகவல்கள் வெளியிடப் பட்டது. கட்டுரை ஏதோ ஈழ ஆதரவாகத்தான் இருக்கும். வியாபாரம்!!! ஆனால் விகடனின் 'அரசவை' பின்னுட்டக் காரர்களான பாலா, தமிழ் யூகே, வெங்கி, ஹரிஹரன், பார்த்தசாரதி ஆகியோர் மூலமாக விடுதலைப் புலிகளுக்கு எதிராக பற்பல நஞ்சுகள் கக்கப்படும். பின்னூட்டத்தில் ராஜபக்சே தமிழ் நன்கு படித்தவர் என்று கூடப் பொய் சொல்லப்பட்டது. இவர்கள் புலிகளுக்கு எதிராக எந்த விதமான பொய்க் கருத்துக்கள் கூறப்பட்டாலும் அவை பிரசுரிக்கப் படும். விகடனின் நிலைப்பாடு நஞ்சுத்தனமான நடுநிலை.

◆ மெய்யும் நச்சுப் பொய்யும்

ஐந்து உண்மைகளை நீ சொல்லிவிட்டு ஆறாவது பெரும் பொய்யைச் சொன்னால் அதை பலரும் நம்ப வாய்ப்புண்டு. இந்த தந்திரத்தைத் தான் விகடன் குழும சஞ்சிகைகள் கையாள்கின்றன. ஈழ விடுதலைக்கு ஆதரவு போல் சில கட்டுரைகளை வெளியிட்டு விட்டு பின்னர் ஈழ விடுதலையில் நஞ்சை அள்ளிக் கொட்டும் கட்டுரையை விகடன் வெளிவிடும் அந்த வகையில் "நேற்று... நான் விடுதலைப் போராளி! இன்று... பாலியல் தொழிலாளி." என்ற கட்டுரையை ஆனந்தவிகடனின் நவம்பர் முதல் மாத இதழில் வெளியிட்டுள்ளது அதில் ஒரு முன்னாள் பெண் போராளி போரின் பின்னர் சிங்களப் படையினராலும் அரசியல்வாதிகளாலும் கற்பழிக்கப்பட்டு பின்னர் விடுதலையானபின் சமூகத்தால் ஒதுக்கப்பட்டு இப்போது பாலியல் தொழில் புரிவதை வெளிப்படுத்தியுள்ளது. இந்திய உளவுத் துறை முன்னாள் பெண் போராளிகள் பாலியல் தொழிலில் ஈடுபடுவதாக தனது கைக்கூலிகள் மூலமாக பரப்புரை செய்வதாக சந்தேகிக்கப்படுகிறது. இதில் விகடனும் இணைந்து கொண்டதா?

◆ விகடனின் கட்டுரையின் நோக்கம் வேறு

விகடன் பாதிக்கப்பட்ட பெண் போராளியின் அவலத்தை அம்பலப்படுத்தியது. ஆனால் அப்போராளிக்கும் அவரைப் போன்ற மற்றவர்களுக்கும் எப்படி விமோசனம் அளிக்க முடியும் அதற்கு தமிழ்நாடு அரசோ அல்லது இந்திய மைய அரசோ என்ன செய்ய வேண்டும் என்று விகடன் கூறவில்லை. அதற்கு ஏற்ப இந்த நிலைமைகளை விகடன் இந்திய வெளியுறவுத்துறையின் கவனத்திற்கு கொண்டு செல்ல முயலவில்லை. அல்லது பன்னாட்டு தொண்டர் நிறுவனங்களின் கவனத்திற்கு கொண்டு செல்ல முயலவில்லை. அல்லது தானே ஒரு தானே புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் செய்தது போல் ஒரு நிதி திரட்டும் திட்டத்தை ஆரம்பிக்கவில்லை. அல்லது இப்படிப் பாதிக்கப்பட்டவர்களுக்கு விமோசனம் கிடைக்க என்ன செய்ய வேண்டும் என்ற கருத்தை முன்வைக்க வில்லை. மாறாக கட்டுரை சொல்வது இதுதான்:

1. இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகள் சிங்களப் பேரினவாதிகளின் முகவர்கள் அல்லது விகடனின் தமிழில் 'ஏஜெண்டுகள்'.

2. தமிழர்கள் தோற்றுவிட்டார்கள் என்ற உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

3. பிரபாகரன் இறந்து விட்டார்.

4, இனி ஒரு போராட்டம் வேண்டாம்.

5. இந்தியத் தலைவர்கள் ஈழத் தமிழர்களை வைத்து வியாபாரம் செய்வதை நிறுத்த வேண்டும்.

6. தமிழின உணர்வாளர்கள் ஆன்மாவை விற்கிறார்கள்.

7. ஈழத்தில் இன்னொரு போர் வேண்டும் என்று கூறும் நண்பர்களே... உங்களுக்குப் போர் எவ்வளவு வலியானது என்று தெரியுமா? போர் எவ்வளவு கொடுமையானது என்று தெரியுமா? கண் எதிரே ஷெல் பட்டு இறந்துபோன பெற்றோரின் உடல் களைக்கூடத் தகனம் செய்ய முடியாமல் உயிருக்கு அஞ்சி ஓடிய எம்மவர்களின் வாழ்க்கையைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா? தாய் இறந்ததைக்கூட அறியாது தாயிடம் முலைப் பால் குடித்த குழந்தையின் அவலத்தை நீங்கள் கண்டதுண்டா? கர்ப்பிணித் தாயின் வயிறு வெடித்து, தாயும் நிறைமாத சிசுவும் அருகிலேயே கணவரும் துடிதுடித்த அவலத்தை நீங்கள் கண்டது உண்டா? கண்டிருந்தால், நீங்கள் ஈழத்தில் மட்டுமல்ல, உலகின் எந்த மூலையில் போர் நடந்தாலும் ஆதரிக்க மாட்டீர்கள்!"

இந்த 7 கருத்துக்களையும் பார்க்கும் போது இவை இந்திய மைய அரசின் இலங்கைத் தமிழர் தொடர்பான நிலைப்பாடு என்று புரிகிறது. இனி தமிழர்கள் போராடாமல் சிங்களவர்களுக்கு அடங்கிப் போகவேண்டும் என்ற இந்திய மைய அரசின் கருத்தை விகடன் நன்கு பரப்புரை செய்கிறது.

தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் ஈழப்பிரச்சனையை கையில் எடுக்கும் போது அதனால் பெரிதும் பாதிக்கப்படுவது ஆளும் காங்கிரசுக் கட்சி. அதற்கு எதிரான பரப்புரையை விகடன் நன்கு செய்கிறது.

ஈழப்பிரச்சனைக்கு இந்தியா காரணம் என்ற உண்மையை தமிழ்நாட்டு மக்கள் யாவரும் புரிந்து கொண்டால் அது இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்கு அச்சம் என்பதால் அதற்கு எதிரான பரப்புரையை விகடன் நன்கு செய்கிறது.

இந்தியாவில் சிறுபானமை இனங்களுக்கு எதிரான அடக்குமுறை நடந்தால் அதைப் பார்த்துக் கொண்டு தமிழர்கள் வாயை மூடிக் கொண்டு இருக்க வேண்டும் என்கிறது விகடன்.

உலகின் எந்த மூலையிலும் அடைக்கு முறை நடந்தால் தமிழர்கள் வாயை மூடிக் கொண்டு உணர்ச்சியற்ற பிண்டங்களாக இருக்க வேண்டும் என்கிறது விகடன்.

வீறு கொண்ட இந்தியக் கைக்கூலிகள்

விகடனின் கட்டுரையை பார்த்து வெளிநாடுகளில் இருக்கும் பல இந்தியக் கைக்கூலிகள் வீறுகொண்டு எழுந்துவிட்டனர். புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் பாதிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு எந்த ஆதரவும் கொடுப்பதில்லை என்ற பரப்புரையை தொடங்கி விட்டனர். விரைவில் வரவிருக்கும் 27/11 ஐ குழப்புவதை மையப் படுத்தி இவர்கள் பரப்புரை ஆரம்பித்துள்ளது இந்திய உளவுத்துறை நன்கு செயற்படுகிறது.

◆ போராளிகளுக்கு உதவ முடியாத நிலை

2009இல் போர் முடிந்த பின்னர் வெளிநாடுகளில் இருக்கும் தமிழர்கள் விடுதலையான போராளிகளுக்குப் பணம் அனுப்பினர். அவர்களுக்கு வெளிநாட்டுப் புலிகளிடம் இருந்து பணம் வருகிறது என்று சொல்லி அவர்கள் கைது செய்து காணமல் போகத் தொடங்கியதுடன். பணம் அனுப்புவது நிறுத்தப்பட்டது.

◆ பொய்யாக உருவாக்கிய பாத்திரம்?

போரின் பின்னர் கைதாகிய படையணித் தலைவர்கள் யாவரும் 'காணமல் போய்விட்டனர்'. கீழ் நிலையில் இருந்த போராளிகள் மட்டுமே விடுதலை என்ற பெயரில் வெளியில் விடப்பட்டு அவர்களது நடவடிக்கைகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. சோதியா படையணியின் குறிப்பிடத்தக்க தளபதியாக இருந்தவள் என விகடனிற்குப் பேட்டி கொடுத்தவர் கூறுகிறார். ஒரு படையணிக்கு ஒருவர்தான் தளபதி. இந்தச் சோதியா படையணியின் தளபதியான முன்னாள் போராளி இந்நாள் பாலியல் தொழிலாளி ஒரு கற்பனைப்பாத்திரமா என்ற கேள்வி எழுகிறது.

◆ எல்லாவற்றிற்கும் இந்தியாவே பொறுப்பு

இலங்கையில் கைத்துப்பாக்கிகளுடன் போராடிக் கொண்டிருந்தவர்களைப் பிடித்து பயிற்ச்சி கொடுத்து படைக்கலன்கள் கொடுத்து சிங்கள தமிழ் மோதலைத் தீவிரப்படுத்தியது யார்? தமிழர்கள் படைப்பலன் அடைந்தபோது ஆயுதத்தை ஒப்படையுங்கள் நாம் உமக்குப் பாதுகாப்புத் தருகிறோம் என்று சொல்லி ஏமாற்றியது யார்? உமா மகேஸ்வரனுக்கு வந்த ஒரு கப்பல் நிறைந்த படைக்கலன்களைப் பறித்தது யார்? தமிழர்களுக்கு எதிரான போரில் சிங்களவர்களுக்கு முழு உதவியையும் செய்தது யார்? 25 ஆண்டுகளாக 13வது திருத்தம் என்னும் கிலுகிலுப்பையை வைத்து ஏமாற்றுவது யார்? போரில் சிங்களவர்கள் வெல்ல வேண்டும் என்று தமிழ்நாட்டுக் கோவில்களில் யாகங்கள் செய்தது யார்? இறுதிப் போரின்போது இலங்கைக்கு கள்ளத்தனமாக இருபதினாயிரம் படைவீரர்களை அனுப்பி சிங்களவர்களைப் போரில் வெல்ல வைத்தது யார்? என்ற கேள்விகளிற்கு விடை கண்டுபிடித்தால் சோதியா படையணியின் முக்கிய தளபதியின் பாலியல் தொழிலாளியாக மாறியமைக்கு யார் காரணம் என்ற கேள்விக்குப் பதில் கிடைக்கும். ஆனால் விகடன் இந்தக் கோணத்தில் வைத்து பிரச்சனையை அணுகவில்லை. மாறக ஈழ விடுதலைக்கு ஆதரவு கொடுப்பவர்களைக் குற்றவாளியாக்குவதில் அதிக கவனம் செலுத்தியது.

(தொடர்ச்சி 24ம் பக்கம்)

கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?

தனிநபரோ... வியாபாரமோ...

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்

BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN

BBK PARTNERSHIP
www.bbkca.com
Email: admin@bbkca.com

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

'Nationhood and sovereignty non-negotiable'

says Gajendrakumar

GajendrakumarPonnambalam, the leader of Tamil National People's Front gave an extensive interview to TamilNet'sPalaka'ni channel. We reproduce the excerpts of his interview, which can now be seen on youtube. In his interview, Gajendrakumar asserted that Eelam Tamils were a nation and asserted their right to sovereignty, and outlined the Tamil National People Front's position as:

"The existence of the Tamil nation must be secured. The recognition of Tamil nationhood and its distinct sovereignty is non-negotiable, that is our party's position. As to how that status is going to exist, whether it is going to exist within a larger state, or within a larger country, so as in the country being a multi-national state, or whether the Tamil nation is going to exist as a nation state, is something the eventual peace process will decide. But our view, what is fundamental, is the recognition and the safe-guard of the Tamil nation."

> The recognition of Tamil nationhood and its distinct sovereignty is non-negotiable, that is our party's position.

Asked for his comments on the terminology used to describe Eelam Tamils as either a minority or nation, GajendrakumarPonnambalam said,

"The question is not whether in fact Tamils are a nation, they are. Under international law itself they qualify for nationhood. Everyone knows that, that's a fact in existence, but politically - here's the difference, not legally, but politically - not that many people would want to recognise that because there are serious consequences to such a recognition."

"So in reality we all know that international law is there on paper, but in practice it is international politics."

Speaking on the aspirations of the Tamil nation and the TNPF's view on proposed devolution of power within a Sri Lankan state, he asserted that devolution could not take place within a state that was apparently intent on the opposite, with increasing centralisation of power.

"[Sri Lankan state] is not going to devolve power. It is a complete opposite that's happening. The [Sri Lankan] state is centralising more and more power, and it is becoming more and more Sinhala Buddhist in character. If you look at since the time the British left the island of Sri Lanka, constitutionally this process has been taking place, as well as administratively it's been taking place. So the direction in which the current Sri Lankan state is transforming, is towards more centralisation and more Sinhala Buddhisation. That is the only transformational project that is taking place today."

"In that context to ask for devolution, that is asking this centralising state to devolve power, in my view, is ridiculous. I mean that means we are not learning anything from history. And it is this centralising and Sinhala Buddhisation process that is resulting in the genocide of the Tamil people. That is the only way, it is through the systematic, structural genocide of the Tamil people, that they can actually ultimately achieve that goal of a highly centralised Sinhala Buddhist state."

"So devolution is never going to happen."

Addressing the international community's opposition to a separate state, in favour of a federal structure, he commented:

"Even if we are to commit to a federal arrangement, you are not going to achieve that federalism through a process of devolution. Because the state is transforming in the opposite direction, so the existing state is non workable."

"You will have to have a clean break, and you will have to start afresh. Where you recognise the existing units - which is the Tamil nation which is sovereign in its own right, and the Sinhala nation which is sovereign in its own right - and the peace process is where these two negotiate to try and find a way which is mutually beneficial to both, to co-exist. That would be the solution."

"Today they [Sri Lankan state] have carried out a war, to the extent of being accused of genocide, not because they want to share power, but for completely the opposite reason. To make sure they dismantle the existence of the Tamils as a nation, so they don't share power."

"The existence of the Tamil nation must be secured. The recognition of Tamil nationhood and its distinct sovereignty is non-negotiable, that is our party's position. As to how that status is going to exist, whether it is going to exist within a larger state, or within a larger country, so as in the country

being a multi-national state, or whether the Tamil nation is going to exist as a nation state, is something the eventual peace process will decide. But our view, what is fundamental, is the recognition and the safe-guard of the Tamil nation."

Dismissing the notion that the LTTE were in any way a justification for the Sri Lankan state's genocide of the Tamil nation, he said:

"In fact the LTTE were the problem, there is no LTTE today. But three years down the road, the Tamil people continue to not only be oppressed, but systematically there is a structural genocide that is taking place."

"The international community is struggling to try and explain what is happening. They are desperate to a point where they have to pass resolutions that purportedly address Tamil issues on the ground, when in fact none of this is happening. But they have to carry out this façade, because they can't explain this. If they are to explain this they will have to accept the truth, which means there are serious consequences that they have to take. There are serious consequences to accepting that truth."

"I think the party that actually has to get its act together here - there is no point in blaming the international community - is the Tamil people themselves. That is fundamental. If we don't do it, no one else is going to do it for us."

"As far as the international community is concerned, I don't think there it is necessary to educate them... They know exactly what's happening to the Tamil people, to the Tamil nation. The question is whether it is in their interest. And I think that is where we are at loggerheads."

Asked to justify condemnation of Sinhala colonisation of the North-East, in the face of Tamils residing in Colombo, Gajendrakumar Ponnambalam said:

"Sinhalese settling in the traditional Tamil homeland, have traditionally been state aided colonisation projects, so they are state aided settlements. And they have been done in a systematic way in order to change the demography of the region."

"It is not a natural change in demo graphy. It is a systematically enhanced colonisation project in order to change the demography, deliberately."

"Tamils settling in the South, any where in the South - it is not state aided, for obvious reasons. And at no time have the Tamils gone to the South, with the intent of changing the demography, or for that matter, with the intent of essentially claiming some part of the south. Or denying the Sinhalese of their claim to the South. That is a completely different scenario."

"But today, we are in a slightly different position. After the war, we are in a slightly different position. The Tamil economy is down in its doldrums. We are scraping the barrel... And in such a scenario, we are unable to compete on any front - trade, business, in any way, savings wise."

"When the population and the entire Tamil homeland is vulnerable, when you take of all the stops, who are effectively allowing for an almost a voluntary Sinhalisation, given through consent, simply because you cannot compete."

"And this scenario where the Tamil people are being kept in such a vulnerable position is being sustained three years after the war. It is deliberately being done. Our opportunities to actually move forward is limited. That vacuum is filled up from outside."

"So in principle, we are not opposed to a Sinhalese who willing comes and settles in the North-East because he likes it. We can't be opposed to it. You know we are not racist to the point where we don't want to co-habit with anyone else, that has never been the issue. The problem is with regards to the demography. But as of now, even a voluntary person coming into the area is a danger, for the simple reason that our own power to compete is non-existent. At least if you create the conditions where the Tamil people can compete, and they can have some sort of equality or parity in buying power and all of that, economic power, then it is a different matter."

> "Today they [Sri Lankan state] have carried out a war, to the extent of being accused of genocide, not because they want to share power, but for completely the opposite reason. To make sure they dismantle the existence of the Tamils as a nation, so they don't share power."

"So the state uses this, in a very sophisticated way to push forward their Sinhalisation even more. I mean the most apparent thing is not individuals buying land, but the very apparent thing, is businesses taking over Tamil businesses that just can't compete."

We may have herbal solutions for your problems like.

ஒரு குறிப்பிட்ட அல்லது நீண்ட காலமான தோல் வியாதிகளால் நீங்கள் அவதி யுறுகின் றீர்களா?

உங்கள் தாம்பத்திய வாழ்க்கையில் சிக்கல்களா? காலத்தை விணடிக்காமல் தொடர்பு கொள்ளுங்கள்.



ஆண்மைக் குறைவுக்கான சிகிச்சைகளும் எம்மிடம் உண்டு

திடீர் நிறை குறைவு பிரச்சினையா? உடனே தொடர்பு கொள்ளுங்கள்

Herbal Aid Health Centre

10 Park Avenue, Southall, Middx UB1 3AQ

Telephone: 020 8843 0330
email : herbalaid@hotmail.co.uk
web : www.herbalaidhealthcentre.co.uk

Introducing a New Concept FUSHIA EXPRESS

SRILANKAN THALI £ 8.99 Only.
SOUTH INDIAN THALI £ 6.99 Only.
NON VEGETARIAN £ 12.99 Only.

Fushia introduces a new taste explosion.
Thali is a selection of dishes on a big plate.

IDLY £ 4.99

Daily during December, 12 noon to 5 pm

TEL - 020 8680 8833
www.fushiauk.com
info@fushiauk.com
3, Brighton Road, South Croydon, Surrey, CR2 6EA

Why Devolution of Power should be on Linguistic Basis

By : RMB Senanayake

Sinhala nationalists who deny that the Tamils have any grievances are now campaigning for the abolition of the Provincial Councils under the 13th Amendment. But S.W.R.D the western educated liberal who introduced the Sinhala Only Law realized that an injustice was done to the Tamil people for it was not only an instrument to discriminate against Tamils in State employment but also to force them to deal with the State and its agencies only in Sinhala which the large majority of Tamil people did not know. How could the Tamil people give voice to their problems to the powers that be unless they learn Sinhala for, given the Sinhala as the only medium of education, future political leaders would know only Sinhala ? Even then the Tamil people suspected rightly that the Sinhalese wanted to exercise power only for their benefit and since most Sinhala leaders believed in a zero sum game in the economic sphere thought it was necessary to reduce the number of Tamils in State employment. These extremists later realized that the Tamils were entering the high paying professions like the Medical and Engineering and Accounting professions in numbers disproportionate to their numbers in the population. So they introduced media-wise standardization for entry to the Universities. This was the last straw as far as the Tamil youth were concerned and they took to arms to establish their own State where they could manage their resources to serve their objectives of higher education.

Were the Tamil people left with any choice when the motive of discrimination was so patent? So education and higher education would have to be a devolved power. The Tamil people have a human right to deal with the Police in their own language. But Sinhala was the official language which means the language of record n all government offices of the central government. It is not possible to have two official languages in every government office throughout the length and breadth of the country. Nor is it neither necessary nor economically feasible for it would mean enormous extra cost. The British colonial ruler had only English as the official language for their centralized administration through provincial chiefs drawn from the bureaucracy who were free to act with independence and according to bureaucratic values of good governance. But in 1956 a new political and governance culture was introduced by the SLFP. The local MP wanted to exercise power in the Executive sphere instead of confining themselves to the legislative sphere to which they were elected. They wanted to exercise power in appointments, transfers and discipline in the public service which are maters of internal administration. They wanted to influence the Police in their functions. The Tamil politicians were not in the ruling political party and could not exercise power in a similar manner. They were also better educated and understood that it was improper to engage in this new political culture. They probably knew that this new political culture would lead to the collapse of democratic public administration and would lead to a one party military state.

SWRD the liberal politician leader sought to rectify the injustice to the Tamil people because of the Sinhala only policy. He did the only practical thing which was to suggest devolving power to the Tamils through a Regional Council for the North and East where Tamil would be the official language and where Tamil politicians could exercise power through such Council.

Court proceedings were recorded in English only. SWRD probably realized that it was neither practical nor economically feasible to have two official languages in every government office throughout the length and breadth of the country. So he drew up the Bandaranaike-Chelvanayagam Pact in 1958. But Sinhala extremists protested and he was forced to tear up the Pact. Another liberal leader among the Sinhalese-Dudley Senanayake agreed to a similar proposal for devolution of power with Chelvanayagam but extremists forced him too to abandon the pact.

All atempts to get the Sinhalese public servants to learn Tamil by providing incentives have failed. Nor is necessary. Consider Switzerland where four languages are spoken-German. Italian French and Romansh. Three of them are of equal status in the Federal Government but in each Canton there is only one official language and it is the language of the majority. Canada has two official languages but they are not applicable throughout Canada. Here is what the Act of 1988 set in place.

"that English and French will have equal status of languages of work within the federal public service within geographically defined parts of the country that are designated bilingual (most notably in National Capital Region, Montreal and New Brunswick), as well as in certain overseas government offices and in parts of the country where there is sufficient demand for services in both official languages.

In remaining geographical areas, the language of work for federal public servants is French (in Quebec) and English (elsewhere);"

These countries are federal and Switzerland is smaller than in Sri Lanka. The need to devolve is also necessary to reduce the cost and burden of having two official languages in the central government for day to day functions would be done in one language only – Sinhalese I the Sinhala majority areas and Tamil in the Tamil majority provinces. So it is necessary that there should be devolution of power on linguistic basis as India did and there have been no persistent secessionist movements in India and the movement in the South has died down.

Why? Because there are wider economic opportunities in a larger State than in a smaller state provide there is no discrimination against the minority in the larger state. The people also realize that economic development is not a zero sum unlike the Sinhalese who probably because of the insular mentality of an Island people cannot grasp this fact of economics.

Now there is a clamor to abolish Provincial Councils. Some want to reduce the Tamil majority by combining Sinhala majority and Tamil majority provinces. Others who rather naïve about local government want to establish a Grama Rajya or District Councils to which power should be devolved. But this requires another article.

Courtesy: groundviews.org

எல்லாளன்
இப்பொழுது உங்கள் அருகாமையில்..
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள் முந்துங்கள் !
மாபெரும் மலிவு விற்பனை
இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் மற்றும் அனைத்து விதமான மரக்கறி வகைகள் பெற்றுக்கொள்ள உங்கள் நினைவில் என்றும் இருக்க வேண்டிய இடம்
எல்லா வகையான சூர்யா தயாரிப்பு மா வகைகள் 5 - £ 5 மட்டுமே
திருமகள் அரிசி மா 5 - £ 3.99
சூர்யா, மாதங்கி கறித்தூள் 900g - £3.99
Basmati Rice 5 - £ 3.99

- Off Licence
- மீன் வகைகள்
- பலசரக்கு வகைகள்
- இறைச்சி வகைகள்
- இலங்கை, இந்திய மளிகைப் பொருட்கள்
- மரக்கறி வகைகள்

Tel : 020 8681 7485
Group of Spice Land
234-236, London Road, Croydon CR0 2TF
Terms and Conditions are apply

Autumn Poem

Autumn is a season of the year.
It is not the time for a cup of beer.
Leaves are the colours;
Green, Brown, and even yellowy gold.
Autumn could be fierce it's nearly time for winter.
Where, you can turn into a twister.
Remember the holiday July to September,
The time to spend with your family also in December.
Autumn is the season of the year
I think it's time for a cup of beer.

Theivhikha Rajakumaran

Winter Poem

Winter, winter the season of the year.
I certainly don't think it's time to cheer.
Ice, igloos, snow and frost,
There's a hill of snow you can get lost.
Though winter can be great if you think hard....
Christmas, Halloween, New years too.
And Diwali, Guy Fawkes I thought you knew!
Heaps of time to celebrate in winter.
Not the time to get a splinter.
Winter, winter the season of the year.
I certainly think it's time to cheer!!!

Theivhikha Rajakumaran, AGE: 11

Winter is a freezing season
It is very cold.
We wear warn cloths.
In december christmas is coming.
We play in the snow.
We throw snowballs,
Making Snow Man.
Play skating.
It is so much fun in winter.

By Vigaashan

KIDS பேப்பர்

நினைப்பதெல்லாம் நடந்து விட்டால்.....?

மிகவும் கஷ்டப்பட்ட நிலையிலிருந்த ஒருவன் கால்நடைப் பயணமாக ஒரு காட்டின் வழியே சென்றான்.

நீண்ட தூரம் நடந்ததால் அங்கிருந்த ஒரு மரத்தினடியில் படுத்து ஓய்வெடுக்கத் தொடங்கினான். அந்த மரம் நினைப்பதையெல்லாம் தரும் கற்பக மரம் என்பது அவனுக்குத் தெரியாது.

மிகவும் பசியாக இருக்கிறதே எதாவது உணவு கிடைத்தால் நன்றாக இருக்குமே! என்று நினைத்தான். உடனே ஒரு தட்டு நிறைய உணவு வந்தது. ஆச்சரியமடைந்த அவன் அதைச் சாப்பிடத் தொடங்கினான்.

உணவு சாப்பிட்டதும் உறக்கம் வந்தது. ஒரு தலையணை இருந்தால் நன்றாக இருக்குமே என்று நினைத்தான், நினைத்தவுடன் தலையணையும் வந்தது.

அதில் ஏறிப் படுத்தான். நடந்து வந்ததால் கால்கள் வலிக்கின்றதே, இரண்டு பேர் கால்களை அமுக்கி விட்டால் சுகமாக இருக்குமே என்று எண்ணினான்.

உடனே இரண்டு வான் தேவதைகள் அவனருகில் அமர்ந்து அவனது கால்களை அமுக்கி விடத் தொடங்கினார்கள்.

அவனுக்கு மிகவும் சந்தோஷமாகப் போய்விட்டது. இதெல்லாம் எப்படி நடக்கிறது என்பது புரியாமல் மேலும் கீழுமாய்ப் பார்த்தான். எதுவும் புரியவில்லை அவனுக்கு!

உடனே அவனுக்கு ஒரு எண்ணம் ஏற்பட்டது.

ஆஹா நாம் ஒரு காட்டில் அல்லவா ஓய்வு எடுத்துகொண்டிருக்கிறோம்! புலி ஏதேனும் வந்து நம்மை விழுங்கிவிட்டால் என்ன செய்வது? என நினைத்தான் அதன்படியே புலியும் ஒன்று வந்து அவனை விழுங்கிற்று.

தூய்மையான உள்ளமாக இருந்தால் அங்கு கடவுள் வசிப்பார். அவ நம்பிக்கையுடன் இருந்தால்.......?

Quotable Quotes

" A friend is a gift you give yourself."

Robert Louis Stevenson

" who takes the child by the hand , takes the mother by the heart."

Danish Proverb

Flowers



- Flowers can live in land or sea.
- Flowers are beautiful and they smell nice.
- flowers are sometimes dangerous.

Krishni-Year 4



Draw by; Ashwin, 7 Years Old

Krishni, 4 Years Brampton Primary

Colouring - 182

Dear Kids...

Colour and Send in a picture to ORU PAPER . you could be the lucky winner Gift from KALAIKILI...

நீங்களும் கலைக் கிளி வழங்கும் பரிசினைப் பெற படத்திற்கு அழகுற வர்ணம் தீட்டி எங்களுக்கு அனுப்பி வையுங்கள்..

Web: www.facebook.com/Kalai.Kili

Issue 181 Winner
A. Rammiya

A.Rammiya *

Aaron Selvakumar

Bharathwaj

K.Abisha, 6 Yrs

Rehashan

Vigaashan

மின்னஞ்சல் முகவரி : info@orupaper.com
அஞ்சல் முகவரி : G11 Lombard House, 2 Purley Way, Croydon, CR0 3JP

GOLD FACTORY
Visit any of our 32 branches today
WE LOAN AGAINST
GOLD
WE ARE GOVERNMENT REGISTERED PAWNBROKERS
We GUARANTEE We loan the highest amount and with the best rates.
Our Gold Buying and Money Lending Stores
Birmingham (West Bromwich), Bradford, Coventry, Derby, Edinburgh, Gillingham, Ilford, Manchester, Reading, Slough & Oxford.
LONDON:- Barking, Bethnal Green, Bristol, Croydon, Ealing, Eastham, Hackney, Harrow, Hayes, Hounslow, Hounslow West, Lewisham, Newport, Southall (Broad Way), Southall (King Street), Tooting, & Wembley.
BUYING GOLD FOR CASH Best Prices Paid
பழைய தங்கம் நியாயமான விலைக்கு வாங்கப்படும்
பழைய தங்கத்திற்கு புதிய தங்கம் கொடுக்கப்படும்.
உடனடியாகப் பணம் தேவையா ? சிறிது வட்டியுடன் உங்கள் நகைக்கு ஈடாகப் பணம் கொடுக்கப்படும்.
நகைகள் யாவும் திருத்தி அமைத்துக் கொடுக்கப்படும்.
அதிஷ்டக் கற்களை நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
Staff Required
Earn money – Recommend Customers and become our agent
149 The Broadway, SOUTHALL, UBI 1LP
Email : backofficegf@yahoo.co.uk
www.goldfactory.co.uk
மேலும் விபரங்களுக்கு 0800 0337 493

தமிழீழத் தேசிய
மாவீரர் நாள்
பிரித்தானியா 2012
நவம்பர் 27
இன விடுதலைக்காய் தமை ஈர்ந்த உத்தமர்களை வணங்கி அவர் வழிநின்று
தொடர்ந்தும் உறுதியுடன் பயணிப்போம் என சபதம் எடுப்போம் வாருங்கள்...
ExCeL மண்டபத்தில்
1 WESTERN GATEWAY
ROYAL VICTORIA DOCK E16 1XL
காலை 10.30க்கு மண்டபம் திறக்கப்பட்டு 11.30க்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்
NEAREST DLR STATION : CUSTOM HOUSE
தொடர்புகளுக்கு | தமிழர் ஒருங்கிணைப்புக் குழு - பிரித்தானியா | 020 3371 9313

போயகலும் பொல்லாப் பொழுது

விடுதலைப் போரென்னும் வெங்கொடுமைச்
சாக்காட்டில் வீழ்ந்து மடிந்தோரே!
மண் பட்ட வேதனையை மாற்றத் துடித்தெழுந்து
புண்பட்டு மண்ணில் பூவாய் உதிர்ந்தோரே!
நெஞ்சுருகி உங்கள் நினைவைச் சுமக்கின்றோம்
அஞ்சாத நெஞ்சோடு அந்நியர் தமைத் துரத்த
வெஞ்சமர்கள் செய்தீர் வெற்றி பல கண்டீர்
ஆனாதலு மந்தோ! அடைந்த பல வெற்றியெல்லாம்
போனதென்ன மண்ணாய் புகழழிந்து தோற்றதென்ன?

எங்கள் சரித்திரத்தை எழுதிடவே உங்களது
செங்குருதி தன்னையன்றோ தீந்தையாய்த் தந்தீர்கள்
சிதைந்த உடல்களன்றோ சித்திரங்களாயிற்று
நீர்மேலெழுத்தாகி நிலைகுலைந்து உங்கள் புகழ்
பார்மீதில் இன்று பழங்கதையாயப் போவதனை
விட்டு விடலாமோ! வீணே எமையழித்த
துட்டர்களெம் முன்னே தோளுயர்த்தி நிற்பதுவோ!

தோற்றான் தமிழன் இனித் தொல்லையழிந்ததென்று
மாற்றார் மனம் மகிழ வாழ்விழந்து எங்களினம்
ஆற்றாமையுற்று அடிமைகளாய்ப் பஞ்சையராய்
எம் தாயகத்தில் இருக்க விதி சொன்னால்
அந்த விதியை அடித்துதைக்க வேண்டாமோ?

ஆயுதம் வேண்டாம் அதை ஒருபால் வைத்தாலும்
தேயும் தமிழீழத் தேசத்து எல்லைகளைக்
காக்கும் கடமைதனைக் கைவிட்டுச் சென்றது ஏன்?

காப்பதினி யார் பொறுப்பு? கண்கலங்கி நிற்கின்றோம்.
என்ன வழியால் எம் மண்ணை நாம் காப்போம்
என்று கவல்கின்றோம். எம் சந்ததிக்கினி யார்
நின்று துணைசெய்வார்? நிர்க்கதியாய் விட்டது ஏன்?

பொல்லாப் பகைதுரத்தப் புறப்பட்ட வேங்கைகளே
கல்லறையிலின்று கடுந்;துயிலில் ஆழ்ந்தது ஏன்?
எல்லா உயிர்க்கும் இறப்புண்டு ஆனாலும்
வல்வர்கள்காள் நீங்கள் வழி நடுவில் போனதென்ன?
நட்டாற்றில் கைகழுவி நாடிழந்து எக்கேடு
கெட்டாலும் என்ன கிடக்கட்டும் என்றெண்ணி
விட்டதென்ன? எங்கள் விதியைத் தலைகீழாய்
மாற்றித் தமிழ்த்தாய் மனங்கலங்கச் செய்தது ஏன்?

காட்டிக் கொடுத்த கயவர்கள் போலல்லாதெம்
நாட்டை அமைத்திடற்காய் நாளும் உழைத்தீரே
போராடவென்று புறப்பட்டுப் பொய்மையிலே
நீராடினோரை நிலை குலைய வைத்தீரே
பொய்ப் புரட்சி செய்யப் புறப்பட்ட வஞ்சகர் முன்
மெய்ப் புரட்சி காட்டி விழிபிதுங்க வைத்தீரே
உள்ளத்துறுதியின்றி உரிமைப் போராட வந்தோர்
கள்ளத்தனங்களை நாம் கண்டுணரச் செய்தீரே

மண்ணிற் புதைந்திட்ட மாவீரச் செல்வங்காள்!
கூடவிருந்தெம் குலவீரர் தம்மோடு
காலன் வயப்பட்ட கண்மணிகாள்! சுற்றங்காள்!
சென்று மறைந்தீர் நீர் சென்றாலும் எம்முணர்வில்
என்றுமிருப்பீர். எம்மண்ணை மீட்கின்ற
போர் தொடரும் உங்கள் புனித நினைவெமது
வேராகித் தாங்கும் விழுதாகிச் சக்திதரும்.
ஆரெதிர்த்த போதும் அறம் தோற்றுப் போகாது.

ஆதலினால் எங்கள் அன்பு உறவுகளே!
வேதனையை எங்கள் விழிக்குள் புதைத்திடுவோம்
கண்மூடி வீரக் களத்தில் வீழுந்தோரின்
எண்ணம் மனதை இரும்பாக்கப் புத்துயிர்த்து
மீண்டெழுவோம் எங்கள் வீர வரலாற்றை,
ஆண்ட நினைவை அகலாது காத்தெமது
தாயகத்தைக்காக்க தவறாது முன்னிற்போம்
போயகலும் பொல்லாப் பொழுது.

-யுகசாரதி-

SURREY PAWNBROKERS
உங்கள் நகை அடைவில் உள்ளதா ?
அதி கூடிய வட்டியா ?
கவலை வேண்டாம்!
நாம் நேரில் வந்து உங்கள் நகைகளை மீட்டு
குறைந்த வட்டியில் மீள் அடைவு செய்து தரப்படும்.
மீளடைவு 3.5% இருந்து
No commission on Foreign Currency
• நகை அடைவும் மீள் அடைவு சேவையும்
• பழைய புதிய நகைகள் கொள்வனவு செய்யப்படும்
• வங்கிக் கணக்கு இல்லாதோருக்கு காசோலை மாற்றுதல்
• நாணய மாற்று சேவை
உங்கள் நகைகளுக்கு
பிரித்தானியாவில் அங்கீகாரமும், உத்தரவாதமும் பெற்ற
ஒரே தமிழ் நிறுவனம் SURREY PAWNBROKERS
தொடர்புகளுக்கு: Surrey Pawnbrokers
94, TOLWORTH BROADWAY, TOLWORTH, SURREY, KT6 7HT
T: 0208 399 9176 M: 07947 579 682

Holy Cross School (Sandal Road, New Malden) இல் அமைந்துள்ள
நியூ மோல்டன் தமிழ் பாடசாலை
எம் இனிய தமிழுக்காக தம் இன்னுயிரை ஈந்த
மாவீரருக்கு வீர வணக்கம் செலுத்துகிறது
தமிழ் கல்வி
* மழலையர் நிலையிலிருந்து ஆண்டு 12 வரையான தமிழ் வகுப்புகள்
* இளையோர் தமிழ் கல்வி
நியூ மோல்டன் நுண் கலையகம்:
* மிருதங்கம்:
ஸ்ரீ மயில்வாகனம் விஜயராஜா
* வயலின்:
இசைக் கலைமணி ஸ்ரீமதி சிறிரஞ்சனி ராஜேஸ்வரன்
* பரத நாட்டியம்:
நாட்டிய கலைமாமணி ஸ்ரீமதி கிருத்திகா கிரிதரன்
* வாய்ப்பாட்டு :
இசைக் கலைமணி ஸ்ரீமதி விமலா தியாகலிங்கம்
* புல்லாங்குழல் :
ஸ்ரீ வேணுகானமணி பிச்சையப்பா ஞானவரதன்
கராத்தே வகுப்புகள்
Sensei கணேசலிங்கம் 5 th Dan, Champion of PKC International 2011 USA
பிரெஞ்சு வகுப்புகள்
திருமதி தர்ஷிகா திருக்குமார்- Bachelor of Arts(Hons) degree in French
மேலதிக தகவல்களுக்கு : இரவீந்திரன் (ரவி அண்ணா)
020 3130 1769 / 077 5472 6905 / 074 0540 1392
www.NewmaldenTamilSchool.org.uk

தளபதி பரிதி படுகொலை சொல்லும் செய்தி

இ .மதியழகன்

யார் இந்த பரிதி?

நடராஜா மதீந்தரன் என்ற இயற்பெயரைக் கொண்ட தளபதி பரிதி 1983 ம் தன்னை தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டார். இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இரண்டாம் பாசறைப் பிரிவில் பயிற்சியை பெற்றுக் கொண்ட அவருக்கு தலைமை பீடம் சூட்டிய பெயர் றீகன். தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளான பிரிகேடியர் பானு, லெப் கேணல் குமரப்பா, கப்ரின் ரஞ்சன் லாலா மற்றும் கப்பரிக் வாசு போன்றோருடன் போரியல் பயிற்சியை நிறைவு செய்த பின்னர் தமிழீழம் திரும்பினார்.

களம் பல கண்ட நாயகன்

தமிழீழம் திரும்பிய தளபதி பரிதி மன்னார், யாழ்ப்பாணம், வன்னி என்று தமிழீழத்தின் முக்கியமான போர்முனைகளிலெல்லாம் வீரத்தோடும் விடுதலை வேட்கையோடும் களம் பல கண்டார். இவரது போரிடும் ஆற்றல் இவரை குறுகிய காலத்துக்குள்ளேயே இடைநிலைத் தளபதியாக உயர்த்தியது.

தளபதி கேணல் பரிதி அவர்களின் வீரச்சாவு என்பது, அடுத்த கட்ட போராட்டத்தின திருப்பு முனைப் சக்தியாக உருவாக்கம்பெற்றுள்ள புலம்பெயர் களத்தில் தமிழர்கள் எழுச்சி கொள்ள வேண்டும் என்பதை கோடிட்டுக் காட்டியுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் புலம்பெயர் களம் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தை உணர்ந்து 2003 ம் ஆண்டு முதல் பரிதி என்ற பெயருடன் பிரான்ஸ் நாட்டுக்கான அரசியல் மற்றும் நிதி சேகரிப்பு நடவடிக்கைகளுக்கான பொறுப்பாளராக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை பீடத்தால் நியமிக்கப்பட்டார்.

அன்றிலிருந்து, புலம்பெயர் களத்திலும் ஒரு தளபதியாக, முழுநேர தேசிய செயற்பாட்டாளனாக தமிழீழ விடுதலை என்ற உயரிய இலட்சியத்துக்காக பணியாற்றிய தளபதி கேணல் பரிதி அவர்கள், தனது இறுதி மூச்சு வரை அந்த இலட்சியத்துக்காகவே போராடி, அந்த இலட்சியப் பணியில் ஈடுபட்டிருந்த போதே சிங்கள புலனாய்வாளர்களின் ஒட்டுக்குழுவால் கோழைத்தனமாகவும், கோரத்தனமான முறையிலும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலின் பின்னணி என்ன?

2009 மே மாதம் தமிழீழ விடுதலைப் போரட்டத்தினதும் தமிழ் மக்களினும் கவசங்களாக விளங்கிய ஆயுதங்களை மௌனமாக்குவதற்கான சிங்கள அரசின் சூழ்சித் திட்டம் 2000ம் ஆண்டிலேயே தீட்டப்பட்டிருந்தது. அது யாதெனில், தமிழர்களுடைய சுதந்திர தாகத்தை அழிக்க வேண்டுமானால், தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டுமானால், தமிழீழ விடுதலைப் புலிகளின் முதன்மைத் தளபதிகளை இலக்கு வைத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் மூலம் படுகொலைசெய்யக் கூடிய தளபதிகளை படுகொலை செய்வது, ஏனைய முக்கிய உறுப்பினர்களின் நடமாட்டங்களை முடக்குவது.

அதன் அடிப்படையிலேயே, சிறீலங்கா படைத்துறையில் ஆழ ஊடுருவும் படையணி உருவாக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியும் விமானப் படைத்தளபதியாகவும் விளங்கிய கேணல் சங்கர் அவர்களை படுகொலை செய்ததுடன் 2001 ஆண்டு செப்டெம்பர் 26ம் திகதி ஆரம்பமான ஆழ ஊடுருவும் படையணியின் நரபலி வேட்டை, 2008 ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுத் துறை தளபதிகளில் முதன்மையானவரான கேணல் சாள்ஸ் அவர்களை மன்னார் மாவட்டத்தில் இலக்குவைத்ததைத் தொடர்ந்து முள்ளி வாய்க்காலில் இனஅழிப்பின் உச்சக் கட்டம் தாண்டவமாடியதோடு முடிவுக்கு வந்தது.

முள்ளிவாய்க்காலோடு தமிழீழ விடுதலைப் போராட்டம் முற்றுப்பெற்றுப் போகும் என எண்ணிய சிங்களத்துக்கு புலம்பெயர் தமிழர்களின் எழுச்சி பெரும் பூதாகாரமான ஆபத்தாக உருவெடுத்தது. இதன்பின்னணியில் யார், யார் உள்ளார்கள் என்று உளவுப் பணியை முடக்கி விட்ட சிங்களத்துக்கு சிம்மசொப்பனமாக இருப்பவர் தளபதி பரிதி என்பது தெரியவந்தது. ஆதலால், புலம்பெயர் தேசங்களில் ஆரம்பிக்கப் பட்டுள்ள ஆழ ஊடுருவும் படையணிக்கு இணையான படுகொலை படலத்தின் முதல் இலக்காக தளபதி பரிதியை இலக்கு வைப்பதனூடாக ஊடாக, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அடுத்த கட்டத்தை அழிக்கலாம் அல்லது முடக்கலாம் என்று கணக்கு போட்டது சிங்கள தேசம்.

தளபதி பரிதி இலக்கு வைக்கப்பட்டமைக்கான காரணம் என்ன?

படுகொலைசெய்யப்பட்ட தளபதி கேணல் பரிதி, முள்ளிவாய்க்காலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின்னரும் ஓர்மத்தோடும் விடுதலை வேட்கையோடும் வெளிப்படையாக இயங்கிய மூத்த தளபதி. உயிர் அச்சுறுத்தல்கள் எத்தனை வந்த போதும், எதற்கும் அடிபணியாது, அனைத்தையும் எதிர்த்து நின்று விடுதலைக்காக முழுமூச்சுடன் பணியாற்றினார். அமைதியான சுபாவமுடைய தளபதி பரிதி அவர்கள் உதிர்த்த ஒவ்வொரு வார்த்தைக்கும் பெம் பெறுமதியும், அதிக கனதியும் இருந்தது. ஆதலால், இளையோர் தொடக்கம் முதியோர் வரை பரிதி அண்ணா என்று வாஞ்சையோடு அழைத்தது மட்டுமன்றி, வீரத்தளபதிக்கு பின்னால் அணி திரண்டனர். இது, சிங்கள தேசத்துக்கும், அவர்களின் கைக்கூலிகளுக்கும் அச்சத்தை உண்டு பண்ணியது.

ஏனெனில், தளபதி பரிதி அவர்களின் அர்ப்பணிப்பும், தலைமைத்துவமும் தமிழீழ விடுதலையை அடைவதற்கான படிக்கற்களை விரைவுபடுத்தின. ஆகவே, தளபதி பரிதி அவர்களை படுகொலைசெய்வதனூடாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பேரிழப்பையும் பெரு வெற்றிடத்தையும் உருவாக்குவதே சிங்கள அரச பயங்கரவாதத்தின் திட்டம். அத்துடன், புலம்பெயர் தமிழர் தேசத்துக்கு எதிரான ஸ்ரீலங்கா அரச பயங்கரவாத்தின் உளவியல் போரில் இது முக்கியமானதொரு நடவடிக்கை. இதனூடாக, புலம்பெயர் தேசங்களில் வாழும் ஏனைய செய்ற்பாட்டாளர்களுக்கு அச்சத்தையும் அழுத்தத்தைய உண்டு பண்ணுவதானூடாக அவர்களினுடைய செயற்பாடுகளை முடக்குவது சிங்கள பௌத்த பேரினவாதத்தின் முக்கிய நிகழ்சி நிரலில் ஒன்று. அத்துடன், தமிழர் தரப்புகளுக்கிடையில் பிளவுகளை மேலும் தீவிரப்படுத்துவதனூடாக தொடரும் ஒற்றுமையின்மையை பயன்படுத்தி, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மேலும் நெருக்கடிக்குள்ளும் தள்ளுவதும் முக்கிய நிகழ்ச்சி நிரலிளுள்ள விடயம்.

அத்தகைய விடயங்கள் அனைத்தையும், தளபதி பரிதி அவர்களை படுகொலை செய்வதனூடாக முன்னெடுக்கலாம் என்ற அடிப்டையிலேயே, தளபதி பரிதியை எல்லை கடந்த சிங்கள அரச பயங்கரவாதம் முதலாவது இரையாக்கியது. இதிலிருந்தே, தளபதி கேணல் பரிதி தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆற்றிய பங்களிப்பு தெட்டதெளிவாகிறது.

தளபதி பரிதிக்காக தமிழ்மக்கள் செய்ய வேண்டியது என்ன?

தளபதி கேணல் பரிதி அவர்களின் இழப்பென்பது தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு, குறிப்பாக முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின்னர் முன்னெடுக்கப்பட்டு வரும் புதிய போராட்ட படிமுறைக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். இவரது இழப்பால், தமிழர் தேசம் அதிர்ச்சியும் சோகமும் அடைந்துள்ளது. ஆனால், தமிழீழ விடுதலைக்காக இரத்தம் சிந்தி தன்னுயிரை அர்ப்பணித்த தளபதி கேணல் பரிதியின் வீரச்சாவுக்கு கண்ணீர் சிந்துவதும் கவலையடைவதும் மட்டும் போதாது.

இத்தருணத்தில், தளபதி கேணல் பரிதி எந்த உயரிய இலட்சியத்துக்கான தன்னை அர்ப்பணித்து, அதற்காகவே தனது இறுதி மூச்சு வரை வாழ்ந்தாரோ, அந்த இலட்சியப் பயணம் இலக்கினை அடையும் வரை தளராமல் போராடுவதே ஒவ்வொரு தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களதும், உணர்வாளர்களதும், மற்றும் தன்மானமுள்ள ஒவ்வொரு தமிழர்களினதும் வரலாற்றுப் பொறுப்பும் தார்மீக கடமையுமாகும்.

இத்தருணத்தில், தளபதி கேணல் பரிதி எந்த உயரிய இலட்சியத்துக்கான தன்னை அர்ப்பணித்து, அதற்காகவே தனது இறுதி மூச்சு வரை வாழ்ந்தாரோ, அந்த இலட்சியப் பயணம் இலக்கினை அடையும் வரை தளராமல் போராடுவதே ஒவ்வொரு தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களதும், உணர்வாளர்களதும், மற்றும் தன்மானமுள்ள ஒவ்வொரு தமிழர்களினதும் வரலாற்றுப் பொறுப்பும் தார்மீக கடமையுமாகும். இதன் ஊடாகவே, சிங்கள தேசத்தின் நிகழ்ச்சி நிரலை முறியடிப்பதோடு, சுதந்திர தமிழீழம் என்ற உயரிய இலக்கை அடையலாம்.

தளபதி கேணல் பரிதி அவர்களின் வீரச்சாவு என்பது, அடுத்த கட்ட போராட்டத்தின திருப்பு முனைசக்தியாக உருவாக்கம்பெற்றுள்ள புலம்பெயர் களத்தில் தமிழர்கள் எழுச்சி கொள்ள வேண்டும் என்பதை கோடிட்டுக் காட்டியுள்ளது. இன்றே போராட புறப்படும் தமிழர்! இல்லை நாளையென்பது நமக்கில்லை.

கருத்துக்களுக்கு Facebook : facebook.com/orupaper

ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானது, அவர்தம் ஆற்றலும் தனித்துவமானதே..
உங்கள் பிள்ளைகளும் கல்வியில் ஓங்கிட, நாளைய உலகின் சவால்களை வென்றிட..

Enrol them in Learna
• Individualised • Interactive • Inspiring

Maths & English Teaching for 4-16 years olds

FREE Assessment

We also prepare pupils for
• 11 plus entrance exams
• Key Stage 2 SATS examinations
• Key Stage 3 and GCSE Maths
• A' Levels - Maths, Chemistry & Physics

LEARNA because every child is unique

Call 0845 094 0061 or visit www.Learna.co.uk 5-6 The Broadway, Sutton, Surrey, SM1 4BU.

பூச்சொரிந்து அவர் பாதம் பூசிப்போம்...
வல்லமை தாருங்கள் என வரம் கேட்போம்...

அந்த தீபாவளி நினைவுகள்

ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

தீபாவளி என்றதும் தாயகத்தில் எங்களது பள்ளிப்பருவ கால நாட்கள் தான் நினைவுக்கு வருகின்றது. தீபாவளி அண்மிக்கிறது என்றாலே பள்ளிப்பராயத்தில் எங்கள் உள்ளம் மகிழ்ச்சியில் துள்ளும். இங்கே புலம் பெயர் நாட்டில் பிள்ளைகள் பலருக்கும் தீபாவளி என்றால், என்ன, ஏன், எதற்கு, எப்படி கொண்டாடப்படுவது என்ற விபரம் தெரியவில்லை. தொலைக்காட்சி, வானொலி அறிவிப்புக்கள் மூலம் தான் ஒரு சில நாட்களுக்கு முன்பாக நாம் நினைவுபடுத்துகின்றோம். எங்கள் ஊர்களில் தீபாவளியை எவ்வளவு கோலாகலமாக கொண்டாடி மகிழ்ந்தோம். பொங்கல், புதுவருடம், தீபாவளி என்பன விடுமுறையுடன் கூடிய வருடாந்த முக்கிய விழாக்களாக காலாகாலமாக ஊரில் கொண்டாடப்பட்டு வருகிறது. புலம்பெயர், தமிழர்களுக்கு இப்படியான விசேஷங்கள் கூட மறந்தவையாக கொண்டாடப்படுகின்றனவா என ஐயமெழுகிறது. ஊரில் எங்கள் சிறுவர் நாட்கள்தீபாவளிஇருமாதங்களுக்குமுன்பாகவே களைகட்ட ஆரம்பிக்கும். புது உடுப்பு, என்பது தான் தீபாவளியின் அம்சம் வகை, வகையான சகலருக்குமான உடுப்புகள், ஜவுளிக்கடைகளை நிறைக்கும். நகரப்புறங்களில் நடைபாதைகளில் கூட துணிகள், உடுப்புகள் பரப்பி கூவிக்கூவி விற்கும் நடைபாதை வியாபாரிகளைக் காணலாம். வரிசை வரிசையாக இந்தக் கடைகள் இருக்கும். சைக்கிள்களிலும், நடையாக பொதிகளை சுமந்தபடியும் ஊர்ப்புறங்களில் புடவை புடவோய் என்று கூவிக்கொண்டு திரியும் வியாபாரிகளையும் அதிகம் காணலாம்.

வீட்டுத்தலைவாசலில் அல்லது போக்கோட்டில், புடை வியாபாரியின் புடவைகள் அவிழ்க்கப்படுவதும், பாயில் விரிக்கப்படுவதும் அக்கபக்க வீட்டுப் பெண்கள், ஒன்று கூடி ஆளுக்கொரு துணியை விரித்து பேரம் பேசுவதும் தீபாவளிக்கு முந்திய அன்றாடக் காட்சிகள். பட்டனத்திற்கு உடுப்பு வாங்கப் போவாரல் பஸ், தட்டிவான் என்ற பொது வாகனங்கள் எல்லாம் சனங்களால் முட்டிக் கொண்டிருக்கும். சினிமா திரையரங்கு, உணவகங்கள் கூட வழமையை விட வியாபாரம் களைகட்டிக் காணப்படும். மலிவு விற்பனை விளம்பரங்கள் புடவைக்கடைகள் தோறும் முகப்பில் தொங்கும். வர்ண மின் விளக்குகளால் கடையை அழகுபடுத்தி, வகையாக புடவைகளை காட்சிப்படுத்தி வைப்பார்கள். வாடிக்கையாளர்களை கவர்வதில் வியாபாரிகள் போட்டாபோட்டி காட்டுவார்கள். தையல்கடைக்காரர்களுக்கும் இரவுபகல் வேலை தான். மாமா குடும்பம், சித்தப்பா குடும்பம் என்று சிறுவர்களுக்கு உடுப்புகளை தீபாவளிப் பரிசாகத் தருவார்கள்.

இன்னொரு விசேடம் இந்த நாட்களில் வெடிஸ், பூரிஸ் என்பன. இதேவேளையில் பட்டுச்சேலைகள், சங்குமார்க் சாரங்கள், என திராட்சியான இந்திய துணிவகைகளை வாடிக்கையாக எங்கள் வீட்டுக்குக் கொண்டுவந்து தருகின்ற வல்வெட்டித்துரை மாமாவின் தோற்றமும் நினைவுக்கு வருகின்றது.

வெடிப்புத்தகம், யானை மார்க் பிரபலம். சத்தமாக வெடிக்கும். அட்டைவெடி, பூரிஸ், மூலவெடி என்பனவும் எங்களுக்கு பரிசாகத் தரப்படும் வெடிகள். வெள்ளி மத்தாப்பூவாக விரியும் குச்சுப்பூரிஸ் தான் சிறுவர்களுக்கான விசேட பரிசாகக் கிடைக்கும்.

இரவுநேரங்கள் குரிசில்களும், வானவெடில்களும், ஈக்கு வானங்களாக வானத்தையும், வீதிகளையும், வீட்டையும் அழகுபடுத்திக் கொண்டிருக்கும். இனிப்புப் பண்டங்களோடு, சீனி அரியாதரம், சிற்பி, வாய்ப்பான், தோய்ப்பான், லட்டு, பால்ரொட்டி என்ற வீட்டுப்பணியாரங்களின் தயாரிப்பு வாசம் வீடு தோறும் இருக்கும். தட்டுப்பாடு வந்து விடும் என்பதால் சாரயப் போத்தலும், விசேட தினக் குடிக் கொண்டாடத்திற்காக நேரகாலத்தோடு வாங்கி வைக்கப்பட்டு விடும். பங்கு இறைச்சிக்கு கிடாய் வாங்கி, உறவினர்கள், நண்பர்கள் சேர்ந்து உரித்து பனங்கூடலில் பங்கு போடுவதும் வழமையான தீபாவளிக் காட்சி. அங்கும் இங்காக வளவு மரமொன்றில் தொங்கும் உரித்த ஆட்டுடல் தீபாவளிக் காலைக் கடமையாக இது நடக்கும். ஆடு உரிப்பு வேலை, சுற்றிலும் கள்ளு நிறைந்த பிளாவுடன் பீடிப்புகையுடன் கலகலப்பான கதையுடன் தொடரும்.

> பட்டாசு ஒலிகளுமாக பணியார பண்டங்களோடு நினைவுக்கு வருகின்ற அந்த தீபாவளி இனி புலம்பெயர்ந்த நாட்டில் வாழுகின்ற எங்களுக்கு ஒரு பகல் கனவு தான்.

தியேட்டர்கள் தோறும் தீபாவளி விசேட புதுப்படங்களால் நிறையும். வழமையாக திரையரங்குகளில் விடுமுறை நாட்களில் பகல் இரவாக நான்கு காட்சிகள் நடக்கும். ஆனால், தீபாவளி சனக்கூட்டம் அலைமோதுவதால் தியேட்டர்கள் தோறும் ஐந்து காட்சிகள் காண்பிக்கப்படும். சிவாஜி, எம்.ஜி.ஆர். பட நாயகர், நாயகிகளின் பட கட்அவுட்கள் கட்டிய வாகனங்கள் ஒலிபெருக்கியில் படங்கள் பற்றிய விளம்பரப்படுத்திக் கொண்டு சினிமாப் பாடல்களை ஒலிபொருக்கி பரப்பிக் கொண்டு வீதி வீதியாக துண்டுப்பிரசுரங்களை விசிக்கிக் கொண்டு போகும். முக்கிய சந்திகளில் அந்த வாகனங்களில் வந்தவர்கள் வாகனத்தை நிறுத்தி விளம்பரப் போஸ்டர்களை ஒட்டிக் கொண்டு போவார்கள்.

இவ்வாறாக அன்றைய தீபாவளி நாட்களை நினைக்க நெஞ்சு இனிக்கும். விசேடமான உடுப்புடன் கூடிய சனங்களும், சாராய வெறிச் சண்டைகளும், பட்டாசு ஒலிகளுமாக பணியார பண்டங்களோடு நினைவுக்கு வருகின்ற அந்த தீபாவளி இனி புலம்பெயர்ந்த நாட்டில் வாழுகின்ற எங்களுக்கு ஒரு பகல் கனவு தான்.

* Italy, Germany & Spain நாடுகளிலிருந்து மிக உயர் தரமான Bathroom furniture களை பெற்றுக் கொள்ளலாம்
* Morden Bathroom முதல் சாதாரண Bathroom வரை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்
• எல்லா விதமான Porcelain, Ceramic Tiles & Kitchengrantes Worktop நல்ல quality ஆகவும் நியாயமான விலையிலும் செய்து தரப்படும்.
• Underfloor Heating (Water & Electric) மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்
• பல முன்னணி நிறுவனங்களுடன் நேரடி விநியோகஸ்தர்கள் உள்ளபடியால் நியாயமான விலையில் பெறறுக் கொள்ளலாம்.
• Radiator விலை குறைக்கப்பட்டுள்ளது.

WIDE RANGE OF SHOWER PUMPS

ALL MEGAFLOW SYSTEM BOILERS AUPPLIED & FITTED AT AFFORDABLE PRICES

Vanity Unit 450 Start from £93 with Free single lever mixer (worth £30)
Electric Shower Triton start from £139

Ideal Standard, GROHE, Armitage Shanks, Ideal Standard, Roca, saneux, mira Showers, Hudson Reed, ARISTON, Jacuzzi, AQUALISA, Glow-worm, WORCESTER, saneux, Vaillant, KESTON, kudox, hansgrohe, FRANKE, saneux Manufacturers of Fine Bathrooms, KALDEWEI

Hudson Reed (Tab & Shower)
(20 வருட உத்தரவாதம்)

* BATHROOMS * SHOWERS * GRANITE/ MARBLE/PORCELAIN TILES ALL AT DISCOUNT PRICES

JSN

Tel: 020 8427 0553 - Fax: 020 8427 0550

உடன் அழையுங்கள்!

In Business over 7 years

FREE CONSULTATION இலவச வாகனத் தரிப்பிட வசதி உண்டு

HEAT SUPPLIES LTD

இலண்டனில் எங்களுக்கு வேறு கிளைகள் கிடையாது
162 Pinner Road, Harrow, Middlesex, HA1 4JJ

வெளித்தெரியாத வேர் M.S.R

ஈழத்தின் ஆயுத விடுதலைப் போராட்டத்தின் தங்கள் அனுபவங்களை மையமாக வைத்து பலர் தங்கள் பதிவுகளை புத்தமாக்கியிருக்கிறார்கள். அவற்றில் சி.புஸ்பராஜா, கி.பி. அரவிந்தன், ஐயர் ஆகியேருடைய பதிவுகள் முக்கியமானவை. ஆனால் இவர்களது எந்தப் பதிவுகளிலுமே இந்த எம்.எஸ்.ஆர் என்கிற மனிதனைப் பற்றிய தகவல்களும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இந்த மூவரோடும் நெருங்கிப் பழகியவர் தான் எம்.எஸ்.ஆர். சி.புஸ்பராஜா எதற்காக தனது புத்தகத்தில் இந்த மனிதரைப் பற்றிய பதிவுகளை தவறவிட்டிருந்தார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் கி. பி அரவிந்தனிடம் நான் ஒரு தடவை கதைத்த பொழுது அதற்கான காரணத்தை கேட்டிருந்தேன். அதற்கு அவர் கூறிய காரணம் நினைவுத் தேய்வுகள் காரணமாகத் தவறவிட்டு விட்டு விட்டேன் ஆனால் நீங்கள் கட்டாயம் எங்காவது அவரைப் பற்றி கட்டாயம் பதிவு செய்யுங்கள் என்று கூறியிருந்தார்.

ஆனால் அண்மையில் வெளியான ஐயரின் பதிவுகளில் நிச்சயமாக ஏதாவது ஒரு தகவலாவது எம்.எஸ்.ஆரைப் பற்றி இருக்கும் என எதிர் பார்த்தேன் ஆனால் ஏமாற்றம்.

ஐயரின் ஊரான வடக்கு புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்தவர்தான் எம்.எஸ்.ஆர் அதைவிட ஈழப் போராட்ட ஆரம்ப காலங்களில் ஐயரோடு இணைந்தே பல உதவிகளையும் போராட்டக் குழுக்களிற்கு செய்தவர்.ஆயுதப் போர் என அறைகூவல் விடுத்த சத்தியசீலன் தொடக்கம். அதை அடுத்த பரிமாணத்திற்கு தள்ளிய பொன் சிவகுமாரன் அதன் பின்னர் ஆயுதப்போராட்டங்களை வழி நடத்தத் தொடங்கிய உமா, பிரபாகரன், ஸ்ரீசபாரத்தினம் மட்டுமல்ல தொண்ணூறுகளின் யாழ். இடப்பெயர்வு நடக்கும் வரை பலாலி இராணுவ முகாமை சுற்றி காவல் கடமையில் நின்ற புலிகள் அமைப்பு போராளி வரை. இவரின் வீட்டில் ஒரு நாளாவது தங்கியிருந்து ஒரு வேளை உணவாவது உண்ணாதவர் கிடையாது.

M.G.R என்றால் அனைத்து தமிழர்களிற்குமே தெரியும் ஈழவிடுதலைப்போராட்டத்திற்கு அவர் என்னென்ன உதவிகள் செய்தார் என்பதும் அனைவரும் அறிந்தது ஆனால் அதேயளவிற்கு கொஞ்சமும் குறைவில்லாத உதவிகளை வெளியே தெரியாமல் செய்தவர் M.S.R. யார் இந்த M.S.R?..... M.S. ராஜேந்திரன். நெடிய கண்ணாடி அணிந்த உருவம். வடக்கு புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து குப்பிளான் செல்லும் வழில் இரண்டாவதாக இருந்த கேரளா பாணியிலான மிகப்பெரிய பழைய காலத்து வீடுதான் இவர்களது வீடு. எழுபதுகளில் பல லொறிகளை வைத்து கொழும்பிற்கு வியாபாரம் செய்து கொண்டிருந்த வசதி படைத்த குடும்பம். M.S.R என்கிற எழுத்து பதித்த லொறிகள் பொதிகளை ஏற்றியபடி யாழ் கொழும்பு வீதியில் அன்றைய காலங்களில் யாரும் பார்க்காமல் இருந்திருக்க முடியாது என்றே சொல்லாம். எழுபதுகளின் இறுதியில் ஆயுதப் போர் என்று தொடங்கியபோது அனைத்து போராளிகளையும் அரவணைத்து பாதுகாத்த ஒரு முக்கியமான வீடு இவருடையது.

எல்லாவற்றிக்கும் மேலால் தலைவர் பிரபாகரனிற்கு ஐயர் மற்றும் ராகவன் ஆகியோருடைய தொடர்புகள் கிடைத்த பின்னர். அவரின் முக்கியமான மறைவிடம் இவரது வீடுதான். பிரபாகரன் துரையப்பாவை சுட்டுக் கொன்ற பின்னரும். பொன் சிவகுமரனின் கோப்பாய் வங்கிக் கொள்ளை தோல்வியடைந்து சிவகுமார் பிடிபட்டபோது அவருடன் வங்கிக் கொள்ளைக்கு போயிருந்த கி.பி அரவிந்தன் தப்பியோடி நேராக போய்ச் சேர்ந்தது. இந்த வீட்டிற்குத்தான். இப்படி ஆரம்ப காலங்களில் இயக்க பேதங்களற்று அனைவரையும் போராளிகள் என்கிற நோக்கோடு அரவணைத்தவர்தான் M.S.R என்கிற மனிதன்.

பின்னைய காலங்களில் இயக்க மோதல்கள் தொடங்கிவிட புலிகள் அமைப்பின் ஆதரவாளராக மாறிவிட்டிருந்தார். M.S.R சரளமாக சிங்களம் கதைக்கத் தெரிந்தவர் என்பதால் வடக்கு கிழக்கிற்கு வெளியே புலிகள் அமைப்பு நடாத்திய தாக்குதல்களிற்காக பாவித்த அல்லது உதவிய சிங்களவர்களை இவரது வீட்டில் தான் கொண்டு வந்து தங்க வைத்து பராமரிப்பார்கள். அப்படியானவர்களிற்கு ஆடு அடித்து விருந்து வைப்பதில் இருந்து சாராயம் வாங்கி விருந்து வைப்பது வரை தனது செலவிலேயே செய்து முடிப்பார்.

நிழலாடும் நினைவுகள்

சாத்திரி - ஒரு பேப்பர்

அப்படியான காலங்களில் 85ஆம் ஆண்டு இறுதியில் பலாலி படை முகாமை சுற்றி காவல் நிலை அமைக்கும் பணிக்காக சென்றிருந்த வேளைஎனக்கும்அறிமுகமாகிறார்.அதன்பின்னர் அடிக்கடி அவர் வீட்டிற்கு சென்றுவரத் தொடங்கியிருந்தேன். எந்த நேரத்தில் யார் சென்றாலும் அவர்களிற்கு தேனீர் தயாரிப்பதற்காக அவர்கள் வீட்டு அடுப்பில் ஒரு பானையில் சுடுநீர் இருந்தபடியேதான் இருக்கும். எத்தனை பேர் போனாலும் சலித்துக்கொள்ளாமல். அவரது மனைவி றூபியக்கா இன் முகத்துடன் வரவேற்று சாப்பிடுறீங்களா தேத்தண்ணி குடிக்கிறீங்களா என்று வரவேற்றபடியேதான் இருப்பார். அவர்கள் வீட்டின் காணியில் இருந்த கழிவறையில் மேலே சீமெந்து தகடு(பிளாற்) போடப்பட்டிருந்தது அதனோடு ஒட்டியபடி ஒரு வேப்பமரம் அகன்று பரந்து வளர்ந்து கழிவறையின் மேல் பக்கத்தை நன்றாக மறைத்து வளர்ந்திருந்தது. அதற்குமேல் ஏறி நின்று பார்த்தால் வடக்கு புன்னாவை கட்டுவன் சந்தியில் இருந்து குப்பிளான் வீதி இரண்டு பக்கமும் நன்றாக பார்க்கலாம். அத்தோடு அவரது வீட்டிற்கு இரண்டு வீடு தள்ளி எதிரேயிருந்த ராகவன் வீடும் தெளிவாகத் தெரியும். “டேய் இந்த பிளாற்றிலை உங்கடை அண்ணன் பதுங்கி படுத்திருக்கிறவர்” என்று எனக்கு அடிக்கடி சொல்லுவார்.

86 ம் ஆண்டு தமிழ் நாட்டிலிருந்து தாயகம் திரும்பியிருந்த தலைவர் பிரபாகரன். ஆரம்பத்தில் தனக்கு அடைக்கலம் கொடுத்த வீடுகளிற்கு திடீரென போய் பார்த்து அவர்களிற்கு நன்றி தெரிவித்து இன்ப அதிர்ச்சி கொடுத்தக் கொண்டிருந்தார். அப்படி ஒரு இரவுப் பொழுதில் நான் M.S.R அண்ணரோடு அவரது வீட்டில் அரட்டையடித்தக் கொண்டிருந்தேன். றூபியக்கா இரவு உணவாக புட்டு அவித்துக் கொண்டிருந்தார்.

அவரது வீட்டிற்கு முன்னால் ஒரு வாகனம் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. ஆயுதங்களுடன் குதித்த பலர் மளமளவென அவரது வீட்டின் நாலு பக்கமும் புகுந்து நிலையெடுத்தார். அவரது வீட்டிங்கு அருகேயே இரண்டு பக்கமும் புலிகள் அமைப்பின் காவல் நிலைகள் இருந்ததால் அங்கு வேறு யாரும் வரும் சந்தர்ப்பம் இல்லாததால் நாங்கள் அமைதியாக நடப்பதை கவனித்தபடி இருந்தோம். என்னைப்பார்த்து யாரே பெரிய தலைபோலை இருக்கு சில நேரம் குமரப்பாவா இருக்கலாமெண்டார். காரணம் குமரப்பா அன்றைய காலங்களில் அந்தப் பகுதியில் தான் தங்கியிருந்தார். ஆனால் தலைவர் பிரபாகரன் வாகனத்தில் இருந்து இறங்கி வந்து கொண்டிருந்ததை கண்டதும் அட தம்பி வாறான் என்றார். அப்பதான் எனக்கு சங்கடமாயிருந்தது. தந்த வேலையை விட்டிட்டு இங்கை என்ன செய்யிறாயெண்டு பேச்சு விழலாமென எதிர்பார்த்தேன். ஆனால் வந்தவர் M.S.Rரை கட்டித் தழுவி அண்ணை எத்தினை வருசமாச்சு என்றபடி நலம் விசாரித்து விட்டு என்னை பார்த்தவர் சிரித்தபடி டேய் உனக்கும் இவங்களை தெரியுமா ஆச்சரியமாக கேட்டவர் முழு இயக்கத்தையும் இவர் தான் வளக்கிறார் போலை என்று விட்டு. என்ன றூபியக்கா சாப்பாடு றெடி போலை நல்ல நேரத்துக்குத் தான் வந்திருக்கிறன் என்றபடி குசினிக்குள் புகுந்து விட்டிருந்தார்.

அவருடன் மெய் பாதுகாவலர்கள் ஆறுபேர் வந்திருந்தார்கள். அனைவரிற்கும் றூபியக்கா அவித்த புட்டு போதாது என்பதால் மதியம் மிச்சம் இருந்த சோற்றையும் புட்டுடன் சேர்த்து பெரிய பாத்திரத்தில் போட்டு இருந்த கறிகளையும் ஊற்றி அவசரமாய் கலந்தவர். அதை கையில் உருட்டி பிரபாகரன் கையில் வைத்தவர் தம்பி மற்றவையையும் வரச் சொல்லுங்கோ என்றார்.

பெடியள் வாங்கோ அக்காவின்ரை கையாலை சாப்பிட குடுத்து வைக்கவேணும் என்று கூப்பிட்டார். ஆனால் விறைத்தபடி நின்றிருந்த பாதுகாவலர்கள் வரத் தயங்கினார்கள். அண்ணையின்ரை வீட்டிலை எனக்கு பாதுகாப்பு தேவையில்லை வாங்கோடா என்று மீண்டும் கூப்பிட்டதும்தான் ஒவ்வொருத்தராய் வந்து கையை நீட்டி சாப்பிட்டு முடித்ததும் M.S.R அண்ணன் செம்பில் தண்ணி அள்ளி அவர்கள் கைகள் கழுவ தண்ணீரை ஊற்றினார். சாப்பிட்டு முடிந்து புறப்படும்போது அண்ணை எந்த உதவி தேவையெண்டாலும் எங்களிட்டை கேளுங்கோ எண்டு சொல்மாட்டன் உங்கடை உதவிதான் எங்களுக்கு தொடந்தும் தேவை என்று M.S.Rரிடம் விடை பெற்ற பிரபாகரன் என்னை பார்த்து டேய் இங்கையே படுத்து கிடக்காமல் அலுவல்களை கவனி என்றுவிட்டு போய் விட்டார்.அப்படி எத்தனை வருடங்கள் கடந்தாலும் தலைவர் பிரபாகரனால் மறக்க முடியாத ஒரு மனிதராகவே M.S.R இருந்தார்.

இந்தியப் படையினரின் வருகை புலிகளோடு யுத்தம் தொடங்கியதும் பலாலியில் இருந்து புறப்பட்ட இந்தியப் படையினர் வடக்கு புன்னாலைக் கட்டுவன் சந்தியில் இருந்த அனைத்து வீடுகளையும் இடித்து தரை மட்டமாக்கினார்கள். சந்தியில் இருந்த சாமியார் வீடு. ஸ்பீக்கர் மோகனின் வீடு ராசாத்தியக்கா வீடு அவரது எரிபொருள் நிரப்பு நிலையம் என்பவற்றோடு M.S.R அவர்களின் வீடும் அவரது நடக்க முடியாத வயது முதிர்ந்த தந்தை குட்டியப்பாவோடு சேர்த்து இந்தியப் படைகளால் இடித்து தரை மட்டமாக்கப் பட்டதோடு அவரது லொறிகளையும் கொளுத்தி விட்டிருந்தார்கள்.

M.G.R என்றால் அனைத்து தமிழர்களிற்குமே தெரியும் ஈழவிடுதலைப் போராட்டத்திற்கு அவர் என்னென்ன உதவிகள் செய்தார் என்பதும் அனைவரும் அறிந்தது கொஞ்சமும் குறைவில்லாத உதவிகளை வெளியே தெரியாமல் செய்தவர் M.S.R.

எப்பொழுதுமே கலகலப்பாக இருக்கும் மனிதர் அன்றோடு இடிந்து போனார். கடைசியாய் தப்பியிருந்த ஒரேயொரு லொறியை விற்று எல்லாத் தொழில்களும் செய்து பார்த்தார். பின்னை காலங்களில் அவரது மூத்த மகனும் இயக்கத்தில் இணைந்து சண்டையொன்றில் தலையில் காயமடைந்து மனநிலை பாதிப்படைந்தவனாகிவிட்டிருந்தான். நீண்ட காலங்களின் பின்னர் இரண்டாயிரமாம் ஆண்டளவில் மீண்டும் தமிழ்நாட்டில் அவரது தொடர்பு கிடைத்தபோது என்னாலான சிறு உதவியினை செய்திருந்தேன். அது அவரது மகனின் மருத்துவ செலவுகளிற்கே போதுமானதாக இருந்திருக்கவில்லை. அவரும் மீண்டும் வன்னிக்கு போய்விட எங்கள் தொடர்பும் விடுபட்டு போய்விட்டது. இறுதியில் மிகவும் வறுமையான நிலையில் வவுனியா பூந்தோட்டப் பகுதியில் வசித்து வந்தவர் அண்மையில் இறந்து போய் விட்டார் என்கிற செய்திமட்டுமே எனக்கு கிடைத்தது.

முன்னை நாள் போராளிகளிற்கும் இயக்க ஆதரவாளர்களிற்கும் புலிகள் அமைப்பு அவர்களது வாழ்வாதாரங்களிற்கு உதவிகளையும் பொருளாதார வசதிகளையும் செய்து கொடுத்த காலகட்டங்களில் கூட தனக்காக உதவியென்று இயக்கத்திடம் போய் நிற்காமல் இறுதி வரை அவர்களிற்காக உதவி வெளியே தெரியாத வேராக செய்தே மரணித்துபோய் விட்ட அந்த மனிதனை இந்த மாவீரர் நாளில் நினைவு கூர்ந்து அஞ்சலிக்கிறேன்.

Soft teck
at the heart of technology...

CCTV :
From £599 NEW
4 CH DVR
4 Cameras
500GB HDD

Security Alarm :
From £299 NEW
Wireless Alarm
Front/Back Door
SMS Notification

EPOS :
From £1450 NEW
EPOS Terminal
Orbit Scanner
Thermal Printer
Cash Drawer
Customer Display

tel: 02034884884
email: info@soft-teck.com
web: www.soft-teck.com
address: 117 Lombard House, 2 Purley Way, Croydon, CR0 3JP.

கசக்கும் உண்மைகள்

நவம்பர் மாதம் 2ஆம் திகதி வெளிவந்த ***ஒரு பேப்பர்*** பூராயம் பகுதியில் காணப்பட்ட ஒரு செய்தி இத்தகவலை எழுதத் தூண்டியது. போராளியாக இயக்கத்தில் இணைந்து கொண்ட ஒரு பெண் போரின் முடிவின்பின் அவர் முகம் கொடுத்த கொடூர அனுபவங்களை ஒரு கதையாக ஆனந்த விகடன் சஞ்சிகைக்கு தந்துள்ளார். இதன் மறுபதிப்பாக தமிழ்வின் இணையத் தளத்திலும் பிரசுரமாகியது.

இவருக்கு நேர்ந்த அனுபவங்கள், பலருக்கு உண்டாகியதாக அவர் கூறுவதில் ஆதாரம் நிறையவே இருப்பதாக பலர் வாயிலாக அறிந்தோம். இதிலுள்ள பரிதாபம் என்னவென்றால், அவர்களை உற்சாகப்படுத்தியவர்களும், உறுதுணையாக நின்றவர்களும் உண்ண உணவு கொடுத்தவர்களும் ஒரு பெண் போராளி சாப்பாட்டுக்கே வழி இல்லாமல் பிச்சை எடுக்க நேர்ந்த போது எங்குதான் போனார்கள். அவருடைய கதை உண்மையானால் இவர் ஒரு பாலியல் தொழிலாளியாக மாற வேண்டிய சூழ்நிலையை உருவாக்கிய எமது சமூகம் வெட்கப்படவேண்டும்.

போராளிகளைக் கொச்சைப்படுத்தும் விதமாக இப்பேட்டி ஆனந்தவிகடனில் வெளிவந்ததைப் பொறுக்க முடியாது கொதித்தெழும் எமது உடன்பிறப்புகள், பேட்டி கொடுத்த ஒரு அனுபவங்களுக்கு ஆளாகினாலும் வாய்மூடி மௌனமாகி இருப்பது இதுவரை அறியாத உண்மைகள்.

05.10.2012இலும் முந்திய ***ஒரு பேப்பர்*** இதழ்களிலும் பிரசுரமான அலைமகள் என்ற கற்பனைக் கதை சாத்திரியின் படைப்பு. இக்கதையில் இழையோடும் சம்பவங்களுக்கும், விகடனுக்கு பேட்டியளித்த பெண் போராளியின் கதைக்கும் மறைத்தோ, மறைக்காமலோ சில சம்பவங்கள் தொடர்பு இருப்பதை வசித்தவர்கள் புரிந்து கொள்வார்கள்.

தாயகத்திலிருந்து அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு பயங்கரமான கடல் பிரயாணத்தையும் பாராமல், குழந்தை குட்டிகள், பெண்கள் என்ற வித்தியாசமின்றி உத்தரவாதமில்லாத ஒரு நெடும்பயணத்தை காணி, வீடு, நகை எல்லாவற்றையும் விற்றுத் தொலைத்து உயிர் பிழைத்தால், போதுமென்ற நோக்கோடு ஒரு வாய் கஞ்சியாவது நிம்மதியாகச் குடிக்கவென்று புறப்படும் தமிழ் குடும்பங்கள், சிங்கள இராணுவத்தின் அசுரப்பிடிகளிலிருந்து தப்பிக்க மட்டுமல்ல, பேட்டியளித்த பெண் போராளியைப் போன்று சமூகத்தால் ஒதுக்கப்பட்டு தமது மானத்தை இழந்துவிடாமல் தப்பித்துக் கொள்ளவே, இப்பயணங்களை தொடர்கிறார்களே என்று நினைக்கத்தான் தோன்றுகிறது. கொடுமையிலும் கொடுமை இளமையில் வறுமை.

பொப்பி மலரும் கார்த்திகைப் பூவும்

முதலாவது உலகப்போரினில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் நினைவாக கார்த்திகை மாதம் 2ஆவது ஞாயிற்றுக்கிழமை நினைவுதினமாக உலகெங்கும் மக்கள் நினைவு கூறுவது ஐரோப்பிய நாடுகளில் மறக்க முடியாத நிகழ்ச்சி. இந்நினைவு தினத்தை அடையாளம் காட்டும் சிவந்த பொப்பி மலர் ஆண், பெண் என்ற பேதமின்றி, தமது அங்கிகளில் அணிந்து வருவது வழமையான கலாசாரம்.

பொப்பி மலருக்கும் மாவீரர்களுக்கும் என்ன சம்பந்தம் என்று ஆராயப்போனால், போரினால் அழிவுற்ற பிரான்சின் வடபகுதியும் மேற்கு ஐரோப்பாவும், புல், பூண்டுகள் வளராத வனாந்திரமாகக் காட்சியளித்த காலகட்டத்தில், படையினரின் சடலங்கள் பரவிக்கிடந்த பகுதிகளில், சிவந்த நிறத்தில் பூத்துக்குலங்கிய பொப்பி மலர்கள் தான் காட்சியளித்ததாக கனேடிய வைத்திய கலாநிதி எம்.சி.கிளேர் தனது Inflacders Fields என்ற கவிதையில் தொடுத்துள்ளனர். முதலாம் உலகப் போரில் வீரச்சாவடைந்த படையினரையும், அதன்பின் உயிரிழந்த மாவீர்களையும் நினைவுகூறுமுகமாக சிவந்த பொப்பி மலர்கள் அடையாளப்படுத்தப்பட்டு 1921ஆம் ஆண்டு றோயல் பிரிட்டிஷ் லீஜன், மரணித்த படையினரின் நினைவுக்கு ஆதரவு கோரி பொப்பி அப்பீல் என பிரகடனப்படுத்தியதை தொடர்ந்தும் கடைப்பிடித்து வரும் கடப்பாடு போற்றப்பட வேண்டியது இங்கே தான் கார்த்திகைப்பூவின் ஞாபகம் அலைமோதுகிறது.

ஈழத்தில் விதைக்கப்பட்ட மாவீரர்களின் நினைவாக தூவப்படும் கார்த்திகைப் பூக்கள் என்றென்றும் அழிந்துவிடாமல், பேணிப்பாதுகாக்க இன்றைய தலைமுறையினர் மட்டுமல்லாமல், இளைய தலைமுறையினருக்கும் திடசங்கற்பம் பூணவேண்டும். அதுவே, தம்முயிரை தமிழுக்கும் தாய் மண்ணுக்கும் ஈசம் செய்த வீரத்தியாகிகளுக்கும் நாங்கள் செய்யும் கைமாறாகும். வாழ்க தமிழீழம்.

தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

காணமுடியாத கல்லறைகள்

முதலாம், இரண்டாம் உலகப்போரினில் வீரச்சாவடைந்த படைவீரர்களை ஞாபகப்படுத்தும் முகமாக எழுப்பப்பட்ட கல்லறைகள் இன்றும் ஐரோப்பிய நாடுகளில் அழியாமல் பாதுகாக்கப்படுவது, மறைந்த மாவீரர்களுக்கு மனிதாபிமானம் தரும் மகத்தான கௌரவம்.

இத்தகைய நாகரீகம், ஈழத்தில் இல்லாமல் போவது, போர் முடிந்த கையோடு கல்லறைகள் இருக்கும் இடங்களைத் தேடித்தேடி கிண்டிக் கிளறி அழித்த சம்பவங்கள் நினைவூட்டுகின்றன. போரினில் தமிழ் மன்னனாகிய எல்லாளனைத் தோற்கடித்த துட்டகைமுனு கூட, அந்த மன்னனின் சிலையை அனுராதபுரத்தில் நிறுவி, அவ்வீதியால் போவோர் வருவோர் அனைவரும் சிரம் தாழ்த்தி மரியாதை தரவேண்டுமென அரச கட்டளை பிறப்பித்து, சரித்திரம் கூறும் உண்மை இளம் வயதில் அவ்வழியே சென்ற போது நானும் அந்த மரியாதையைச் செலுத்தியுள்ளேன். இத்தகைய நாகரீகம் கூட தெரியாத, அச் சிங்கள மன்னனின் வழித்தோன்றல்கள் படிக்கவேண்டிய பாடங்கள் எத்தனையோ?

கார்த்திகை மாதம் வருவதற்கு முன்பே, கல்லறைகள் யாவும் சுத்தம் செய்யப்பட்டு மலர் தூவி அலங்கரித்து மாவீரர்களின் நினைவாக பொங்கி எழும் மக்கள் கூட்டத்தை, தாயகத்தில் இனி எப்போது காணலாம்? அங்கே கல்லறைகள் இருந்த இடத்தில் இலங்கை இராணுவத்தின் கட்டளை பிறப்பிக்கும் கட்டிடத் தொகுதிகள் அல்லவா ஆக்கிரமித்து கண்களை மறைக்கின்றன.

கல்லறைகளை அழிக்கலாம், அங்கே விதைக்கப்பட்ட மாவீரர்களின் தணியாத ஆசை என்றுமே அழியாது. ஆவர்கள் படுத்துறங்கிய பற்றுள்ள பாரம்பரிய மண், புதிய வீரர்களை பிரசவிக்கும் காலம் வராமலே போய்விடும். போர் முடிந்த பின்னரும் புலிகளின் பேரைச் சொல்லிச் சொல்லியே, தங்கள் அரசியல் ஆதிகாரங்களை தங்க வைக்க முயலும், சிங்கள அரசு தங்களை அறியாமலே புலிகள் மீண்டெழுவதற்கான விளம்பரத்தையும், புத்துணர்ச்சியையும் அடையாளம் காட்டுவது ஒரு விதத்தில் தமிழ் இனத்தின் தணியாத ஆசையை தட்டிக் கொடுக்கும் செயலாகவும் வரவேற்கலாம்.

புலம் பெயர்ந்த நாடுகளில் வதியும் எம் மக்கள் மாவீரர்களின் கல்லறைகளைக் காண முடியாது போனாலும், ஆண்டுதோறும் வழமையாக எடுக்கப்படும் நினைவு நிகழ்ச்சிகளை அலட்சியம் செய்யாது இலட்சியக்கணக்கில் பங்கு பற்றி எமது பணியை நிறைவு செய்ய திட சங்கற்பம் கொள்வோம்.

எழுதும் வரிகளே உருகிக் கசியும் கவிதை இவர்...

கொஞ்சம் முன்னர் வரையும்
இடியோடு இறங்கிய மழை
கொஞ்சம் ஆற தூறல் போடுகிறது வானம்.
இப்போ பின்னேரம்
சந்தியா காலம் மீண்டும் இடிமழைக்கான
அறிகுறியெறிகிறது இருண்டிருக்கும் மேகம்.

ஊர்திரண்டு வரிசைகட்டி நிற்கிறது
பிள்ளைகள் உறங்கும்
தொட்டில்கள் முன்னே.
கார்த்திகை நாளின் கடைதிறவு காண
உருத்துடையோர் காத்திருக்கின்றனர்.
நேரம் நொடிகளாய்க் கரைய
ஒவ்வொருவராய்
வெளியேறி வருகின்றனர்.

தோழர்களே! தோழியரே!
வழக்கமாகக் கல்லறை
வாசல் திறந்ததும் ஓடிவந்து கைபற்றிப்
புன்னகைப்பீர்களே
வருடமொன்றின் மௌனம் கலைய
வார்த்தைகள் கொட்டிப் புன்னகைப்பீர்களே
இன்றேன் சிரிக்காமலும்
ஏதும் பேசாமலும் ஏமாற்றுகின்றீர்?
கோபமா தோழர்களே
கோபமா தோழியர்களே!!
உங்கள் தாகம் தணிக்காப் பாவியர்
என்றா இத்தனை எடுத்தெறிவு?
ஈழத்தமிழருக்கு நிமிர்வையும்
ஆயிரம்கோடி
சூரியவெளிச்சமும் நல்கிய
மானப்பிறவிகளே மறப்போமா உம்மை?
கூட்டுக்குள் கிடந்து குமைகிறது உயிர்
பூவள்ளிப் போட்டே புண்ணாச்சு கைகள்
அழுதழுது நீர்வற்றிப் போனது
விழிக்கிணறு.
கண்மலரும் காலை ஒவ்வொன்றும்
வீரச்சாவுச் செய்தியுடன்தானே
விடிகிறது.
இமை மூடும்பொழுதும்
இடிவிழுத்திய செய்தியுடன்தானே
இருள்கிறது.
நிலவு முகம் திருத்திய பூங்குஞ்சுகளை
இழவு எடுத்துச் செல்கிறது நாளாந்தம்.
இன்னும் எத்தனை காலத்துக்கென்றுதான் இது?
பத்துப்பரப்பில் விதைக்கத் தொடங்கிய வயல்
இன்று ஏக்கர் கணக்காக நீள்கிறது.
விதைக்கக் குழிதோண்ட
வியர்க்கிறது நிலம்.
காற்றின் விழிகளிலும் கண்ணீர்.
வெள்ளையடித்த கல்லறைக்குள்ளே
பள்ளிகொள்கின்றனர் பரமாத்துமாக்கள்.
நூல்பிடித்தோடிய நேராய்
வரிசையான நாற்றுநடுகை
முளைக்குமென்ற எதிர்பார்ப்புப்
பொய்க்கவில்லை
கங்கும் கணையுமாக எங்கும் அரும்புகள்.
ஒருநாள் வந்து
உள்ளே புகுந்து பூவைத்துப் பாரும்.
குழியிருந்து கேட்கும் குரல்
பார்க்கும் விழி துடிக்கும் உயிர்.
எவர் சொன்னது இவர்களை
இறந்து போனவரென்று?
எவர் சொன்னது
எலும்புமுக்கி எருவானாரென்று?
வெளியே வருவதில்லையேதவிர
குழிகளுக்குள்ளே இவர்களின்
இராஜாங்கமே நடக்கிறது.
கார்த்திகை இருபத்தியேழு
தேசத்துக்கு உயிர்ப்பெழுதும் நாள்.
சில்லிட்டுப்போகும் நிலம்
பூக்கொண்டு நடப்போம் புனிதரிடம்
அருகணைந்து கல்லறை கழுவுவோம்
கண்ணீரால்.

நெய்விளக்கேற்றும் நேரம்
செல்வங்கள் விழிதிறப்பர்
செவி கேட்கச் சிரிப்பர்
மௌனமொழியில்
பெற்றமனம் குளிரப் பேசுவர்
அதில் ஆயிரம் அர்த்தங்கள் அவிழும்.
“மொழியாகி எங்கள் மூச்சாகி” என்று
என்புருக வழியும் பாடலில்
சிலிர்த்துப் போய்ச் சிலையாவோம்.
“பணிமுடித்து உறங்குகின்றோம்
மீதிவழி முன்செல்வீர்” என
தேவகுமாரரின் அசரீரி கேட்கும்.
எமக்கானது பூவல்ல
எமக்கானது சுடரல்ல
எமக்கானது இந்தப் பாடலுமல்ல.
எமக்கானது விடுதலை
எமக்கானது தேசத்தின் விடிவு.
காற்றேறும் இந்தப் பேரொலியுடன்
கல்லறைகள் மூடிக்கொள்ளும்.
ஒளிபெறும் திசையில் பாதை தெளிவுறும்.
வாசல்கடந்து வெளியேவர நிலம் விடிந்திருக்கும்.
எழுதும் வரிகளே உருகிக் கசியும்
கவிதை இவர்.

அடையாளமற்றிருந்த இனமொன்றின்
முகவரி இவர்.
விதி வலியதல்ல வலியதே விதியாகிறது என
எழுதிய புதுவிதி இவர்.
பிறப்புக்கு இறப்பால் அர்த்தம் சொல்லி
சிறப்புற்ற சீவன்முத்தர்கள் இவர்கள்.
தலைசாய்த்து வளைந்தாடுவதே
வாழ்வெனக் கருதும் நாணற்புற்களிடையே
நிமிர்ந்தெழும் வழியுணர்த்தியோர் இவர்கள்.
எப்படியென்றும்
எங்கணம் சாத்தியமானதென்றும் அறிய
நாளைய ஆய்வுக்காரர்களுக்காக
நடப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் இவர்கள்.
நேற்று இருந்ததெனவும்
இடையில் இல்லாதழிந்ததெனவும்
மீண்டும் இன்று முளைத்ததெனவும்
சொல்லப்படும் இனமானத்தினதும்
வீரத்தினதும் சொந்தக்காரர்கள் இவர்கள்.
அறியப்பட்டனவாகவும்
அதிகம் அறியப்படாதனவாகவும்
கல்லறை கிடக்கும் காலச்சாட்சிகள் இவர்கள்.
வீரத்தின் மணிமுடிதரித்து
ஒருகாலம் இப்படியும்
இருந்தோமெனச் சொல்லி
புதைக்கப்பட்ட காலப்பெட்டகங்கள் இவர்கள்.

நாங்கள் படைகொண்ட பரம்பரை என
மீண்டும் நிறுவிய மகுடர்கள் இவர்கள்.
சாவு வாழ்வின் முடிவல்ல
தொடக்கமுமாகலாமெனச் சொல்லி
வாழ்வுக்குப் புதிதான வழிகாட்டிகள் இவர்கள்.
கார்த்திகை மாதத்தில் பூப்பதால்
மற்றவர்களில் இருந்து மாறுபட்டு
அதிசயமாய் விளைவதால்
கானகத்தில் கரைந்துறைவதால்
கழுத்தில் நஞ்சணிவதால்
மஞ்சளும் சிவப்புமாய் மலர்வதால்
கார்த்திகைப்பூவே
மாவீரர்களுக்குக் கனகச்சிதமானது.

கார்த்திகைப்பூவே இவர்
இவரே கார்த்திகைப்பூ.
மாவீரர்நாள் கார்த்திகைப்பூ
பூத்திடும்நாள்.

எதுவரை...

தமிழ்விழி

(ஒரு பேப்பருக்காக)

சோறு வடித்துக் கொண்டிருந்த தாரிணி வீட்டு முற்றத்திலிருந்த தனது மகனைத் திரும்பிப் பார்த்தாள். அவன் கைகளால் மண்ணை அளைந்து கொண்டிருந்தான். கைகள் தான் செயற்பட்டதே தவிர தான் செய்யும் செயலுக்கான தெளிவு கண்களில் தெரியவில்லை. உடல் மெலிந்து தலையை ஒரு பக்கம் சாய்த்து வைத்தபடி கால்கள் இரண்டையும் நீட்டி வைத்துக் கொண்டிருந்தான். பார்த்த மாத்திரத்திலேயே அவனுடைய குறைபாடு புரியக் கூடியதாய் இருந்தது. எட்டு வயதுச் சிறுவனுக்குரிய செயற்பாடு எதுவும் அவனில் இல்லை.

தாரிணிக்கு அவள் விரும்பாமலேயே கண்களிலிருந்து கண்ணீர் பொங்கி வந்தது. சொல்லி அழ யாருமில்லை அழுதும் பயனில்லை. கண்களைத் துடைத்துக் கொண்டு கோப்பையில் சாப்பாட்டைப் போட்டு எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள். மகனைத் தூக்கி கை கால்களைக் கழுவி துடைத்துவிட்டு சாப்பாட்டை ஊட்டி விடத் தொடங்கினாள்.

நான்கு வருடங்களுக்கு முன்பு இருந்த தன்னுடைய கைகளுக்குள் அடங்காமல் ஓடித்திரிந்த சுட்டிப் பையன், இன்று தான் தூக்கி வைத்து உணவு ஊட்டும் நிலைக்கு ஆளாகிப் போன கொடுமையை நினைத்து ஒவ்வொரு நிமிடமும் நொந்து கொண்டிருக்கிறாள். பரந்து பட்ட நோக்கத்தைக் கொண்டிருந்த அவள், இன்று தன்னிரண்டு பிள்ளைகளை நோக்கியே உயிரைப் பிடித்துக் கொண்டிருக்கிறாள். சுவரில் எறியப்பட்ட பந்தாய் காவு கொள்ளப்பட்ட தேசத்திலிருந்து கணவனையும் பறி கொடுத்து விட்டு திரும்பி வந்தபோது, அண்ணா சொன்னார்:

“தங்கச்சிக்குக் கலியாணம் இன்னும் ஆகேல்லை நீ இப்ப வந்தால் நாங்கள் என்ன செய்யிறது? எங்களுக்குக் கிட்ட ஒரு காணியிலை கொட்டில் போட்டுத் தாறன். இப்போதைக்கு அதில இரு பிறகு பாப்பம்”.

அவள் தனது ஒன்பது வயதான மூத்தவன் குட்டியுடனும் உடலும் மனதும் பாதிக்கப்பட்ட சின்னவனுடனும் அந்தக் கொட்டிலுக்குள் ஒடுங்கிக் கொண்டாள்.

அவள் அவர்களிலிருந்து ஒதுங்கினாளே தவிர தன் நோக்கத்தில் இருந்து ஒதுங்கவில்லை. பிள்ளைகளோடு தன் முழு நேரத்தையுமே செலவிட்டாள். மூத்தவன் குட்டி படிப்பில் சுட்டியாயிருந்தான். தாயின் கண்ணீரைப் புரிந்திருந்தான். நல்லவர்கள் பூமியில் இன்னும் இருக்கிறார்கள் என்று உணர்த்தும் வகையில், தாராள மனம் படைத்தோர் அவளது நிலைக்கு உதவியது மிகப்பெரிய ஆறுதலாயிருந்தது. இருந்தாலும் வாய்விட்டு உதவி கேட்க ஏதோ தடுத்தது. கிடைத்ததை வைத்து சமாளித்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் சின்னவனுடைய மருத்துவச் செலவு எகிறியது. பெரியவன் குட்டியை அவள் இவ்வளவு சிரமத்துக் கிடையிலேயும் ஒரு தனி ஆசிரியரிடம் பாடசாலைக்குப் பிறகு படிக்க அனுப்பிக் கொண்டிருந்தாள். பாடசாலைக்கும் வீட்டுக்கும் அதற்குப் பிறகு டியுசனுக்கும் என்று அவன் அலைவதும் அவனுடன் பயத்தில் அவளும் சின்னவனைத் தூக்கிக் கொண்டு அலைவதும் சிரமமாக இருந்தது. அவள் சின்னவனையும் தூக்கிக் கொண்டு அலைய அவனுக்க அடிக்கடி காய்ச்சல் வரத் தொடங்கியது.

ஒரு நாள் மாலை பாடசாலையிலிருந்து குட்டி திரும்பிய போது, முகம் அவ்வளவு நன்றாக இல்லாமலிருந்தது. தாய் விபரம் அறிய முற்பட்டாள்.

“என்னப்பு? சுகமில்லையா?”.....

“ஒண்டுமில்லை”......

தாரிணி கிட்ட வந்து நெற்றியில் கையை வைத்துப் பார்த்தாள். சுடவில்லை. வேறேன்னவாயிருக்கும்?.....

“என்னெண்டு சொன்னாத்தானே எனக்குத் தெரியும்?’

“நாங்கள் இஞ்ச வந்து நாலு வருஷமாகிது. நடந்து நடந்து நான் களைச்சுப் போட்டேன் அம்மா. எனக்கு ஒரு சையிக்கிள் உங்களால வாங்கித் தர ஏலுமோ?....

“அப்பா இருந்திருந்தால் எனக்கு வாங்கித் தந்திருப்பார்’ தாரிணிக்கு உண்மையாகவே நெஞ்சு வலித்தது. கொஞ்ச நேரம் எதுவும் பேச முடியாமல் இருந்தது.

“ம்ம்.... அப்பா இருந்திருந்தால் கட்டாயம் வாங்கித் தந்திருப்பார்.’

“எல்லாப் பிள்ளையளும் பள்ளிக்கூடத்தாலை நேரத்தோடை வீட்டை வந்து, விளையாடி பிறகு படிக்க நேரம் இருக்கு, நான் மட்டும்தான் நடந்து வீட்டை வாறதுக் கிடையிலேயே களைச்சுப் போடுறன், ஒரு சயிக்கில் இருந்தால் நானும் கெதியிலை வீட்டை வந்திடுவன்? டியுசனுக்கும் போய்வர வசதியா இருக்கும்”.

குட்டி கள்ளமில்லாமல் தன்னுடைய ஆதங்கத்தை விளக்கினான். ஆனால் தாரிணி என்ன செய்வாள்? யாரிடம் கேட்பாள்? மகனுக்குக் கிட்ட வந்து முதுகைத் தடவிக் கொடுத்தாள்.

“பாப்பம்” என்றாள்.

மகன் அம்மாவை உற்றுப் பார்த்தான். அந்தப் பார்வையில் அவநம்பிக்கை தெரிந்தது. தாரிணி தலையைத் திருப்பிக் கொண்டு உள்ளே போய் விட்டாள். அன்று இரவு முழுவதும் காலக் கொடுமையை நினைத்து ஆத்திரம் தீர திட்டித் தீர்த்து அழுது முடித்தாள்.

அடுத்த நாள் காலை தலையிடியுடன் தொடங்கியது. நேற்றிரவு சம்பவம் தாரிணி, மகன் இருவரையும் வெகுவாகப் பாதித்திருந்தது. மகனுக்கு சாப்பாட்டைக் கொடுத்து அனுப்பி விட்டு என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. தொலைபேசியில் பேசியவர்களிடம் சையிக்கிளுக்கான பணம் கேட்க வாய் துடித்தது. ஆனால் வார்த்தைகள் வெளி வர மறுத்தன.இன்னொருவரிடம் தன்னிலை சொல்லிக் கையேந்துவது கடினமாயிருந்தது.

இன்று மாலையிலும் குட்டி களைப்புடன் பாடசாலையிலிருந்து திரும்புவான்.......

அவனுக்கு யார் சையிக்கிள் வாங்கிக் கொடுப்பார்கள்?

விகடனும் ஈழப்பிரச்சினையும்

(12ம் பக்கத் தொடர்ச்சி)

விகடனின் இந்தக் கட்டுரைக்கு பல ஊடகங்கள் எதிர்ப்புத் தெரிவித்தன. யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு ஊடகர் விகடனில் சொல்லப்பட்டது போல் ஒரு பாலியல் தொழிலாளி யாழ்ப்பாணத்தில் இல்லை என்று எழுதினார். இது விகடனை ஆட்டம் காணச் செய்து விட்டது. இதைத் தொடர்ந்து விகடன் ஆசிரியரே களத்தில் இறங்கி ஒரு கட்டுரையை எழுதினார்....

அதில் விடு தம்பி என்ற தலைப்பில் ஒரு படத்தையும் இணைத்திருந்தார். அதில் ஈழப் போராளிப் பெண் வித்தியா ராணி ஈழத்தமிழில் சொல்லுவது போல எழுதப்பட்டிருக்கிறது. அதில் ஒரு முக்கியமான சொல் ‘படிச்சுப்பிட்டு’ என்பதாகும். படிச்சுப்பிட்டு என்று ஈழத் தமிழர்கள் சொல்லுவது இல்லை. ’படிச்சு போட்டு’ என்றுதான் சொல்வார்கள். இது விகடனின் உண்மைத் தன்மையில் ஐயப்பட்டை ஏற்படுத்துகிறது. இதை ஒரு அச்சுப் பிழையாக எடுத்துக் கொள்வோம்.

விகடன் ஆசிரியன் தமது சஞ்சிகைகள் நடுநிலையானது என்கிறார்:

“ஈழத்தைப் பார்க்காதே,ஈழம்பற்றிப் பேசாதே,ஈழம்பற்றி எழுதாதே” என்று அறிவிக்கப்படாத அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்ட அந்தக் காலத்திலே கூட, துயர் மிகுந்த ஈழத் தமிழ் மக்களின் கண்ணீரை உலகத் தமிழர்களின் வாசல்களில் கொண்டுவந்து கொட்டியது விகடன் குழுமம்தான்.

இந்த அறிவிக்கப்படாத அவசரநிலைப் பிரகடனத்தை ஏற்படுத்தியது கருணாநிதியின் அரசா அல்லது மைய அரசான காங்கிரசு அரசா என்பதை விகடன் பகிரங்கப்படுத்த வேண்டும். தமிழர்களின் பெரிய பிரச்சனை தமது ஆதரவாளர்கள் யார் எதிரிகள் யார் என அறிய முடியாமல் இருப்பதே.

விகடன்மீது ஏற்பட்டுள்ள ஐயப்பாட்டைச் சரிசெய்யவும் விகடனுக்கு நல்ல விளம்பரம் ஏற்படுத்திக் கொடுத்த வித்தியா ராணிக்கு ஒரு நல்ல விடிவு கிடைக்கவும் விகடன் செய்ய வேண்டியது ஒன்று உள்ளது. குறிப்பிட்ட வித்தியா ராணி என விகடன் பெயரிட்ட முன்னாள் பெண் போராளியின் பெயரையும் இருப்பிடத்தையும் பன்னாட்டு மன்னிப்புச் சபையிடமும் (Amnesty International) ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்கழகத்திடமும் சமர்ப்பிக்க வேண்டும். அவர்கள் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு விமோசனம் செய்ய வழி வகுப்பார்கள். பாதிக்கப்பட்ட பெண் இலங்கை அரசு செய்த போர்க்குற்றங்களுக்கு ஒரு நல்ல சாட்சி. பாதிக்கப்பட்ட பலருக்கு நீதிகிடைக்க இது உதவும்.

பன்னாட்டு மன்னிப்புச் சபையிடமும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்கழகத்திடமும் வித்தியா ராணி தொடர்பான விபரங்கள் சமர்ப்பித்தால் அவர்கள் வித்தியா ராணியை சாட்சியாக அவரது பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வார்கள். விகடனே தயவு செய்து ஐநா பொதுச் செயலாளர் பணிமனைக்கு இது தெரியக் கூடாது. அங்கு இலங்கை அரசின் பாதுகாப்பு ஆலோசகராகப் பணிபுரிந்த சதீஷ் நம்பியாரின் உடன் பிறப்பு விஜய் நம்பியார் உயர்பதவியில் இருக்கிறார். இப்படிச் செய்வதால் வித்தியா ராணி பற்றி நீங்கள் எழுதியது உண்மைதான் என்று நிரூபிக்கலாம்.

விகடன் வித்தியா ராணி எனப்படும் முன்னாள் விடுதலைப் போராளியின் விபரங்களை பன்னாட்டு மகளிர் உரிமை அமைப்புக்களிடம் கையளிக்க வேண்டும். அவர்கள் வித்தியா ராணி எனப்படுபவருக்கு உரியன செய்வார்கள்.

கருவில் இருப்பது பெண் என்று தெரிந்தவுடன் கொல்லும் நாட்டின் மகளிர் உரிமை அமைப்புக்களுக்கோ இரண்டாவது வரதட்சணைக்காக மருமகளை உயிருடன் கொழுத்தும் நாட்டு மகளின் உரிமை அமைப்பினருக்கோ வித்தியா ராணி எனப்படுபவருக்கு எந்த வித நன்மையும் கிடைக்காது என்பதைக் கருத்தில் கொள்ளவும்.

விகடனின் கட்டுரைக்குப் பின்னூட்டமிட்டவர்கள் பாதிக்கப்பட்ட வித்தியா ராணிக்கு நிவாரணம் கிடைக்க ஏதாவது செய்யும் படி கேட்டிருந்தார்கள். இதுவரை அப்படி ஏதும் செய்ததாகத் தெரியவில்லை.

தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் மட்டும் ஈழத் தமிழர்களின் பிரச்சனையை முன் வைத்துப் பிழைப்பு நடத்தவில்லை விகடன் போன்ற ஊடகங்களும்தான் பிழைப்பு நடத்துகின்றன.

கருத்துக்களுக்கு Twitter - @orupaper Facebook : facebook.com/orupaper

- ✓ Accountancy & Auditing
- ✓ Business Start up Advice
- ✓ Business Plans & Cash Flow Forecasts
- ✓ Personal tax Affairs & Self Assesment
- ✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
- ✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
- ✓ Company Formation
- ✓ Attending VAT & PAYE visits
- ✓ Tax Investigations
- ✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தினால் மட்டும் போதுமா?

மௌலி
(ஒரு பேப்பருக்காக)

மாவீரர்களின் கனவாக்கும் நனவாக்கும் சர்வதேச நகர்வுகளைச் செய்யக் கூடிய செயலணி அதற்குரிய கட்டுமானங்களினோடு புலம்பெயர் தேச அமைப்புக்களிடம் உண்டா என்ற ஐயம் என்னிடமும் உள்ளது. அது பற்றி இந்த புனித காலத்தில் சிந்திக்கத் தூண்டுவதே இக் கட்டுரையின் நோக்கம் .

விடுதலைப் புலிகள் தமிழீழ நிர்வாக அலகொன்றை உருவாக்கி வந்தவர்கள். அவர்களின் இலட்சியத்தை அடைய புலம்பெயர் தேசத்தில், 'சங்கங்கள்' அமைத்து அல்லது சங்க உறுப்பினர்கள் நடப்பது போல் நடந்து கொண்டு தமிழீழ இலட்சியத்தை அடைய முடியாது. சரியான திட்டமிடல், ஒத்திகை பார்த்தல், ஒரு நடவடிக்கையின் பின் அதில் பெற்ற அனுபவங்கள் தொடர்பாக மீளாய்வு செய்தல். அதனூடாக கற்றுக் கொள்ளல் உட்பட பல எமது புலம்பெயர் போராட்ட நடவடிக்கைகளிலும் அவசியமாகவுள்ளது.ஈழத்தில் எமது விடுதலைப் போராட்டம் வன்னியில் வைத்திருந்த நிர்வாக பிரிவு, அதற்கான பயிற்சிவகுப்புக்கள் போன்றவை இதற்கு ஒரு உதாரணம்.

எமது ஊடக எழுத்தாளர்கள் ஆழமான அரசியல் நடவடிக்கையை தூண்டுபவர்களாக இல்லாமல்? வெறும் 'மரண விசாரணை அதிகாரிகள்' போல நடந்து கொள்கின்றார்கள். எமது எழுத்தாளர்கள் என்ன செய்யப்படவேண்டும்? எவ்வாறு செய்யப்படவேண்டும் என சிந்தித்து எழுத ஆரம்பிக்க வேண்டும். சமூகம் என்ற ரதத்தை முன்னோக்கி இழுக்கும் வெள்ளைக் குதிரைகளின் பணி எழுத்தாளர்கள் முன் இருக்கின்றது .

அண்மையில், பிரித்தானிய தமிழர் பேரவை உலகத் தமிழர் மகாநாடு நடாத்தி இருந்தது. அது குறித்து மகா நாடு முடிந்த பின் 'மரண விசாரணை அதிகாரியாக' தாமரை காருண்யன் என்ற சர்வேந்திரா தர்மலிங்கம் என்பவர் பிரித்தானிய தமிழர் பேரவை எடுத்த சில முடிவுகள் குறித்து சர்ச்சை கிளப்பி இருக்கின்றார் . இது தேவை தானா? மகாநாடு தடைகளை தாண்டி ஒரு தீர்மானத்தை எடுத்திருக்கின்றது. அதனை நடை முறைப்படுத்த வேண்டிய கருத்துக்களை முன் வைப்பதே 'கருத்துருவாக்க' சக்திகள் என தமக்கு தாமே பட்டம் சூட்டுவோரின் கடமை. அதை விடுத்தது சொற்களைக் கோர்த்து வீண் வார்த்தை பேசுவதில் என்ன பொருள் உண்டு?

ஒரு அரசியல் அமைப்பில், அல்லது செயற்பாட்டில் உள்ளக விவாதங்களில் முன் வைக்கப்படும் முன் மொழிவுகள் விவாதிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும் பொழுது பல்வேறு கருத்துக்கள் வருவது இயல்பானதே. விவாதத்தின் இறுதியில் எடுக்கப்படும் தீர்மானம் தான் அங்கு முக்கியமானது .

ஐ.நா மனித உரிமைப் பேரவையில் நடைபெற்ற விடயங்கள் ஐந்து விடயங்களைத் தொட்டு இந்த விடயத்தை பார்ப்போம் .

1. 210 பிரேரணைகளில் 110 பிரேரணைகளை சிறீலங்கா நிராகரிப்பு என்பதே அனைத்து ஊடகங்களிலும் தலைப்பாக இருந்தது. இது என்ன கத்தரிக்காய் வியாபாரமா செய்கிறோம். 210 பிரேரணைகளில் 209 பிரேரணைகளை சிறீலங்கா ஆதரித்திருந்தால் என சிந்தித்து பாருங்கள் எவ்வளவு முட்டாள் தனமாக இருந்திருக்கின்றோம் என்பது புரியும். ஆம் அந்த நிராகரித்த விடயங்கள், அது தொடர்பான நாடுகள், சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் . அதனை எவ்வாறு பயன் படுத்தலாம் என்பது பற்றி எமது எழுத்தாளர்களோ , ஊடகங்களோ , மக்களோ கவனம் செலுத்தவில்லை . மாறாக எந்த பலனும் அற்ற மாகாண சபை விடயத்தில் இந்தியா பல்டியா? இல்லையா ? என்பது பற்றி கருத்துருவாக்க சக்திகள் விவாதம் நடாத்துகின்றன.

2. தென் சூடான் அரசுடன் உறவுகளைப் பேணுவதாக நாடுகடந்த அரசார் அடிக்கடி கூறி வந்துள்ளனர். தென் சூடானில் அலுவலகம் கட்டுவதாகவும் அவர்கள் கூறி இருக்கின்றனர் . ஐ.நா மனித உரிமை பேரவையில் தென் சூடான் எவ்வாறு நடந்து கொண்டது என்பது பற்றி எமது ஊடகங்களோ, எழுத்தாளர்களோ, மக்களோ கவனம் செலுத்தியதாக இல்லை. மக்களும் ஊடகங்களும் இது பற்றி கேள்வி கவனம் செலுத்தவேண்டும்.

3. தென்னாபிரிக்கா தலைமையில் பேச்சு வார்த்தை எனப சிலர் பேசிக் கொளின்றார்கள் . ஐ.நா மனித உரிமைச் சபையில் தென்னாபிரிக்கா எப்படி நடந்து கொண்டது என்று எமது மக்கள் மட்டுமல்ல ஊடகங்களும் பேசவில்லை. நிலைமை இப்படி இருக்கும் பொழுது எமது மக்கள் எப்படி அறிவார்ந்த முடிவுகளை எடுக்க முடியும் .

4. மரண தண்டனையை நீக்குமாறு வைக்கப் பட்ட கோரிக்கையை சிறீலங்கா நிராகரித்திருக்கின்றது . அது பற்றி யாரும் பேசவில்லை . மரண தண்டனை ஒழிக்கப்படவேண்டும் என உலகெங்கும் இருக்கும் அரசியல் தளம் பற்றிய தெளிவின்மையே இதற்கு காரணம் .

5. அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றான உயிர்வாழும் உரிமை (Right to life) ஐ இணைக்க சிறீலங்கா மறுத்திருக்கின்றது . என உலகெங்கும் இருக்கும் உயிர்வாழும் தொடர்பான அரசியல் தளம் பற்றிய தெளிவின்மையே இதற்கு காரணம்.

இன்னுமொரு முக்கிய விடயத்தை குறித்து கட்டுரையை முடிக்கலாம் என நினைக்கின்றேன். சீனாவில் அடிப்படையான மாற்றம் ஒன்று இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது . கம்யூனிஸட்கட்சியில் புதிய தலைவர் இம்மாத முற்பகுதியில் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். இவர் புதிய தலைமுறையை சேர்ந்த, சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர் என அறிகின்றேன். இந்த மாற்றங்களை நாமறிந்து , சீனாவில் உள்ள விடயங்களைப் புரிந்து கொள்வதன் மூலம் செயல்பட எந்த முயற்சியும் தலைமைகள் எடுக்கவில்லை . ஒபாமாவிற்கு வாழத்து அனுப்பியவர்கள் சீனாவில் நடைபெறும் மாற்றத்தை எமக்கு சாதகமாக திருப்ப முடியுமா என முனைந்து கொள்ளவில்லை. எமது மக்களும் உலக அரசியலில் ஆர்வமற்றவர்களாகவே இருக்கின்றார்கள் .

அமெரிக்காவை அல்லது இந்தியாவை எடுத்துக்கொள்ளுங்கள் , ஒவ்வொரு நாட்டுக்கும் என ஒரு பிரிவு இருக்கும் . விக்கி லீக்ஸ் ஆவணங்கள் இதனை தெளிவாக காட்டுகின்றன. டக்ளசின் முன்னாள் மனைவி, கருணாவின் காதலி என்பது கூட அவர்கள் பதிவு செய்து அமெரிக்க அரசுக்கு அறிவித்துள்ளார்கள்.

மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்துவது மட்டும் சுதந்திர போராட்டம் ஆகிவிடாது . மாவீரர் கனவுகளை சரியாக புரிந்து கொள்ளலும், இலக்குகளை அடைய அவர்கள் கடைப்பிடித்த நெளிவு சுழிவுகளை சரியாக புரிந்து கற்றுக் கொள்ளலும் , அவர்கள் தம் இன்னுயிரை ஆகுதியாக்கிய இலட்சியத்துக்காக , நாய் வேஷம் போட வேண்டிய இடத்தில நாய் வேஷம் போட்டும், நெஞ்சை நிமிர்த்தி நிற்கவேண்டிய இடத்தில் நெஞ்சை நிமிர்த்திம் நாம் நகர வேண்டும். மாவீரர்களுக்கு உண்மையான அஞ்சலி என்பது, பலமான தமிழீழ அரசை அமைப்பதற்காக இது போன்ற சிறந்த கட்டமைப்புக்களை உருவாக்குவதும் அவசியம்.

நினைவுகள் சுமப்போம்....

நினைவுகள் நிதர்சனமாய்
ஒலிக்கும் அதன் உரைகள்
அதிர்வுகளாய் கடக்கும்
அகிலம் அதை தட்டிக்
கேட்கும் என்ற எதிர்பார்ப்பு
எமைக் கடந்து போகையிலும் ....
வாழ்கிறோம் நம்பிக்கை
தனை சுமந்து...

பனி படர்ந்த பாதை தனில்
பாவை என் பாதம் படர்கையில்
குளிரில் விரவும் உள்ளம் கேட்டது
உன் தேசம் எதுவென்று...

பறவையினம் பாடிப் பறக்கையில்
வாடி போன உளம்
கேட்டது உனது உறவுகள்
அங்கே நலமா என்று...

விடை எனக்கு தெரியவில்லை ..
அதன் தடமும் எங்கெனத்
தெரியவில்லை...

முட்கள் தைக்கும் வலி சுமந்து கனகாலம் ..
முப்பதாண்டு தியாகம்
மூடிபோன கனதியில்
வாடிப்போன மனமிங்கு இறந்தகாலம்...

கார்த்திகைப் பூக்கள்
மனதில் எழும் போதெல்லாம்
மனம் கரைந்து இனம் அழுகிறது இங்கே..

செம்மல்களின் கல்லறையை அகழ்ந்த
பாவி ஒரு மகாத்மா என்று புல்லுருவி
பல்லவி படிக்கிறது...

எமதினத்தின் குருதியை
குடித்தவன் காந்தியாம்....
என்று பல்லிளித்து பொய்யுரைக்கிறது ....

எங்கே செல்கிறது எம் தேசம்...
ஏனிந்த வெளிவேசம் துட்டரின் துவேசங்கள்
எட்டப்பரின் கரகோசமாய் விண்ணைத்
தொடுகையில் மனிதம் கரைந்து இங்கு
வெகுகாலம்........

எமக்காய்....
உயிர் கரைத்த உயிர்கள் நினைந்து
உயிருருகி உணர்வை விளக்காய்
ஏற்றிடுவோம் ....
அவர் நினைவு சுமந்து
அவர் புகழ் போற்றிடுவோம்...

-கல்கி(யாழில்)-

இலங்கையில் எந்தப் பாகத்திற்கும் வீட்டுக்கு வீடு சேவை

இலங்கை மற்றும் இந்தியாவிற்கு விசேட விலையில்
விமான மார்க்கமாகவும் பொதிகள் அனுப்பப்படும்

DUNN SHIPPING LTD.
02088422020
07949361434
07949361313
67, Gap Road, Wimbledon, SW19 8JA.
info@dunnshipping.co.uk - www.dunnshipping.co.uk

• இரண்டு நாட்களில் கொழும்பிற்கான துரித தபால் சேவையும் உண்டு
• இலங்கையில் சகல இடங்களுக்கும் வீட்டிற்கு நேரடியாக விநியோகம்.
• விசேட சலுகைகள்

Door to Door Delivery

• Vehicle Shipping
• Furniture Shipping
• Express Letter Service
• Packing Service
• Relocation Service
• Man and Van Service
• Packing Materials
• European Parcel Service

பொருட்கள் பெற்றுக் கொள்ளும் இடங்கள்
* GREENFORD * WIMBLEDON * VAUXHALL * BIRMINGHAM
* STOKE-ON-TRENT * A-LANKA TRAVELS LTD, TOOTING

மண்ணுக்காக மரணிப்பதே மாவீரம்

‘மாவீரரே,
விடுதலைக்கு நீர் தந்த விலை அதிகம்
உரிமைக்கான போரில்
உயிர் கொடுப்பதே பெரும் பேறு
மண்ணுக்காக மரணிப்பதே மாதவம்’

வேதனை மீதுரப்பெற்று மாவீரர்களுக்கான வணக்கத்தைச் சொல்ல வந்தேன். சுமார் நாற்பதினாயிரம் மாவீரர்கள் ஒன்றை மாத்திரம் நினைத்து தம்மைக் கொடையாகக் கொடுத்தார்கள். ‘அண்ணன்’ மீது உறுதி வைத்து தமிழீழம் என்ற ஒன்றை மாத்திரம் வேண்டி அவர்கள் விதையாக வீழ்ந்தார்கள். விதை என்று நம்பி வீழ்ந்தார்கள். அவர்களின் அந்த நம்பிக்கை தான் என்னை நார் நாராக கிழிக்கின்றது. விதை என்று வீழ்ந்தால், பல்லாயிரம் விருட்சங்கள் எழுந்திருக்க வேண்டும். எழுந்ததா? விருட்சங்கள் தான் வேண்டாம். சிறு முளையாவது முளைத்ததா? அரும்பு கட்டியதா? அம்மாவீரரை நாம் ஒரு கணமேனும் நெஞ்சில் நிறுத்தினோமா? மாவீரரின் அத்தனை தியாகங்களையும் தின்று செமித்துவிட்டு அபிவிருத்தி அரசியல் என்று போகின்றது ஒரு கூட்டம்.

மாவீரரின் அத்தனை வளங்களையும் வாங்கி உறிஞ்சிவிட்டு இணக்க அரசியல் என்று வாக்குப் பொறுக்கித் திரிகிறது இன்னொரு கூட்டம். மாவீரர் எதற்கு மரித்தார் என்று கிஞ்சிட்டும் அக்கறை இல்லாது இரண்டு மூன்றாக இடிபட்டு நிற்கிறார்கள் எம்மவர்கள் சிலர். மாவீரர்களுக்கான வணக்கத்தைக் கூட ஒரு மேடையில் நின்று உணர்வுடன் பகிர ஒருப்படுகிறார்கள் இல்லை எம்மவர்கள்.

தாய்த்தேசத்திலிருந்து வரும் செய்திகள் எம்நெஞ்சை தைக்கின்றன. நம் தாயகத்தின் ஒரு பிரதேசமான அம்பாறை மாவட்டம், சுதந்திர இலங்கையில் சிங்களநிலமாக கபளீகரம் செய்யப்பட்டது. நான் அறிய 1970 பொதுத் தேர்தலில் கூட சிங்கள பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூட அங்கிருந்து வரவில்லை. இப்பொழுது அம்பாறையின் கதி யாவருக்கும் தெரிந்ததுதான்.

தமிழீழத்தின் தலைநகரம் என்று நாம் கொண்டாடிய திருகோணமலைக்கு நடக்கும் கதி நாம் அனைவரும் அறிந்ததே. நம்தேசம் பறிபடுகின்றது. நம் பண்பாடு அழிபடுகின்றது. நம் மொழி சிதைபடுகின்றது. இவற்றிலிருந்து நம் ஈழத்தமிழினம் மீள வேண்டும் என்று தம் இன்னுயிரை உவந்தளித்தார்கள் அம்மாவீரச் செல்வங்கள்.

இப்பொழுது சில செய்திகள் நம் காதை வந்தடைகின்றன. கிளிநொச்சி, இரணைமடுக்குளத்தின் பக்கத்தில் நாற்காயிரம் ஏக்கர் காணியில் சுமார் பத்தாயிரம் சிங்கள விமானப்படையினரின் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவிருக்கின்றன. அதாவது சுமார் நாற்பதினாயிரம் சிங்களவர்கள் இரணைமடுக்குளத்தைச் சுற்றிக் குடியேற்றப்படுகின்றனர்.அதாவது இரணைமடுவில், ஒரு சிங்கள நகரம் உருவாகின்றது.

அவ்வாறே திருகோணமலை துறைமுக அபிவிருத்திக்காக ஐயாயிரம் சிங்களவர்கள் வேலைவாய்ப்புப் பெறுகின்றனர். அவர்களுக்கான வதிவிட வசதிகள் செய்து கொடுபடுகின்றன. சுமார் இருபதினாயிரம் சிங்களவர்கள் திருகோணமலை நகரத்தில் குடியேற்றப்படப் போகின்றனர். இன்னும் இன்னுமென சிங்கள அபிவிருத்திப்பணிகள், முடுக்கிவிடப்படுகின்றன.

இவற்றையெல்லாம் நானோ, பிற தமிழ்த் தேசிய சக்திகளோ கூறவில்லை. சிங்கள அரசின் ஊது குழலான ‘டான்’ தொலைக்காட்சிச் சேவையினரே கூறுகின்றனர். இவை பற்றி அபிவிருத்தி அரசியல் பேசுவோரோ இணக்க அரசியல் பேசுவோரோ ஒன்றுமே பறையப் போவதில்லை. இதனூடாக தங்களது வளத்தையும், வயிற்றையும் பெருக்குவதே அவர்களின் நோக்கமாக இருக்கும்.

என் மகாவேதனை அதுவே, தாயகத்தில் உள்ள, சில நண்பர்களுக்கு சிலவற்றைச் சொல்ல விழைகிறேன். போர் உங்களைச் சிதைத்திருக்கலாம். சின்னாபின்னப் படுத்தி ‘ஆத்தலைஞ்சு’ போகப்பன்னியிருக்கலாம். சொத்து, வாழ்வு என பலவற்றை இழந்திருக்கலாம். உங்கள் உயிரினும்மேலான உறவுகளைக்கூட இழந்திருப்பீர்கள். உங்கள் இழப்புகளின் விலை பேசப்பட முடி யாதவையாகக் கூட இருக்கலாம். சில விடுதலைப் போராளிகளால் நீங்கள் வதைபட்டுக் கூட இருக்கலாம். இவை எவற்றைச் சொல்லவும், என் எழுத்து வன்மையற்றது என்பதை உணர்கிறேன்.

ஆயினும் நண்பர்களே சொல்வதற்கு ஒன்றே ஒன்று உண்டு. ‘மாவீரர் தியாகம் மெய்யானது’ இதை மேலும் அழுத்திச் சொல்ல மாவீரர், தியாகம், மெய்யானது என்ற மூன்று சொற்களுமே கூட போதாது. ஆயினும் எனக்கு வேறு வழியில்லை. அவ்வாறு தான் சொல்ல முடியும். மாவீரர் தியாகம் மெய்யானது மாத்திரம் அல்ல, அத்தியாகம் நம் இனத்துக்கானது. நம் இனம் தலை நிமிர, தன்மானத்துடன் வாழ, பயமின்றி உலாவ, சுதந்திர மனிதர்கள் என உணர அவர்கள் தம்மைக் கொடையாகக் கொடுத்தார்கள். அவ்வாறு கொடையாகக் கொடுத்தோர். ஒன்றிரண்டு பேர் அல்ல, நூறு இருநூறும் அல்ல, ஆயிரம், இரண்டாயிரம் என்றும் சொல்ல முடியாது. சுமார் நாற்பதினாயிரம் மாவீரர்கள் கொடையாகக் கொடுத்தார்கள்.

இரவி அருணாசலம்

எழுதுவது என்னவெனில்

அந்தச் சில நண்பர்களிடம் கேட்கிறேன், ... அப்போது அவர்களது உன்னத தியாகத்தின் அற்புத விளைவு கண்டு கை தட்டி இரசித்தோமா இல்லையா? அத்தியாக வெப்பத்தில் குளிர் காய்ந்தோமா இல்லையா? அத்தியாகத்தால் கட்டப்பட்ட மாளிகையில் குடியிருந்தோமா இல்லையா? ஒரு சிறிது காலம் தான் என்றாலும், அத்தியாகத்தால் சமைந்த தமிழீழ தேசம் தன்னுள் சுதந்திரமாக குடியிருந்தோமா இல்லையா?

வரலாறு மிக மிக முக்கியம் நண்பர்களே! உங்கள் வசதி கருதி வரலாறை புரட்டி எழுத முடியாது. அபிவிருத்தி அரசியல், இணக்க அரசியல் பேசியோர் (தேவநாயகம், துரையப்பா போன்றோர்) வரலாறு நெடுகிலும் வருவார்கள். ஆனால், வரலாறு அவர்களை தூக்கி, சுழட்டி எறிந்தமையும் நாம் அறிவோம். ஆனால், வரலாறு நெடுகிலும் வாழப் போகின்றவர் மாவீரர் மாத்திரமே. அவர்களுக்கு வணக்கம் சொல்லி எம்வசையை நீக்குவோம், வாருங்கள்.

புலம்பெயர் தேசத்தில் வாழும் சில நண்பர்களே, மாவீரர் நாள் என்பது வெறும் சடங்கு அல்ல. வெறுமனே விளக்கேற்றிவிட்டு வீடு வருவதற்குரியதுமல்ல.

மாவீரர்களின் இலட்சியங்களை முன்னெடுப்பது மாத்திரமல்ல, அஃது ஓர் ஆத்ம தரிசனம். தயதுசெய்து அதனை உணருங்கள், மீதியை பிறகு பேசிக்கொள்வோம்.

கோர்த்து விடும் செய்திகள்

■ தாடி வைத்த பேடி

உலகத் தமிழர் மாநாட்டுக்கு இலண்டன் வந்த இளம் தமிழின உணர்வாளர் ஒருவர் “இந்தியாவின் காலில் யாராவது விழுந்தால் அவனை இந்தியா மிதிக்கும்;யாராவது இந்தியாவின் கழுத்தில் கத்தி வைத்தால் அவனை இந்தியா மதிக்கும்; தமிழன் இந்தியாவின் காலில் விழறான்; இந்தியா தமிழனை மிதிக்கிறான்; சிங்களன் இந்தியாவின் கழுத்தில் கத்தி வைக்கிறான்; சிங்களனை இந்தியா மதிக்கிறது. தமிழன் எப்ப இந்தியாவை எதிர்த்து நிற்கிறானோ அப்போதுதான் தமிழனை இந்தியா மதிக்கும்” இலண்டனில் தாடி வைத்த பேடி ஒன்று ரெம்ப நாளா ‘இந்தியா ஒரு பிராந்திய வல்லரசு அதை நாம் அனுசரிச்சுப் போகவேணும்” என்று கூவிக் கொண்டு திரியுது. அது இதைப் புரிஞ்சு கொள்ள வேணும். பிராந்திய வல்லரசு மட்டுமல்ல உலகப் பெரு வல்லரசான அமெரிக்காவை அனுசரிச்சுப் போக வேண்டும் என்று சே குவேரா ஒரு நாளும் சொன்னதில்லை.

■ தீர்ப்பை மாற்றிய நாட்டாமை

இலங்கைப்போரின் போது ஐநாவின் செயற்பாடுகளைப்பற்றிய உள்ள அறிக்கையில் பான் கீ மூன் குளறுபடிகள் செய்வார் என்று முன் கூட்டியே அறிந்துதான் அந்த அறிக்கையைச் சமர்ப்பிக்க முன்னர் பிபிசிக்கும் நியூயோர்க் ரைம்ஸிற்கும் கசிய விட்டிருக்க வேண்டும். இருந்தும் பான் கீ மூன் தனது சேட்டையைக் காட்டாமல் இருக்கவில்லை. அறிக்கையில் 11 இடங்கள் கறுப்புப் பூசி அழிக்கப்பட்டிருந்தன. இது பன்னாட்டு சமூகத்தின் முகத்தில் பூசப்பட்ட கறுப்பு மை.

■ மாப்பு வைச்சிட்டான்யா ஆப்பு

இலங்கையில் மிக உயரமான கட்டிடத்தை சீனா நிர்மாணிக்கப் போகிறது. இலங்கையின் செய்மதியை சீனா விண்ணில் மிதக்கவிடப்போகிறது. எல்லாம் இந்தியாவை உளவு பார்க்கத்தான். இந்தியாவிற்கு இலங்கையில் சீனா வைக்கும் ஆப்புக்கள் தங்கு தடையின்றித் தொடர்கின்றன. அங்கிள் சாம் சரணம் கச்சாமி

ஊருளவாரி

மலாயன் கபே சுவாமிநாதன் - திருத்தங்கள்

கடந்த ***ஒரு பேப்பர்*** ஒக்டோபர் 19-நொவம்பர் 01, 2012 இதழில் பாவை. ஜெயபாலன் எழுதிய ‘மலாயன் கபே சுவாமிநாதன்’ என்ற தலைப்பிடப்பட்ட கட்டுரையில் யாழ் நகரில் 1949 இல் அமரர் மு.கு.கதிர்வேல் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட மலாயன் கபே உணவகம் பற்றி எழுதியிருந்தார். ஆனால் அக்கட்டுரையில் உரிமையாளர் திரு மு.கு.கதிர்வேல் அவர்கள் பற்றியும் அவரது சேவைகள் பற்றியும் எழுதாததையிட்டு அவரது உறவினர்கள் ஒருபேப்பருடன் தொடர்பு கொண்டு அதிருப்தியை வெளியிட்டதுடன் திரு மு.கு.கதிர்வேல் அவர்கள் பற்றிய மேலதிக விபரங்களையும் தந்திருந்தனர்.

அதனடிப்படையில் திரு.கதிர்வேல் அவர்கள் தொழில் நிமித்தமாக மலேசியாவில் மலேயன் என்ற இடத்தில் பதினைந்து வருடங்களின் பணிபுரிந்தார் என்றும், அந்நாட்டின் நினைவாக மலாயன் கபே என்ற ஒரு வியாபார நிலையத்தை 1949 இல் யாழ்ப்பாணம், பிரதான வீதி, இலக்கம். 32, 36, என்ற முகவரியில் தொடங்கினார்.

தொடர்ந்து பல்வேறு சேவைகளைச் செய்து வரும் காலத்தில் மலாயன் கபேயின் உரிமையாளர் அமரர் திரு.மு.கு.கதிர்வேல் நோய்வாய்ப்பட்டிருந்த போது மலாயன் கபேயை குத்தகைக்கு கொடுக்க வேண்டிய நிலை வந்தது. அதன்படி சுவாமிநாதன் ஐயாவுக்கு ஐந்து வருடங்களும், அது முடிந்த பின்னர் நாகேஸ்வரன் என்ற மற்றொருவருக்கு இன்னுமொரு ஐந்துவருடமும் குத்தகைக்கு கொடுக்கப்பட்டது. திரு.கதிர்வேல் அவர்கள் 1986 ஆவணிமாதம் 25 ஆம் திகதி காலமானார். இன்று மலேயன் கபே மீண்டும் திரு. கதிர்வேல் அவர்களின் ஒரு மகளினால் அதே தரத்துடன் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இலவச திருமண விளம்பர சேவை

வாழ்க்கைத் துணை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக **ஒரு மேப்பர்** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: **info@orumanam.com**

மணமகள் தேவை

1. 36 வயது, 6'1" Accountant born and broughtup in Uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4374
2. 26 வயது, 6'0" student visa doing diploma தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4371
3. 22 வயது, 5'1" student visa Graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4369
4. 37 வயது, 5'9" British citizen self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4367
5. 30 வயது, 5'10" graduate work permit visa working as a manager in hotel தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4355
6. 40 வயது, 5'8" British citizen Engineer divorced working in a super market தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4075
7. 29 வயது, 5'7" Tier 2 work permit visa Graduate working as chef in restaurant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3975
8. 28 வயது, 5'3" Permanent visa in Germany,Working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4295
9. 41 வயது, 5'9" PR in UK,doing own business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4334
10. 39 வயது, 5'9" British citizen, working in offlicence as a manager தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4336
11. 31 வயது, 6'1" PSW visa, working in a food court தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4325
12. 32 வயது, 5'3" Refugee in Switzer land, working in a hotel தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4324
13. 29 வயது, 5'7" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4323
14. 30 வயது, 5'6" student visa in UK, working in food court தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4320
15. 34 வயது, 5'10" PR, working in a company as a director தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4318
16. 28 வயது, 5'7" born and broughtup in uk graduate working as a sales assistant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4317
17. 32 வயது, 6'0" Canadian citizen, Working as a software developer in Canada தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4314
18. 33 வயது, 5'4" Graduate, Asylum seeker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4313
19. 38 வயது, 5'5" British citizen self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4312
20. 49 வயது, 5'5" British citizen self employed separated தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4307
21. 37 வயது, 5'6" British citizen working as a carpenter தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4305
22. 30 வயது, 5'11" working in IT Department in work permit visa in UK தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4298
23. 32 வயது, 5'8" Engineer,PSW visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4295
24. 33 வயது, 6'2" British citizen, working as an Accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4262
25. 42 வயது, 5'10" British citizen, doing Business தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3965
26. 46 வயது, 5'8" PR in UK, Divorced working as an Accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3422
27. 31 வயது, 5'7" British citizen, working as a Finance Manager தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 868
28. 30 வயது, 5'0" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4289
29. 25 வயது, 5'5" PSW visa working as a manager in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4285
30. 34 வயது, 5'6" PSW visa self employed accountant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4282
31. 28 வயது, 5'9" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4279
32. 36 வயது, 5'8" British citizen divorced working as a crew member in British airways தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3663
33. 35 வயது, 5'11" Doctor born and brought up in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 1006
34. 30 வயது, 5'8" born and brought up in uk divorce working in NHS தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4274
35. 28 வயது, 5'10" graduate working in company as a assistant manager in a workpermit visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4273
36. 37 வயது, 5'9" French Citizen Working as a General Manager in a IT Company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4264
37. 27 வயது, 5'8" living in Qatar and working in a workpermit visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4261
38. 24 வயது, 5'2" graduate british citizen working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4256
39. 28 வயது, 5'6" Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4254
40. 27 வயது, 5'5" Permanent residence working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4253
41. 28 வயது, 5'5" British citizen working as a supervisor தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4195
42. 26 வயது, 5'9" PSW visa Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4066
43. 31 வயது, 5'3" German citizen working in a supermarket in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4089
44. 33 வயது, 5'9" British citizen working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3574
45. 42 வயது, 5'3" Permanent residence, working as a Manager தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4249
46. 34 வயது, 6'2" Well connected with brilliant academy, well employed prospective seeks matching bride தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4245

மணமகன் தேவை

1. 33 வயது, 5'2" British citizen divorced working as a IT manager தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4373
2. 23 வயது, 4'10" Permanent residence in uk student தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4362
3. 30 வயது, 5'7" British citizen working in NHS as a Personal assistant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4357
4. 31 வயது, 5'5" Graduate working in a supermarket in a work permit visa தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4102
5. 34 வயது, 5'5" British citizen, Separated தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4331
6. 28 வயது, 5'3" British citizen, working in an IT field தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4338
7. 26 வயது, 5'3" British Citizen, Doctor in USA தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4348
8. 32 வயது, 5'3" British citizen, working as a Tutor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4322
9. 29 வயது, 5'5" Doctor, working in Ireland தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4321
10. 33 வயது, 5'2" working in a factory in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4310
11. 26 வயது, 5'3" living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4304
12. 32 வயது, 5'3" British Citizen, Working in an IT consultant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4303
13. 33 வயது, 5'0" Graduate Divorced living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4302
14. 32 வயது, 5'2" Graduate, living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4291
15. 29 வயது, 5'2" Graduate working as a Teacher in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4281
16. 31 வயது, 5'4" Graduate, Canadian citizen living in canada தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4265
17. 30 வயது, 5'5" working in a supermarket in a workpermit visa in Uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4102
18. 29 வயது, 5'5" graduate PSW visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4287
19. 29 வயது, 5'5" Asylum seeker divorced தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4278
20. 31 வயது, 5'4" Doctor in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4277
21. 30 வயது, 6'0" British citizen working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4267
22. 30 வயது, 5'5" born and brought up in uk Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3316
23. 25 வயது, 5'7" Graduate student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4270
24. 31 வயது, 5'7" Graduate student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4266
25. 26 வயது, 5'3" graduate Permanent visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1243
26. 35 வயது, 5'6" Accountant in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 826
27. 33 வயது, 5'3" Doctor British citizen தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4248
28. 28 வயது, 5'2" British citizen working as an accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4247
29. 37 வயது, 5'7" Working as an Accountant Permanent residence in UK தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4242
30. 33 வயது, 5'4" divorced Permanent residence in sweden தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4234
31. 29 வயது, 5'4" Graduate living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4228
32. 31 வயது, 5'3" living in Switzerland as an asylum seeer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4189
33. 22 வயது, 5'4" Permanent residence in uk graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4183
34. 27 வயது, 5'4" student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4182
35. 23 வயது, 5'3" France citizen graduate working in uk in bank தகுந்த மண மகனைதேடுகின்றனர் Ref: 4161
36. 36 வயது, 5'4" British citizen working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4150
37. 21 வயது, 5'0" British citizen graduate தகுந்தமணமகனைதேடுகின்றனர் Ref: 4142
38. 24 வயது, 5'2" Student visa graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4125
39. 37 வயது, 5'3" Germany Citizen working as a Graphic designer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4132
40. 29 வயது, 5'7" residing in Srilanka graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4119
41. 27 வயது, 5'1" residing in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4118
42. 23 வயது, 5'0" student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4112
43. 22 வயது, 5'3" student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4100
44. 26 வயது, 5'4" permanent residence in uk working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4096
45. 27 வயது, 5'3" Canadian citizen doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 4093
46. 41 வயது, 5'3" British citizen graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4091
47. 36 வயது, 6'0" British Citizen working as a Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4074
48. 42 வயது, 5'2" student visa graduate தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 899
49. 27 வயது, 5'0" graduate working in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4068
50. 41 வயது, 5'2" British citizen working as a Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3362
51. 39 வயது, 5'3" widow with 6 years old son in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4031
52. 24 வயது, 5'7", Born and broughtup in Switzerland, Working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3933
53. 29 வயது, 5'4", இலங்கை, பட்டதாரி, ICMA qualified, Working as an Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 240
54. 29 வயது, 5'2", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, working in finance sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref:3382
55. 49வயது, 5'4" , Living in UK for 2 years, பட்டதாரி, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 656
56. 39 வயது, 5'3" , Born and brought up in UK, Scientist, working in Medical sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3986
57. 28 வயது, 5'2", இலங்கை, பட்டதாரி, Lecturer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref:3996
58. 38 வயது, 5'8",USA citizen, Practicing Lawyer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3997
59. 24 வயது, 5'2", இலங்கை, பட்டதாரி, Lecturer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref:3942
60. 22 வயது, 4'10", இலங்கை, Student தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3513
61. 30 வயது, 5'2", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, working in administrative service தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1160

இணையத்தில்
மேலதிக விபரங்கள்
www.orumanam.com

எண்ணியதென்ன...?

எண்ணியது என்ன?
நீங்கள் எண்ணியது என்ன?
என்னைத் தேட வேண்டாம் என்ற
ஒற்றைத் துண்டுக் குறிப்புடன்
உறவுகள் இழந்து பாசங்கள் துறந்து
தேச நேசம் தேடிப் போன
கணங்களில் நீங்கள் எண்ணியது என்ன?

நோயினில் அம்மா நினைவு வந்ததா?
சோற்றினில் அக்கா நினைவு வந்ததா?
முதற் களத்தினில் அப்பா முகம் தெரிந்ததா?
கள விழுப்புண்ணில்
தலைவன் நெறி தெரிந்ததா?
களம் தந்த வாகை பெருமை தந்ததா?
பலம் தந்த கைகள் உறவு தந்ததா?
விரைந்திங்கு முடியும் எனவெண்ணி னீரா?
இல்லை முடிவோடு
மீழுவோம் எனவெண்ணினீரா?

பாய்ந்தன்று தலை சாய்த்த நண்பன்
முகம் தோன்றி தூக்கம் இழந்தாயா?
தனிமையில் இரவோடு கரைந்தழுதாயா?
இல்லை வெறியோடு
மீண்டெழ உரம் கொண்டாயா?
விழி மூடும் தருணம் உங்கள்
எண்ணங்கள் தான் என்ன?
உறவுகள் இதயம் வருடிச் சென்றனரா?
இல்லை கண்களில் தாய்மண் முன்னின்றதா?
இல்லை உம்மை விதைக்கிறீர்கள்
என்பதை எண்ணிக் கொண்டீரா?
மலர் வைத்து உம்மை மனதேற்றும் நேரம்
மனம் கனக்க கேட்கின்றோம்
எதை எண்ணிச் சென்றீர் எம் செல்வங்களே?

- தமிழ்விழி

கார்த்திகைத் தாகம்...

தண்ணொளிநிலவே - தளராது
எனைதொடரும் உறவே,
கண்மணிகள் கல்லறைகள்
கண்டனையோ யென்மண்மீதினில்,

தழுவிக்கடக்கும் தென்றலே-தலை
தடவிமகிழ்த்தும் தாயே,
விழுந்திட்ட மறவர் சிதைகளை
வணங்கிச் சுமந்திங்கு வருவாயா?

வான்முகிலே, கருணையின் உருவே-என்
விழியின் நிழலே,
விலைபோகாத பொருளே
பொன்னிறமேனியர் விதைத்த நிலத்தில்
பூத்தூவியவர்கள்
முகம் மலர்த்தி வருவாயா?

எழுவான் கதிரே விடியலின் திருவே-எம்
உணர்வின் வடிவே, உயிரின் முதலே
வழுவாதயெம் வீரர்துயிலிடத்தில்
வெம்மையகற்றி மெதுவாய் வருவாயா?

நின்றெதிரில் விழியுருகித்தீபமேற்றிட
அவருறங்கும் கல்லறைகண்டு தொழுதிட
இன்றெமக்கொரு வழியுமில்லையே
எம்விழி நீர்துடைக்கவொரு
நாதியில்லையே

கார்த்திகை காவியங்கள் கண்திறந்தால்-எம்
இதயத்தில் அவர்களிருப்பதை
காட்டி வாருங்கள்.
வீரத்தின் ஓவியங்கள் பேசி நின்றால்-எம்
நீர்த்திரைகள் சொல்லி வாருங்கள்.

- நெற்கொழு தாசன் (யாழில்)

நாலு வார்த்தை எழுதவிடு....

விம்பம் குறும்பட விழா

நவம்பர் 11ஆம் நாள் ஞாயிறு அன்று சட்டன் சிகொம் அரங்கில் *விம்பம்* நடாத்திய *ஏழாவது சர்வதேச தமிழ் குறும்பட விழா* நடந்தேறியது. விம்பம் நடாத்திய முதல் இரண்டு குறும்பட விழாக்களுக்கு சேயோன் சென்றிருந்தான். இடையில் நிகழ்ந்த குறும்பட விழாக்களுக்குச் சேயோன் செல்லாமைக்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும், அரசியல் ஒவ்வாமை அங்கு இருந்தது முக்கிய காரணம். தமிழ்தேசியத்துக்கான எதிர்ப்பு அரசியலாளர்களே விம்பத்தை நிறைத்து நின்றமையால், சேயோன் அங்கிருந்தும் அதிலிருந்தும் விலத்திக் கொண்டான்.

இப்பொழுது *ஓவியர் கிருஷ்ணராஜா* அவர்களது சிறப்பானதும், அன்பானதுமான, அழைப்பின் பேரிலும், மெல்ல மெல்ல இந்த 'வாய்க்காலில்' கால் நனைக்கும் ஆசையிலும் சேயோன் அந்த ஞாயிறு மாலையை தானம் செய்தான். உண்மையில் அற்புதமான ஒரு மாலைப் பொழுது, மந்தாரம் சூழ்ந்தும், ஈரக்காற்று விசிறியும், உதிர்கின்ற இலைகள் அழகுற மலர்ந்தும் அம்மாலைப் பொழுதை இரம்மியமாக்கியது அதற்கு ஒத்தூதியது அக் குறும்பட விழா. நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒரு மாலைப் பொழுதை சேயோன் மிக அர்த்தமுள்ளதாக்கினான்.

அரங்கினுள் நுழைந்தபோது *பத்மநாப ஐயர்* அவர்களது புன்னகையும், *பௌசர்* அவர்களது கைலாகுவும், தலை சிலிர்த்து முகம் சிரித்த *கிருஷ்ணராஜா*வின் இதமான அன்பும், சேயோன் ஐ ஆசுவாசப்படுத்தின. ஆயினும், தமிழ்த் தேசியத்திற்கான எதிர்ப்பு அரசியல்வாதிகள் அரங்கை நிறைத்து நின்றார்கள். மேலும் சொன்னால், குறும்பட விழாவை அவர்களே நடாத்தியது போன்று இருந்தது. விம்பத்தின் செயற்பாடுகள் யாவற்றையும் பொறுப்பேற்கும் கிருஷ்ணராஜாவே இதனையும் பொறுப்பேற்க வேண்டும். முக்கியமாக விம்பத்திலிருந்து 'அரசியல்' களையப்பட வேண்டும். அரசியல் இல்லாது எந்த ஆக்கமும் இல்லை என்பது சேயோனுக்குத் தெரிந்தது தான். எனினும், விம்பத்தின் அரசியல் இதுதானோ என்ற சம்சயமும் சேயோனுக்கு ஏற்படுகின்றது. தமிழ்த் தேசிய எதிர்ப்பு அரசியல் தவிர வேறெந்த மானுட மேன்மை மிக்க அரசியலும் செய்யத் தெரியாத, செய்ய விரும்பாத சிலரின் கூடாரமாகவே விம்பம் ஆகிவிடின் அது விம்பத்திற்கு பெரும்கேடு. அரசியல் போக்கிடன் இல்லாதோர் இதனை பயன்படுத்திவிடுவர்.

"தமிழ்த்தேசிய சக்திகளும் இதில் பங்கேற்கலாம் தானே? யார் தடுப்பார்?" என்ற முணுமுணுப்பு கிருஷ்ணராஜா போன்றோரிடமிருந்து எழுந்தால், அதில் சேயோன் காதை வைக்கிறான். அது சரிதான் என்றாலும், "நாய் கடிக்கும் கவனம்" என்று மட்டை எழுதிவிட்டால், படலையைத் திறந்து யார் உள்ளே வரப்போகிறார்கள்? மெல்ல, எழுதிய அந்த மட்டையை எடுத்து விடுங்களேன் கிருஷ்ணராஜா. உங்கள் அன்புக்கும் பண்புக்கும் அதனைச் செய்யலாம், செய்ய வேண்டும்.

போக குறும்படத் தெரிவில் ஜனநாயகம் என்று எதனையும் பயன்படுத்தாதீர்கள் என்பது சேயோன் இன் தாழ்மையான விண்ணப்பம். மைனா, எந்திரன் ஆகிய திரைப்படங்களில் எது சிறந்த திரைப்படம் என்று இரசிகர்களிடம் வாக்கெடுப்பு நடாத்தினால், எந்திரன் திரைப்படம் அறுதிப் பெரும்பான்மையுடன் சிறந்த திரைப்படம் என்ற விருதைப் பெற்றுவிடும். அது சரிதானா நம் தோழர்களே! மைனாவின் தரத்திற்குப் புரையிடவும் போதாது எந்திரன். அதே ஆபத்து இவ்வகையான குறும்பட, திரைப்பட விழாக்களிலும் நடந்துவிடும் என்று அஞ்சுகிறான் சேயோன்.

சேயோன் மிகமிக ஒன்றிப்போய் தன்னிலை துறந்தது ஒரு படத்தில். *'போராளிக்கு இட்ட பெயர்'* என்பது அக் குறும்படத்தின் தலைப்பு. சேயோன் சிலாகித்த திரைப்படம் தான் யாபேரினது விருப்பத் தெரிவாக இருக்க வேண்டும் என்று எந்தக்கட்டாயமும் இல்லை. ஆனால், கலை என்ற வகையில் அத்துறை போந்த ஆளுமைகள் சிறந்ததை தெரிவு செய்வது தகும் என்று நம்புகிறான் சேயோன்.

விம்பம், வேண்டுமானால் ஒன்றைச் செய்யலாம். துறை போந்த பல ஆளுமைகளைக் கொண்டு, சிறந்த குறும்படங்களைத் தெரிவு செய்யும் அதே சமயம் அதிக பார்வையாளர்களை ஈர்த்த குறும்படம் என்றும் ஒன்றைத் தெரிவு செய்யலாம். அது பாதகமில்லை.

சேயோன் இன் வெப்பியாரம் இங்கு என்னவெனில், *சதாபிரணவன்* என்கின்ற ஓர் அற்புதமான கலைஞன், இங்கு நிராகரிக்கப்படுகின்றான் என்பதே. தரமான, கலாபூர்வமான, அற்புதமான, நிறைய திரைப்படங்களுடன் பரீச்சயமான சேயோன் ஒன்றைச் சொல்கின்றான், கேளுங்கள் "தமிழ்த் திரைக்குக் கணிப்புக்குரிய கலைஞன் வந்து சேர்ந்திருக்கிறான்" சதாபிரணவனின் வேறு சில குறும்படங்களையும் பார்த்துள்ளான் சேயோன். அவை மேற்குறித்த வாக்கியத்தை மெய்ப்பிக்கின்றன. இக்குறும்பட விழாவில் சதாபிரணவனின் இரண்டு குறும்படங்கள் வந்திருந்தன. ஒன்று *'தினப்பயணம்'* மற்றையது *'போராளிக்கு இட்ட பெயர்'* தினப்பயணம் மகிழ்நெறி வகை சார்ந்தது போராளிக்கு இட்ட பெயர் அவலச்சுவை கொண்டது. இரண்டையும் சதாபிரணவன் அபாரம் செய்கிறார். இரண்டு பிரதிகளும் நுண்ணியதான அரசியல் விமர்சனம் செய்கின்றன. போ.இ.பெயர் துரோத அரசியலை அதற்கான விமர்சன நேர்மையுடன் பேசுபொருள் ஆக்கி இருக்கின்றது. அன்றைய பார்வையாளர்களின் தகுதிக்கு மீறிய குறும்படங்களே அவை என்று சேயோன் எண்ணுகின்றான். சதாபிரணவனை சேயோன் கட்டித்தழுவி வாழ்த்தை தெரிவிக்கிறான்.

இவற்றைச் சொல்வதனால் அன்று விருது பெற்ற *நகல்*, குறும்படம் மோசம் என்று அர்த்தமல்ல. அது நல்லதொரு குறும்படம். அது பேசிய மனிதம் மெச்சத்தக்கது. அதனாலேயே அது விருதும் பெற்றது. சேயோன் குறை என்னவெனில் சம்பவங்களும், காட்சிகளும், தொடுக்கப்பட்டனவேயொழிய ஒரு குறும்படமாக சட்டடென நெஞ்சை வெட்டிக் கொல்லவில்லை. சேயோன் இடமிந்து 'அட' என்ற சொல் நெஞ்சினில் கூட ஒலிக்கவில்லை.

விம்பம் செய்யத்தக்க ஒரு நற்காரியம் மாதம் தோறும் சிறந்த திரைப்படங்களை திரையிட்டு பார்வையாளர்களை ஈர்த்துக் கொள்ள வேண்டும் அதேசமயம் சிறந்த குறும்படங்களைத் தயாரிக்கத்தக்கவாறு விம்பம் பயிற்சிப் பட்டறைகளை மேற்கொள்ளலாம். பிரான்ஸில் உள்ளோரிடம் இருக்கும் ஆற்றல் இங்கிலாந்தில் உள்ளோரிடமும் வருவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

எதுஎவ்வாறோ நல்லதொரு குறும்படவிழாவைகண்டான் சேயோன். அடுத்த ஆண்டு நோய் நெடி ஏதும் இல்லாமலும், உயிருடன் இருக்கும் பட்சத்திலும் எட்டாவது குறும்படவிழாவுக்கு வருவதாக சேயோன் தீர்மானம் நிறைவேற்றியுள்ளான். கிருஷ்ணராஜாவிற்கும், விம்பத்தின் ஏனைய நண்பர்களிற்கும் சேயோன் இன் அன்பும், பகிர்வும், வாழ்த்தும் உரித்தாகட்டும்.

- சேயோன்

மண்ணுக்காய் மரணித்த மாவீரரே....!!

மண்ணுக்காய் மரணித்த
மாவீரரே
மண்டியிடுகின்றோம்
உங்கள் முன்
மரணத்தை மகிழ்வாய் ஏற்று
மார்பில் குண்டேந்தி
மாவீரரானீர்
தேசம் என்னும் தேனடைக்காய்
தெருவெங்கும் நீர் தேரிழுத்தீர்

பால்ப் பருவம் மாறாத
பதினாறு வயதிலும்
பட்டினி கிடந்து பதமாய் ஆனீர்
பகைவர் கோட்டைகள்
பாங்குடன் தகர்த்து
பாரினில் எம்மக்கோர்
பாதையானீர்

பள்ளிசெல்லும் பருவத்தில்
பட்டு மெத்தை சுகம் துறந்து
பெண்ணும் ஆணும்
சரிநிகராய்
பெருமை கொள்ளச்
செய்திட்டீர்

பெற்றவள் முகம் மறந்து
உற்றவர் தனைத் துறந்து
உம் தேசம் காப்பதற்காய்
உயிர் தந்த உத்தமரே உம்மை
நாம் எப்படி வணங்கிடுவோம்

பேதைமை கொண்டவர்கள்
பேர் வாங்கப் பணம்
கொடுப்பார்
பொன் கொடுப்பார் பொருள்
கொடுப்பார்
தம்முயிரை உம்மைப்போல்
யார்கொடுப்பார்
தரணியில் ஒருவரை நீ கூறு

பாசறைகள் பல கடந்து
பிணம் தின்னும் பேய் கடந்து
புறங் கண்டு ஓடாது
போர்புரிந்தீர்
புண்ணிய பூமிதனில் யாரு
உம்மையன்றி நாம் போற்றி
வணங்கிட
மூவேளை உணவின்றி
முகிழ்ந்திடும் ஆசையின்றி
மூச்செல்லாம் மண்மீதாய்
முழுதும் கொடுத்தவரே
உம் மேன்மைகள் சொல்லிட
மேதினியில் மொழியில்லை

ஒன்றல்ல இரண்டல்ல மூன்றுமல்ல
ஆயிரம் ஆயிரம் நாமிழந்தோம்
அத்தனை நாடுகள் எம்மை
அழிக்கையில்
எத்தனை பேர் நாம் பாத்திருந்தோம்
எள்ளி நகையாடி எட்டப்பர் சிரிக்கையில்
ஏனென்று கேட்காமல் நாமிருந்தோம்

பெண்கள் குழந்தைகள் பெரியவர் என்று
பேதமின்றி கொன்று குவிக்கையில்
பேடிகள் போல் நாம் காத்திருந்தோம்
அங்கம் இழந்தவர் அங்கு துடிக்கையில்
அந்நியராய் நாம் பார்த்திருந்தோம்

தேசம் அழிந்தது மானம் அழிந்தது
மண்டியிட நாம் காத்திருந்தோம்
மண்ணையும் பெண்ணையும்
மாற்றானிடம் கொடுத்தும்
மானம் இன்றிப் பாத்திருந்தோம்

மன்னிக்க முடியா குற்றங்கள் எமது
மாவீரரே நீர் காத்தருள்வீர்.
உம்மை அன்றி வேறொருவர்
என்றும் எம்மிடை வரமாட்டார்
மறுபிறப்பொன்றில் மண்மீட்க
மீண்டும் ஒருமுறை பிறந்து வந்து
மீட்டிடுவீர் எம் தேசமதை...

- மெசொபொத்தேமியா சுமேரியர் (யாழ்)

கிருஷ்ணா பேன்ஸி & வீடியோ
- இந்தியன் பேன்ஸி ஜீவல்லரி
- பார்ட்டி டெக்கரேசன்
- மணப்பெண் அலங்காரம்
- ஆடியோ - வீடியோ (தமிழ் - மலையாளம்)
- செய்தித்தாள்கள் (தமிழ்-மலையாளம்)
- தென் இந்திய மலர்கள்
- டெய்லரிங், போன்கார்ட்
- பேக்ஸ் - ஜெராக்ஸ்
- விமான டிக்கெட்டு

DHL
WESTERN UNION MONEY TRANSFER
First Flight Couriers Ltd.

November Offer
ஜோதிகா மாலை ஜோடி
£ 100 Only
307, London Road, Croydon, CR0 3PA
Tel: 0208 684 9835 | Fax: 0208 683 0852 | Mob: 07725869630

Driver தேவை

North West, London
பகுதியில் குறிப்பிட்ட
சில மணித்தியாலங்கள்
வேலை செய்யக்கூடிய
டிரைவர் தேவை
தொடர்புகளுக்கு - 020 7372 3576

ஆண் குழந்தையா ? பெண் குழந்தையா ?

சி.மாசிலாமணி

(ஒரு பேப்பருக்காக)

பல்லாயிரம் ஆண்டு காலமாக மனித இனம் தாங்கள் விரும்பும் குழந்தை கிடைக்க வேண்டுமென்பதற்காக எத்தனையோ வழிகளைக் கையாண்டார்கள். அநேகமாக அது தோல்வியிலேயே முடிந்தது. இந்நாட்களில் குழந்தை ஆணா அல்லது பெண்ணா என்பதற்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் எவ்வளவோ குறைந்து விட்டது. ஆனாலும், பெண் பிள்ளைகளை வைத்துக் கொண்டு ஒரு ஆண் குழந்தையாவது ஆணாக வராதா என்று ஏமாந்த நண்பர்களையும் சந்தித்திருக்கிறேன். ஆண் குழந்தைகளை வைத்துக்கொண்டு ஒரு பெண் குழந்தையாவது கிடைக்காதா என்று ஏங்கிய நண்பர்களையும் சந்தித்திருக்கின்றேன். அறிவியல் துறையால் எவ்வளவு தூரத்திற்கு இப்படியான தம்பதியினருக்கு உதவ முடியும் என்பது பற்றிய தகவலே இக்கட்டுரையில் தரப்படுவது.

பிறக்கப்போகும் குழந்தை ஆணா அல்லது பெண்ணா என்பதை முடிவு செய்யும் மருத்துவ நடவடிக்கைகள் பிரித்தானியா உட்பட பல நாடுகளில் சட்ட விரோத நடவடிக்கைகள். இதில் நியாயம் இல்லாமல் இல்லை. உலகின் ஆண்-பெண் சமநிலையை குழிதோண்டிப் புதைக்கும் நிலை ஏற்பட்டு விடும் அல்லவா?

கருத் தரித்தல் என்பது ஒரு பெண்ணின் கருவூலத்துடன் அல்லது முட்டையுடன் ஆணின் விந்தணு இணைவதால் ஏற்படுவது. ஒரு மனிதரின் சாதாரண உயிர்க் கலத்தில் அல்லது உயிரணுவில் 23 சோடி குறோமசோம்ஸ் இருக்கும். ஆனால் கருத்தரிப்புடன் தொடர்புடைய இந்த விந்தணுக்களிலும் முட்டைகளிலும் தலா 23 குறோமசோம்களே இருக்கும். அவை இணைந்தால்தான் 23 சோடியாக மாறும்.

பிறக்கப்போகும் குழந்தை ஆணா அல்லது பெண்ணா என்பதை முடிவு செய்யும் மருத்துவ நடவடிக்கைகள் பிரித்தானியா உட்பட பல நாடுகளில் சட்ட விரோத நடவடிக்கைகள்.

ஒரு முறை வெளிவரும் விந்துக்குள் ஆயிரக் கணக்கில் விந்தணுக்கள் அடங்கும். அதே சமயம் மாதத்தில் ஒன்று அல்லது ஒரு சில முட்டைகள்தான் பெண்ணின் சூலகச் சுரப்பிகள் இரண்டாலும் சுரக்கப்படுகின்றது.

கருவூல முட்டை குழந்தை ஆணா பெண்ணா என்பதை முடிவு செய்வதில்லை. விந்தணுக்களே குழந்தை ஆணா பெண்ணா என்பதை முடிவு செய்கின்றன. ஒரு முறை வெளிவரும் விந்துக்குள் சம அளவில் எக்ஸ் குறோமசோம், வை குறோமசோம் ஆகிய இரண்டு வகை விந்தணுக்களும் கலந்திருக்கும். இதில் எக்ஸ் குறோமசோம் முட்டையுடன் இணைந்தால் பிறப்பது பெண், வை குறோமசோம் முட்டையுடன் இணைந்தால் பிறப்பது ஆண். முட்டையில் எப்போதும் இருப்பது எக்ஸ் குறோமசோம் மட்டுமே. இதையேதிரும்பச் சொல்வதானால் எக்ஸ்

எக்ஸ் என்றால் பெண். எக்ஸ்வை என்றால் ஆண். முட்டைக்கும் விந்தணுவுக்கும் உள்ள பண்பு வேறுபாடுகளை வைத்தே பிறக்கபபோகும் குழந்தையின் பால் என்னவாக இருக்க வேண்டும் என்பதை மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கும் நடவடிக்கையை எடுக்கிறார்கள். இது நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றுத் தராவிட்டாலும் ஐம்பதுக்கு ஐம்பதுக்கு என்றிருப்பதை தொண்ணூறுக்கு மேற்பட்ட விகிதம்வரை இவர்களால் திடப்படுத்த முடியும்.

விந்தணுக்களை ஒப்பிட்டுப் பார்த்தால் எடை குறைந்தவையும் வேகமாக நகரும் தன்மை கொண்டவையும் வை விந்தணுக்கள். உடன் வெளி வந்த விந்துவை பாதுகாப்புத் திரவத்தையும் சேர்த்து ஒரு பரிசோதனைக் குழாயுள் அரைமணி நேரம் விட்டால் எடை குறைந்த வேகமான வை விந்தணுக்கள் மேலேவர எடை கூடிய எக்ஸ் அணுக்கள் கீழே சென்று எந்தப் பால் தேவையோ அதைத் தெரிவு செய்ய உதவும். மத்தியிலிருந்து விலகி ஓடும் முறையும் இத்தேவைக்காகக் கையாளப்படுகிறது. விந்தணு சரியாகத் தெரிவுசெய்யப் படுவதற்கு இந்த முறை கையாளப் படுகிறது.

இன்னுமொரு முறை உள்ளது. பெண் குழந்தை வேண்டுவோருக்குப் பயன் படும். முட்டை எப்போ வெளி வரும் என்பதை நுட்பமாகக் கணக்கிட மருத்துவர்களால் முடியும். அதை துல்லியமாக சமிக்கை தரவல்ல கருவிகூட உண்டு. வை விந்தணு விரைவில் இறந்துவிடும். வெளி வரும் முட்டை 24 மணிநேரம் உயிர் வாழும். மருத்துவ ஆலோசனைப்படி உரிய நேரத்தில் தம்பதியினர் உடலுறவு வைத்தால் அதாவது முட்டை உதிர இரண்டு நாட்களுக்கு முன்பு, அப்போ உயிருடன் எஞ்சி எக்ஸ் விந்தணு மட்டுமே இருக்கும். இது பெண் குழந்தையை உறுதி செய்யும் வழிகளில் ஒன்று.

இக்குழந்தையே ஆணாக வரவேண்டுமென்று விரும்பினால் முட்டை வெளிவரும் சமயத்தை கணக்கிட்டு உடலுறவு வைத்தால் வேகமாக நீந்தும் வை குறோமோசோம் வேகமாகச் சென்று அங்கு காத்திருக்கும் முட்டையை கருவாக்கி விடும்.

மருத்துவர்கள் ஆய்வுகூடத்தில் கருவூல முட்டைகளை சேகரித்து தகப்பனிடம் பெற்ற விந்தணுக்களைப் பயன் படுத்தி ஆய்வுகூடத்தில் கருத்தரிக்கச் செய்து மூன்று நாட்களில் அது எட்டு உயிர்கலய கருவாக இருக்கும் போது நிபுணத்துவ விஞ்ஞானிகளால் பாலும் அவற்றின் நலனும் சிறந்த கரு ஒன்றை தாயின் கருப் பையில் வளர விடுார்கள். சாதரண குழந்தை போலவே அக்குழந்தையும் கருப்பையில் வளரும். பிறக்கும். ஆனால் பெற்றோர் தேர்வுக்கமைய.

எங்களுக்காகவும் தீபங்கள் ஏற்றுங்கள்....!!!

எங்கே உங்கள் இதயங்களை
கொஞ்சம் திறவுங்கள்
கல்லறைகளில்
கண்மூடித்துயிலும் உங்கள்
பிள்ளைகள் வந்துள்ளோம்.

அட கல்லறைகள்
இல்லையென்றால் என்ன...?
உங்களின் இதயங்கள்
தானே நாங்கள்..
துயிலும் துயிலும் இல்லங்கள்.
துயிலும் இல்லங்களை
இடித்த போது
எங்களுக்கு வலிக்கவே இல்லை.
என் இனமே
என் சனமே நீ துடித்தாய்.
அதை நாங்கள் மட்டுமே
அறிவோம்.

(எங்கே உங்கள் இதயங்களை)

தூரங்கள் அதிகமானாலும்
சொந்தங்கள் விட்டுப்போகாது.
துயரங்கள் அதிகமானாலும்
பாசங்கள் குறைந்து போகாது.
நீங்கள் வந்து எங்கள்
கல்லறைகளில்
விளக்கேற்றா விட்டாலும்
உங்கள் விழிகளில்
வழிந்தோடும் உதிரம் சொல்லும்
உங்களின் பாசத்தை...
அட எதற்கு அழுகிறீர்கள்?
நாங்கள்
இங்கேதான் இருக்கிறோம்.
எங்களின் தாகம் அடங்க
தண்ணீரும் தேவையில்லை
உங்கள் கண்ணீரும்
தேவையில்லை.
நாங்கள் செந்நீரை விட்டது
உங்களின் கண்ணீரை துடைக்க....

(எங்கே உங்கள் இதயங்களை)

இடித்து தூழாக்கிய துயிலும்
இல்லங்கள் வேண்டுமானால்
காணாமல் போயிருக்கலாம்.
நாங்கள் இப்போதும்
தாய்மண்ணில் தான்
துயிலுகிறோம்.
நாங்கள் எங்கேயும் போகவில்லை.
இங்கேதான் எங்களின்
வாழ்வும் சாவும்.
மூசிவரும் வாடைக்கற்றில்
எங்களின் மூச்சிருக்கும்.
ஆடிவரும் கடலலையில்
எங்களின் முகம் தெரியும்.
பூத்திருக்கும் கார்த்திகை பூவில்
எங்களின் புன்னகை இருக்கும்.
வெண்மனல் வெளியிலே எங்களின்
கால்தடங்கள் இருக்கும்.
நாங்கள் இங்கேதான் இருக்கிறோம்.
இங்கேதான் எங்களின் வாழ்வும் சாவும்.

(எங்கே உங்கள்)

விடுதலையை நேசித்தவர்களின்
தியாகங்கள் வீணாய்ப்போனதில்லை.
விலைகள் கொடுக்காமல் எவருக்கும்
சுதந்திரம் சும்மா கிடைத்ததும் இல்லை.
நங்கள் விடுதலையை
நேசித்தோம், உயிராய் சுவாசித்தோம்
கொஞ்சம் அதிகமாகவே
விலைகளும் கொடுத்தோம்.
நாங்கள் சிந்திய குருதியில்
கறைகள் இல்லை.
ஆதலால் எங்களின் விடியல்
தொலைவினில் இல்லை.
நாங்கள் செய்த தியாகங்களில்
குறையொன்றும் இல்லை.
ஆதலால் எங்களின் விடுதலையும்
தொலைவினில் இல்லை.
கல்லறைகளில் கண்மூடித் துயிலுகிறோம்.
நிம்மதியான தூக்கமும் இல்லை.
இது நிரந்தரமான தூக்கமும் இல்லை.
காலம் ஒரு நாள் வாராமல் போகாதா?
கண்ட கனவுகள் பலிக்காமல் போகாதா?
எங்களுக்காக பாடல்கள் பாடுங்கள்...
எங்களுக்காக கவிதைகள் எழுதுங்கள்..
எங்களுக்காக பூக்கள்
கொண்டுவாருங்கள்
எங்களுக்காக தீபங்கள் ஏற்றுங்கள்...
தனித்தனியாக இல்லை...
ஒன்றாக... ஒற்றுமையாக....
தமிழரின் தாகம் தமிழீழ தாயகம் என்று
அடிமன ஆழத்தில் இருந்து சொல்லுங்கள்..
அது போதும் எங்களுக்கு...

கல்லறைகளில் கண்மூடித் துயிலுகிறோம்.
நிம்மதியான தூக்கமும் இல்லை.
இது நிரந்தரமான தூக்கமும் இல்லை.
எங்கே உங்கள் இதயங்களை கொஞ்சம்
திறவுங்கள்–கல்லறைகளில்
கண்மூடித்துயிலும் உங்கள் பிள்ளைகள்
வந்துள்ளோம்.

தமிழ்ப்பொடியன்

ESOL with Citizenship Test £ 145

- ஆங்கில எழுத்து, வாசிப்பு அறிவு அவசியம் இல்லை
- Certificates within 6 days / சான்றிதழ்
- for British Citizenship / பிரித்தானியா பிராஜாவுரிமை
- for Permanent Residency / நிரந்தர வதிவிடவுரிமை

Personal Licence £225*

- (மதுபானம் விற்பதற்கான) ID எடுத்துத் தரப்படும்

Tuition classes for 11+, GCSE & A' Level

தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
* Croydon * Eastham * Coventry
Tel: 020 3239 2187
0740 287 1921

பராமரிப்பாளர்கள் தேவை

வயோதிபப் பெண்ணைப் பராமரிப்பதற்கு இரண்டு பெண்கள் தேவை (பகல் / இரவு)

Student Visa, Benefit இருக்கும் ஆட்களுக்கும், விசா இல்லாதவர்களுக்கும் வேலை இல்லை. இலங்கையைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

விசா உள்ளவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்

மேலதிக தொடர்புகளுக்கு : 07932790650

Lycamobile

Call the world for less



Sri Lanka

Monthly value pack

4p /min

Landline & Mobile

Get 500 minutes to Sri Lanka Landline & Mobile for just £20 with a monthly value pack

To buy 'the 500 minutes monthly value pack' **DIAL *139*200500#**
Or **txt 200500 to 3535**

Rates are calculated based on full usage of minutes to Sri Lanka during the validity period and subscription to the monthly Value Pack

UNLIMITED FREE CALLS & TEXTS from Lycamobile to Lycamobile

For your FREE Lycamobile SIM visit www.lycamobile.co.uk or call 020 7132 0322

Buy and top up online or in over 115,000 stores

Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears

Monthly Value Pack 250, 500 or 1,000 minutes to internal mobiles or landlines for just a one-off £20, taken from your top-up balance. How many minutes you get depends on where you call – it's up to you. offer valid until 30/11/2012.
Customers with a minimum balance of 20p can enjoy free and unlimited calls and texts from Lycamobile UK to Lycamobile UK. Offer is valid until 30/11/2012

Lyca mobile
Call the world for less

Southall Travel

Redefining Travel

Why travel with Southall Travel?

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன் **சவுத்ஹோல் டிராவல்** மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

Call Centre open 24 hours **0844 855 8017**

ABTA 80626

Think Travel, Think Southall Travel

www.southalltravel.co.uk

5553 ATOL PROTECTED